# சித்திரக் கலை

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 9

**(2018 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

**அழகியற் கல்வித்துறை**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**இலங்கை**
**www.nie.lk**
**info@nie.lk**

அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**சித்திரக் கலை**
தரம் - 9
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2017

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

**அழகியற் கல்வித்துறை**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

அச்சுப்பதிப்பு : செனவின் தனியார் நிறுவனம்
இல.35/3, கேரகல வீதி, ஹெலும்மஹர, தெல்கொடை.



***‘‘புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம் நாட்டுக்கும் முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்’’***

**கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி**

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில் வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான பல்வேறு மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக்கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்கு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

உலகில் மிக வேகமாக மாறி வரும் சுற்றுச்சூழல் மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதற்கும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதற்கும் ஓர் அரசாக நாம் செயற்படுவது ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளோம் என்பதனாலேயாகும். நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியது அதனாலேயே ஆகும். இதற்காக இந்நூலைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகவும் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக் கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் என்பனவே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்த போதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே கல்வியின் மிகவும் கூடிய பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் கூட இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.

**அகில விராஜ் காரியவசம்**
*கல்வி அமைச்சர்*

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 8 வகுப்புக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிட மிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**கலாநிதி ஜயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

2015 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்கு இணங்க ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளின் அச்சிடல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மேற்கொள்கின்றது. இதற்கிணங்க தரம் 6,10 போன்றவற்றிக்கு 2015 ஆம் ஆண்டும், தரம் 1,7,11 போன்றவற்றிக்கு 2016 ஆம் ஆண்டும் 2,8 போன்றவற்றிற்கு 2017 ஆம் ஆண்டும் ஆசிரியர் வழிகாட்டிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. இதனுடன் இணைந்ததாக 2018 இல் புதிய பாடத்திட்டத்திற்கிணங்க ஆக்கப்பட்ட தரம் 3,9 களுக்குரிய இவ்வாசிரயர் அரிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கிடைக்கின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவு விருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந்நோக்கத்தை அடைவதற்கு இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுறைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப்பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பனவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ்வெதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ்வறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

**ஐ.எம்.கே.பீ. இலங்கசிங்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
“இசுருபாய”
பத்தரமுல்ல
2017.01.02

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காக பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன பூகோள நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத் துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாக பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன் படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாட நிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத் தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி. வண. மாம்புல்கொட சுமணரதன தேரர்**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அங்கீகாரமும்**
- கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்

**பாடஇணைப்பாக்கம்**
- திரு. எம்.ஜீ.ஏ.கே.யூ. பண்டார, சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திரு. ஞானசிரி பீ. கமகே, சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை

**பாட நிபுணர்கள்.**
- கலாநிதி டி. சனாதனன், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் ரம்யவர்தன பொடிநிலமே - பேராசிரியர், அழகியல் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் சுசிரிபால மாலிம்பட, பேராசிரியர் (ஓய்வுபெற்ற), அழகியல் பல்கலைக்கழகம்

**உள்வாரி வளப்பங்களிப்பு**
- திரு. எம்.ஜீ.ஏ.கே.யூ. பண்டார, சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திரு. ஞானசிரி பீ. கமகே, சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திரு. ரவீந்திர தேனுவர, விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திருமதி. சமரி தபஸ்வரகே, உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திருமதி. எம்.பீ. பிரேமதிலக்க, உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை

**வெளிவாரி வளப்பங்களிப்பு**
- செல்வி. ஸ்ரீமதி ஏகநாயக்க, விரிவுரையாளர் (வெளிவாரி), களனி பல்கலைக்கழகம்
- திருமதி. எல்.எஸ். வேஹெல்ல, ஆசிரிய ஆலோசகர் (ஓய்வுபெற்ற)
- திருமதி. எச்.ஏ. சஞ்ஜீவி மஞ்ஜரி, ஆசிரிய ஆலோசகர்,
  வலயக் கல்வி அலுவலகம், கொழும்பு
- திருமதி. எம்.ஆர். ஜெபராஜா - இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
- திரு. ச. மனோகரன், ஆசிரியர், விபுலானந்தா கல்லூரி, வவுனியா
- திரு எச்.எம்.எஸ்.பீ.எச். பண்டார, சித்திரக்கலை ஆசிரியர்,
  புனித சில்வெஸ்டர் வித்தியாலயம், கண்டி
- திரு. தீப்த ஸ்ரீ உதயங்க. சித்திரக்கலை ஆசிரியர், றோயல் கல்லூரி, மொனராகலை
- திரு. சம்பத் சுரங்க கோரளகே, சித்திரக்கலை ஆசிரியர், வில்தெர ம.வி. ஹோமாகம

**மொழிச் செம்மையாக்கம்:**
- திரு. எம்.எச்.எம். யாகூத், ஓய்வுபெற்ற செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்
- திருமதி. யூ. விவேகானந்தன், ஓய்வுபெற்ற ஆசிரியர், ஹட்டன்

**மொழிச் செம்மையாக்கம்:**
- திரு. த. முத்துக்குமாரசுவாமி, ஆலோசகர் (தமிழ்மொழி)
- திரு. ச. துணைசிங், சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

**அட்டைப்படம்**
- திரு. ரவீந்திர தேனுவர, விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை

**கணினி வடிவமைப்பு**
- திருமதி. எப்.ஏ.எப். நிஸ்மியா, தேசிய கல்வி நிறுவகம்

**நானாவித உதவிகள்**
- செல்வி. தீபா ஷிரோமினி, அழகியற் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்
- திரு. பிரேமரத்ன பெரேரா, அழகியற் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

# அறிமுகம்

வளர்ந்து வரும் நாகரிக வளர்ச்சிக்கேற்ப சமூகத்திலும் பல மாற்றங்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அதற்கிணங்க பாடசாலை கலைத்திட்டத்திலும் மாற்றியமைக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். அந்த வகையில் தற்கால தேவைகளிற்கமைய பாடசாலை கலைத்திட்டமானது அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது என்பது கல்வியலாளர்களின் ஒருமித்த கருத்தாகும்.

இசைக்கலையானது நடைமுறையில் உள்ள பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெறுகின்றது. இசையைக் கற்பதால் மாணவரிடையே உள்ளத்தில் காணப்படும் இரசித்தல் திறன், ஆக்கத்திறன், விமர்சிக்கும் திறன் என்பன வெளிக்கொணரப்படுவதுடன் ஒருவரின் சமநிலை ஆளுமை வளர்ச்சிக்கு இத்திறன்கள் யாவும் விருத்தி செய்யப்படல் அவசியமாகும்.

அன்பு, பக்தி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு பிறரை மதித்தல் சகோதரத்துவம் பிறநாட்டு இசைகளையும், மக்களின் உணர்வுகளையும் மதிக்கும் பண்பு போன்ற நற்குணங்களைக் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதில் இசை முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

இரசித்தல் ஆக்கத்திறன், செயன்முறை, அறிமுறை, கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் கற்றற் பேறு அடைவதற்கான கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு அவற்றிற்கமைய இக்கலைத்திட்டத்தின் வடிவமைப்பிற்கமைய 2018 ஆம் ஆண்டு தரம் 9 இற்கான கர்நாடக சங்கீத புதிய கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

மாணவர்கள் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்களிற்கு ஏற்றவாறு கற்றற்பேற்றை அடைவதற்காக மாணவர்களிடம் உள்ள இயற்கையாக உள்ள திறன்களை உபயோகித்து கற்றல் கற்பித்தல் அணுகுமுறையும் செயற்பாடுகளும் அமையும் முறை, மிகவும் முக்கியமானதாகும்.

**பணிப்பாளர்**
அழகியற் கல்வித்துறை
தேசியகல்வி நிறுவகம்
மஹரகம.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

இந்த ஆசிரியர் வழிகாட்டி 2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 09 ஆந் தர சித்திரக் கலைப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை வெற்றிகரமாக நடத்துவதற்குத் துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் வழிகாட்டி உங்களுக்கு வழங்கப்பட்டுகின்றது. இதனைப் பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனஞ் செலுத்துவது பயனுடையதாகும்.

- பாடசாலையின் ஆண்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைய நேர முகாமைத்துவத்தை செய்து கொள்ளல்.
- பிரதானமான 7 தேர்ச்சிகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்தின் 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயற்பாடொன்று தரப்பட்டுள்ளது. அந்தந்தத் தேர்ச்சி மட்டத்துக்கு அமைவாக, விதந்துரைக்கப்பட்டுள்ள தலைப்புக்களை அல்லது வேறு தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிட்டு அமைத்துக் கொள்ளல்.
- 6.0 ஆம் 7.0 ஆம் தேர்ச்சிகளுக்காக செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ள போதிலும், பொருத்தமான ஆக்கபூர்வமான முறையியல்களைப் பயன்படுத்தி குறித்த பாடவிடயங்களை அடையத்தக்கவாறு செயற்பாடுகளை மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.
- விதந்துரைக்கப்பட்டுள்ள மற்றும் தாமே தயாரித்த செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவது பயனுடையதாகும்.

  I. அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்னிலையொன்றின் மூலம் களியூட்டத்தக்கவாறு பாடத்தைத் தொடங்குவதன் மூலம் மாணவரைப் பாடத்தின்பால் ஈர்த்தல், முன்னறிவை வினவியறிதல், ஊக்கமளித்தல் ஆகியன மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
  II. மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு, ஆக்கபூர்வமாக கற்றல் கற்பித்தல் முறைகளைக் கையாண்டு, பின்னூட்டலும் முன்னூட்டலும் வழங்கி, செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
  III. முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீட்டாய்வு, பின்தொடர் வேலைகள், ஒப்படைத்தல் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்தப் பாடத்தை நிறைவு செய்தல்.

- இந்த ஆசிரியர் வழிகாட்டி ஒரு வழிகாட்டல் மாத்திரமேயாகும். பாடம் சார்ந்த நூல்கள் இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுவதன் மூலம் ஆசிரியரும், மாணவரும் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை மேலும் செம்மையாக்கிக் கொள்ளலாம்.
- அறிமுகம் செய்யப்பட்டுள்ள 7 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 7 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

பின்வரும் அட்டவணைக்கேற்ப செயற்பாடுகளை மூன்று தவணைகளாகப் பிரிக்கவும்.

| 1 தவணை | | | | 2 தவணை | | | | 3 தவணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் | | | | செயற்பாட்டு இலக்கம் | | | | செயற்பாட்டு இலக்கம் | |
| 1.1.1 | 1.1.2 | 1.2.1 | 2.1.1 | 1.1.3 | 1.1.4 | 1.2.2 | 1.2.3 | 1.2.4 | 1.2.5 |
| 2.1.2 | 3.1.1 | 3.1.2 | 4.1.1 | 2.1.3 | 2.2.1 | 2.2.2 | 3.2.1 | 1.2.6 | 1.3.1 |
| 5.1.1 | 6.1.1 | 6.2.1 | 7.1.1 | 3.2.2 | 3.3.1 | 4.1.2 | 4.2.1 | 2.2.3 | 2.2.4 |
| 7.1.2 | | | | 5.2.1 | 6.3.1 | 6.4.1 | 7.1.3 | 3.3.2 | 3.3.3 |
| | | | | | | | | 4.3.1 | 5.3.1 |
| | | | | | | | | 6.5.1 | 6.6.1 |
| | | | | | | | | 7.2.1 | 7.2.2 |

# உள்ளடக்கம்

-


| | பக்கம் |
|---|---|
| கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி | iii |
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி | v |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | vi |
| கலைத்திட்டக்குழு | vii |
| அறிமுகம் | viii |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | ix |
| பாடத்திட்டம் | xi-xxv |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | 1-103 |

# பாடத்திட்டம்

# 1.0 அறிமுகம்

பாடசாலை முறைமையில் நடைமுறைப்படுத்தப்படும் ஒட்டுமொத்தக் கலைத்திட்டத்தில் "சித்திரக் கலை" பாடம் சிறப்பான ஒன்றாகும். படைப்பாக்கமும், இரசனையும் முதன்மையிடம் பெறும் சித்திரக் கலைப்பாடத்தினூடாக ஆற்றப்படும் சமூகப் பணி மிக முக்கியமானதாகும். சித்திரக் கலையினூடாக தனியாளிடத்தே சமனிலையான ஆளுமை விருத்தியடையும்.

சித்திரக் கலைப் பாடத்திட்டத்தில் பாடம் சார்ந்த ஏழு தேர்ச்சிகள் மூலம் பிள்ளையிடத்தே அறிவு, திறன், மனப்பாங்குகளையும், நற்பழக்கங்களையும் விருத்தி செய்வது குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. பாடம் சார்ந்த ஐந்து தேர்ச்சிகளும், கலை வரலாறு மற்றும் இரசனைக்காக இரண்டு தேர்ச்சிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய அந்தந்தத் தரத்தில் வயது மட்டத்துக்குப் பொருத்தமானவாறு தேர்ச்சி மட்டங்களுக்கு அமைவாக விடய உள்ளடக்கம் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.



பாடத்திட்ட மறுசீரமைப்பின் போது பின்வரும் விடயங்களிற் கவனஞ் செலுத்தப்பட்டது.

- சர்வதேச சித்திரக் கலையின் புதிய போக்குகள்.
- இத்துறையில் வெளியிடப்பட்டுள்ள புதிய கருத்துக்கள்.
- பாடசாலையில் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயன்முறை தொடர்பாக நடத்தப்பட்ட அவதானிப்புக்களும் ஆய்வுகளும்.

முதலாவது தேர்ச்சியின் கீழ் அடங்கியுள்ள மனித உருவங்களும், விலங்கு உருவங்களும் வரைவதற்குரிய அடிப்படைப் பயிற்சிக்காகப் புதிய தேர்ச்சி மட்டம் உருவாக்கப்பட்டது. இரண்டாவது தேர்ச்சியின் கீழ் அடங்கியுள்ள இயற்கைச் சூழலிலும், மனிதனாலாக்கப்பட்ட சூழலிலும் உள்ள அடிப்படையான தளவுருவங்கள், வடிவங்களுக்கான தேர்ச்சி மட்டம் உருவாக்கப்பட்டது. புதிய தொழில்நுட்ப மற்றும் வேலை உலகுக்குத் தேவையான அறிவு திறன்களை அடையத்தக்க வகையில் மூன்றாம் நான்காம் தேர்ச்சிகளின் கீழ் தேர்ச்சி மட்டங்கள் உருவாக்கப்பட்டன. மாதிரியுருக்கள் ஆக்குவதன் மூலம் முப்பரிமாண இயல்பு பற்றிய எண்ணக்கருவை மேலும் தெளிவாக முன்வைப்பதற்காக ஐந்தாவது தேர்ச்சியின் கீழ் தேர்ச்சி மட்டங்கள் உருவாக்கப்பட்டன. கலை வரலாறு மற்றும் இரசனை தொடர்பாக அறிவை வழங்குவதற்காகவும் பல்வேறு படைப்புக்களைக் கற்றல் மூலம் பெற்ற அறிவைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பமளிப்பதற்காகவும் ஆறாம், ஏழாம் தேர்ச்சிகளின் கீழ் தேர்ச்சி மட்டங்கள் உருவாக்கப்பட்டன.

# தேசிய பொது இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல்,கணித்தல் ,ஒழுங்குமுறையாக அளத்தல்.

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள்,எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. ‘‘கற்றலுக்குக் கற்றல்’’ தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

# சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்கள்.

1. சுற்றாடல் சார்ந்த நயப்பாற்றலை வளர்த்தல்.
2. ஆக்கச் சிந்தனையையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல்.
3. வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல்.
4. எமது நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பண்பாட்டுப் பெறுமானங்களின் தனித்துவத்தை இனங்காணுதலும் மதித்தலும்
5. திறனாய்வு ஆற்றலை வளர்த்தல்.
6. எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளத்தக்கவாறான ஆற்றல்களைக் கொண்ட சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல்.

## 5.0 தேசிய இலக்குகள் மற்றும் சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்களுக்கிடையிலான தொடர்பு

**தேசிய இலக்குகள்** — **சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்கள்**

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

↔ 4. சுதேச மற்றும் வெளிநாட்டு கலைகளின் தனித்துவத்தை இனங்காணலும் மதித்தலும்

II. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

↔ 4. சுதேச மற்றும் வெளிநாட்டு கலைகளின் தனித்துவத்தை இனங்காணலும் மதித்தலும்

↔ 6. எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளத்தக்கவாறான ஆற்றல்களைக் கொண்ட சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

↔ 1. சூழலைத் துணையாகக் கொண்டு இரசிப்புத் திறனை விருத்தி செய்தல்

↔ 2. ஆக்கியற் சிந்தனையையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல்

↔ 3. வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும்

↔ 1. சூழலைத் துணையாகக் கொண்டு இரசிப்புத் திறனை விருத்தி செய்தல்

↔ 3. வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல்.

| தேசிய இலக்குகள் | சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்கள் |
|---|---|
| V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல். | 1. சூழலைத் துணையாகக் கொண்டு இரசிப்புத் திறனை விருத்தி செய்தல்<br>2. ஆக்கியற் சிந்தனையையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல்<br>3. வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல்.<br>5. திறனாய்வு ஆற்றலை வளர்த்தல்.<br>6. எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளத்தக்கவாறான ஆற்றல்களைக் கொண்ட சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல். |
| VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல். | 3. வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல். |
| VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல். | 5. திறனாய்வு ஆற்றலை வளர்த்தல்.<br>6. எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளத்தக்கவாறான ஆற்றல்களைக் கொண்ட சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல். |
| VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல். | 3. வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல்.<br>4. சுதேச மற்றும் வெளிநாட்டு கலைகளின் தனித்துவத்தை இனங்காணலும் மதித்தலும் |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 சுற்றாடல் சார்ந்த கருப்பொருட் களின் கீழ் ஓவியங்களை வரைவார். | 1.1 மனித, விலங்கு உருவங்களைக் இரேகைகளால் வரைவார். | • மனித உடல் நிலைகளை கற்றறிதல்.<br>• விலங்கு உடல்நிலைகளை ஷக் கற்றறிதல். | • மனித, விலங்கு உடல் நிலைகளை கற்றறிந்து பல்வேறுபட்ட தொனிப் பொருட்களின் கீழ் ஓவியங்களை வரைவார். | 20 |
| | 1.2 சூழல், சமூகம், மதம் சார்ந்த மற்றும் வரலாற்றுத் தொனிப் பொருள்களில் ஓவியங்களை வரைவார். | • ஓவியம் வரைய வேண்டிய கோட்பாட்டு விதிகள்<br>– ஒருங்கிணைப்பு<br>– பரிமாணம்<br>– தூரதரிசனம் (Perspective)<br>– முப்பரிமாணம்<br>– நுட்பத்திறன் - Techinque | • பரந்த தொனிப்பொருட்களின் கீழ் ஓவியங்களை வரைவார். | |
| | 1.3 பல்வேறுபட்ட பண்பாடுகளுக் குரிய மதஸ்தலங்களின் ஓவியங்களை கற்று, அவற்றில் காணப்படும் விசேட கலையம் சங்களைக்கொண்டு ஓவியங் களை வரைவார். | • பல்வேறுபட்ட பண்பாடுகளுக் குரிய மதஸ்தலங்கள்<br>– பன்சல்<br>– ஆலயம் (கோயில்)<br>– பள்ளிவவாசல்<br>– கத்தோலிக்க தேவாலயம் | • பலதரப்பட்ட மதஸ்தானங் களிலுள்ள ஓவியங்களைக் கற்றறிந்து சுயமான ஓவிய நிர்மாணிப்புகளில் ஈடுபடுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0 சுற்றாடலில் காணப்படும் பொருட்களை ஒருங்கிணைத்து ஓவியங்களை வரைவார். | 2.1 இயற்கை மற்றும் செயற்கைப் பொருட்களை இரேகைகளால் வரைவார்.<br><br>2.2 இயற்கை மற்றும் செயற்கைப் பொருட்களை ஒருங்கிணைத்து ஓவியங்களை வரைவார். | • இரேகைகளைக் கற்றல்<br>– மரஞ் செடி, கொடிகள்<br>– கேத்திரகணித வடிவ மைப்பு கொண்டுள்ள பொருட்கள்<br><br>• இயற்கை மற்றும் செயற்கைப் பொருட்கள்<br>– மரஞ்செடி, கொடிகள்<br>– கேத்திரகணித வடிவ முடைய செயற்கைப் பொருட்கள்<br>• ஒருங்கிணைக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாட்டு விதிகள்<br>– பிரமாணம்<br>– முப்பரிணமான இயல்புகள்<br>– தூரநோக்கு<br>• பல்வேறுபட்ட ஊடகங்கள்<br>– நீர்வர்ணம்<br>– பஸ்ரல்<br>– அக்றலிக்<br>• தளப் பயன்பாடு | • பல் வேறு கேத்திரகணித வடிவங்களையும் மரஞ்செடிகொடிகளையும் கற்று அவற்றில் காணப்படும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட தனித்துவமான பண்புகள் வெளிப்படுமாறு இரேகை சித்திரங்களை வரைவார்.<br>• இயற்கை, செயற்கை பொருட்களின் பண்புகள் வெளிப்படும் வகையில் ஒருங்கிணைத்து ஓவியங் களை வரைவார்.<br>• அவதானிப்பதன் மூலம் சரியான முடிவுகளுக்கு வருவார். | 13 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 3.0 பயன்பாட்டுத் தேவைகளுக்காக நிர்மாணிப்புகளில் ஈடுபடுவார். | 3.1 தாவர, விலங்கு வகைகளுககுரிய பாரம்பரிய அலங்கார அலங்கார அலகுகளையும் அவற்றின் வர்ணங்களையும் கற்பார். | • பாவனைப் பொருட்களை அலங்கரித்தல்<br>– இரு பரிமானத் திட்டம்<br>– தாமரைப்பூ<br>– பினர மலர்<br>– அன்னாசி மலர்<br>– கத்தரி மலர்<br>– அன்னப்பட்சி<br>– பேரூண்டபட்சி<br>– சிம்ம உருவம்<br>– யானை உருவம் | • தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்குரிய பாரம்பரிய அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி அலங்கார வேலைப்பாடுகளில் ஈடுபடுவார். | 19 |
| | 3.2 புடைவை வகைகளுக்கான பரவுருவ அலங்கார வேலைப்பாடுகளை நிர்மாணிப்பார். | • பெண் / ஆண்<br>• சிறுவர் | • அன்றாட தேவைகளில் பயன்படும் புடைவை வகைகளுக்குப் பொருத்தமான பரவுருவ அலங்காரங்களை நிர்மாணிப்பார். | |
| | 3.3 பாவனைத் தேவைகளுக்காகப் புதிய வடிவில் அமைந்த திட்டமைப்புக்களை நிர்மாணிப்பார். | • திட்டமைப்புப் படங்கள்<br>• வர்ண பயன்பாடு<br>– வேட முகம் (முகமூடி)<br>– சுவர் அலங்காரங்கள்<br>– மெழுகுவர்த்தி தாங்கி | • பயன்பாடுகளுக்கு ஏற்ற புதிய பாணியிலான நிர்மாணிப்புகளை செய்வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 4.0 உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக "கிரபிக்" ஆக்கங்கள் படைப்பார். | 4.1 பல்வேறு தேவைகளுக்காக சுவரொட்சிச் சித்திரம் மற்றும் முகப்புறை போன்றவற்றை வடிவ மைப்பார். | • தேவை<br>• திட்டம்<br>• அச்சிட பொருந்தும் தன்மை<br>• தொடர்பாடல்<br>• ஆக்கபூர்வமான எழுது் துருக்கள்<br>• நிற/ வர்ண ஊடகம்<br>• சுவரொட்டி (போஸ்டர்)<br>• முகப்புறை | • உற்பத்தி மற்றும் சேவைகளின் தேவை கருதி அச்சு பதிப்பிற்கு ஏற்றவாறு ஆக்கச் சிறப்புடைய இரேகைகள், வடிவங்கள், வர்ணங்களைப் பயன்படுத்தி கருத்து முனைப்பாகும் வகையில் சுவரொட்டிகளையும் முகப்புறைகளையும் நிர்மாணிப்பார். | 12 |
| | 4.2 சிறுவர் கதைப்புத்தகமொன்றிற்கு பொருத்தமான முகப்பு அட்டையை நிர்மாணிப்பார். | • தேவை<br>• அச்சிடப் பொருந்தும்தன்மை<br>• திட்டம்<br>• ஆக்கபூர்வமான எழுத்துருக்கள்<br>• இரேகைகளின் பயன்பாடு<br>• வர்ண ஊடகம்<br>• வடிவங்கள் *(Shapes)*<br>• நுட்பமுறைகள்*(Technique)*<br>• திறன் முறை *(Skills)*<br>• ஆக்கபூர்வமான தன்மை<br>• பூரணப்பாடு *(Finishing)* | • தெரிவு செய்த நியதிகளின் அடிப்படையில் திறன்முறை, நுட்பமுறை என்பவற்றைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமாக சிறுவர் கதைப் புத்தகமொன்றிற்கு ஏற்ற முகப்பு அட்டை (முன்பக்கம்) ஒன்றைத் திட்டமிட்டு வரைவார். | |
| | 4.3 சிறுவர் கதையொன்றில் தெரிவு செய்த நிகழ்வொன்றுகான விளக்கப்படத்தை நிர்மாணிப்பார். | • இரேகைகளின் பயன்பாடு<br>• வடிவங்கள்<br>• வர்ண ஊடகங்கள் | • தெரிவு செய்யப்பட்ட நியதியின் விருப்பு/வெறுப்புகள், தொடர் பாடல் திறன் பற்றிய அறிவுடன் தெரிவுசெய்யப்பட்ட தலைப்பில் விளக்கப் படமொன்றை வரைவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 பல்வேறு வகைப்பட்ட ஊடகங் களைப் பயன்படுத்தி சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடு களைச் செய்வார். | 5.1 அப்புதல், பொளிதல், ஒருங்கிணைத்தல் திறன்களைப் பயன் படுத்திப் பல்வேறு வகையான சிற்பங்களை வடிவமைப்பார். | • மனித விலங்கு உருவங்கள் ஒருங்கிணைத்தல் (அப்புதல்)<br>• வேடமுகம் (பொளிதல்)<br>• வீட்டு அலங்காரப் பொருட்கள் (ஒன்றிணைத்தல்)<br>– எளிமையான வடிவம்<br>– ஒருங்கிணைத்தல்<br>– பல்வேறுபட்ட ஊடகங்கள்<br>– தேவைக்குப் பொருந்தும் தன்மை | • அப்புதல், பொளிதல், ஒருங்கிணைத்தல் மூலம் ஆக்கங் களை மேற்கொள்வார். | 09 |
| 6.0 சமய, பண்பாட்டு அம்சங்கள் கொண்ட தேசிய, சர்வதேச ரீதியில் தெரிவு செய்த கலை ஞர்களின் கலை ஆக்கங் களை வெகுசனத்தொடர்பு சாதனங் களினூடாகக் கண்டறிந்து, இரசித்து விமர்சன ரீதியில் தமது சுய ஆக்கங்களுக்குப் பயன்படுத் துவார். | 6.1 இலங்கையின் பாரம்பரிய வேடமுகக் கைத்தொழில் தொடர்பான கலை நிர்மாணிப்பு களைக் கற்றறிந்து நயந்துரைப் பார்.<br><br>6.2 அலங்கார மரச் செதுக்கல் களைக் கொண்ட இந்து ஆலய கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவார். | • வேடமுக நிர்மாணிப்புக்கள்<br>– வரலாற்றுப் பின்னணி<br>– பரவலடைந்த பிரதேசங்கள்<br>– நுட்பமுறைகள்<br>– ஊடகம்<br>– உபகரணங்கள்<br>– கலைத்துவப் பண்புகள்<br><br>• மரவாகன நிர்மாணிப்புகள்<br>– வரலாற்றுப் பின்னணி<br>• செதுக்கல்கள் அடங்கிய மரவாகனங்கள்.<br>– சிங்க வாகனம்<br>– குதிரை வாகனம்<br>– மஞ்சம்<br>– தேர்<br>• அலங்கார வேலைப்பாடுகள் | • பாரம்பரிய கலைக்கைத் தொழில் களை கற்று அதனுடன் தொடர்புடைய கலை நிர்மாணிப் புகளை நயப்பார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3 இலங்கையின் பாரம்பரிய அரக்குத் தொழில் தொடர்பான கலை நிர்மாணிப்புகளை கற்றறிந்து நயந்துரைப்பார். | • அரக்கு நிர்மாணிப்பகள்<br>– வரலாற்றுப் பின்னணி<br>– பரவலடைந்த பிரதேசங்கள்<br>– நுட்பமுறைகள்<br>– ஊடகம்<br>– உபகரணங்கள்<br>• கலைத்துவப் பண்புகள் | | |
| | 6.4 தெரிவுசெய்யப்பட்ட மோடிப் படுத்திய மேடை நாடகமொன்றில் காணப்படும் ஓவியப் பண்புகளை நயந்துரைப்பார். | • மோடிப்படுத்தப்பட்ட நாடகங்கள்<br>– தெரிவு செய்யப்பட்ட நாடகங்கள் சில<br>– ஒப்பனை<br>– அரங்கப் பொருட்களும் ஆடையணிகளும்<br>– அரங்க ஆடையணிகளை நிர்மாணித்தல். | • தெரிவு செய்யப்பட்ட மோடிப் படுத்தப்பட்ட நாடகங்களில் காணப்படும் ஓவியப் பண்பு களை ஆராய்ந்தறிவார். | |
| | 6.5 தெரிவு செய்யப்பட்ட உண்ணாட்டுக் கலைஞர்களின் கலை நிர்மாணிப் புகளை நயந்துரைபர்பார். | • எஸ்.பி. சார்ள்ஸ்<br>- தேசிய கொடி<br>- செங்கோல் | • தேசியகொடி, செங்கோலில் உபயோகப்படுத்தியுள்ள குறியீடுகளை விபரிப்பார். | |
| | 6.6 தெரிவு செய்யப்பட்ட சித்திரக் கதை கலைஞர்களின் ஆக்கங் களை நயந்துரைப்பார். | • தயா ராஜபக்ஸ<br>• பந்துல ஹரிஸ்சந்ர<br>• ஜனக ரத்நாயக்க | • தெரிவு செய்யப்பட்ட சித்திரக் கதைக்கலைஞர்களது நிர் மாணிப்புகளை மதிப்பிடுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 7.0 வரலாற்று ரீதியான உள்நாட்டு, வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர் மாணக் கலைகளின் தனித்து வங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன் படுத்துவார். | 7.1 வரலாற்று ரீயான கட்டட நிரமாணங்கள், தொடர்பான கலையம்சங்களை அறிவார். | • சந்திர வட்டக்கல்<br>• காவற்கல்<br>• (கொரவக்கல்) கைபிடி வரிசை<br>• வாஹல்கட<br>• வட்டதாகெய<br>• படிவரிசை | • வரலாற்று ரீதியான கட்டட நிர்மாணிங்கள் சார்ந்த செதுக்கல்களை ஆராய்ந்தறிவார். | 10 |
| | 7.2 தேசிய (உள்நாட்டு) பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகளை ஆராய்ந்தறிவார். | • விசேட சம்பிரதாய அலங்காரப் படைப்புக்கள்<br>– சதுர்நாரி பல்லக்கு<br>– சப்த நாரி பல்லக்கு<br>– பஞ்சநாரி கடம்<br>– நவநாரி குஞ்சரம்<br>– சப்தநாரி இரதம்<br>– ரிஷப குஞ்சரம்<br>– கிஹிம்பி முகம்<br>– மகர உருவம்<br>– யாழி | • பாரம்பரிய அலங்கார அலகுகளை இனங்கண்டு குறிப்பிடுவார். | |

# கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்

**தேர்ச்சி 1.0 : சுற்றாடல் சார்ந்த கருப்பொருட்களின் கீழ் ஓவியங்கள் வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 :** மனித, விலங்கு உருவங்களை இரேகைகளால் வரைவார்.

**செயற்பாடு 1.1.1:** ''மனித உடல் வடிவமைப்பின் இலயத்தினைக் கற்றறிவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- செயற்பாடுகளுடன் கூடிய மனித உடல் நிலைகள் பற்றிய கருத்துக் களைக் கூறுவார்.
- பல்வேறுபட்ட வயதுகளுக்குரிய மனித உடல் நிலைகளை இரேகை களால் வரைவார்.
- வெவ்வேறு நுட்பமுறைகளை உபயோகித்து வர்ணம் தீட்டுவார்.
- பயிற்சியின் மூலம் பெற்ற அனுபவத்தை வேறு ஆக்கங்களில் உபயோகிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 1.1.1.1. இற்குரிய ஆய்வு/ செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்கள்.
- வெவ்வேறு தொனிப்பொருட்களின் கீழ் வரையப்பட்ட மாதிரி ஓவியங்கள், மனித உருவங்களின் பரும்படிப் படங்கள்.
- ஓவியம் வரையும் தாள்கள், வர்ணங்கள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1.1.1.1 :**
- பரும்படிப் படங்களையும் மாதிரி ஓவியங்களையும் மாணவர்களிடம் வழங்குக.
- மனித உடல் நிலைகளின் பல்வேறுபட்ட தன்மைகளை கலந்துரையாடுக.
  - பிள்ளைகள், இளைஞர்கள், முதியோர்
  - உணர்வு வெளிப்பாடு
- கோட்பாட்டு விதிகளின் உபயோகம் பற்றி விளக்குக.
  - அளவும் பரிமாணமும்
  - தூர தரிசனம்
  - ஒளி நிழலும் முப்பரிமாண இயல்புகளும்
- வர்ண ஊடகங்கள், நுட்பமுறைகளின் உபயோகம் பற்றிய விளக்கத்தை வழங்குக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 1.1.1.2 :**
- இணைப்பு 1.1.1.1 இற்குரிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்துக்கமைய மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்குத் தேவையான அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குக.
- மாணவர் நிர்மாணித்தவற்றை காட்சிப்படுத்தத் தயாராகுக.

(55 நிமிடங்கள்)

படிமுறை 1.1.1.3 :
- காட்சிக்கு வைக்கப்பட்ட ஆக்கங்களை சுயமதிப்பீடு செய்ய வாய்ப்பளிக்குக.
- விருத்தி செய்யக்கூடியவாறான கருத்துகளையும் முன்மொழிவு களையும் முன்வைக்க ஏனைய மாணவர்களுக்கு வாய்ப்பளிக்குக.
- சிறப்பான மனித உருவ ஒருங்கிணைப்புக்காக மனித உடல் நிலைகளை கற்றறிவதன் முக்கியத்துவத்தைக் காண்பித்து சிறு கலந்துரையாடலில் ஈடுபடுக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

- மனித உருவங்களின் செயற்பாடுகளும் பல்வேறு தன்மைகளும் தொடர்பான கருத்துகளை வழங்குதல்.
- பல மனித உடல் நிலைகளை இரேகைகளால் வரைதல்.
- வர்ண ஊடகங்களின் உபயோகத்தையும் நுட்பமுறைகளையும் பின்பற்றுதல்.
- சரியான கோட்பாட்டு விதிகளை உபயோகித்தல்.

**இணைப்பு 1.1.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- பல்வேறுபட்ட தொனிப்பொருட்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஓவியம் மற்றும் மனித உருவங்களின் பரும்படிப் படங்களை நன்றாக அவதானிக்குக. உமக்கு விருப்பமான மனித உடல் நிலைகளை இரேகைகளால் வரைக.
- மனித உருவத்தின் அளவு பரிமாண இயல்புகள் தொடர்பாகவும் இலயம் தொடர்பாகவும் கவனம் செலுத்துக.
- பிள்ளைகள், இளைஞர்கள், முதியோர் எனும் வகையில் வெவ்வேறு மனித உருவங்கள் வரைவதில் கவனம் செலுத்துக.
- மனித உருவங்களின் பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்துக.
- ஒளிநிழல், முப்பரிமாண இயல்புகள் வெளிப்படுமாறு வர்ணங்களை உபயோகிக்குக.
- சரியான நுட்பமுறைகளைப் பின்பற்றுக.
- செயற்பாட்டில் ஈடுபடும்போது தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் அறிவுரைகளைப் பெறுக.
- உங்களது நிர்மாணிப்புகளை காட்சிப்படுத்தத் தயாராகுக.

### கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் செயற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்க.

1.1.2 விலங்குருவங்களை இரேகைகளால் வரைவோம். (01 பாடவேளை)

1.1.3 நகர்ப்புறச் சூழலுக்குரிய மனித உருவங்களை இரேகைகளால் வரைவோம். (01 பாடவேளை)

1.1.4 கிராமிய சூழலுக்குரிய மனித விலங்கு உருவங்களை இரேகைகளால் வரைவோம். (01 பாடவேளை)

**தேர்ச்சி** 1.0 : **சுற்றாடல் சார்ந்த கருப்பொருட்களின் கீழ் ஓவியங்கள் வரைவார்.**

**தேர்ச்சி மட்டம்** 1.2 : சூழல், சமூக, சமய மற்றும் வரலாற்றுத் தொனிப்பொருட்களின் கீழ் ஓவியங்களை வரைவார்.

**செயற்பாடு** 1.2.1: ''மழை நாளொன்றை வரைவோம்.''

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- மழை நாளொன்றின் தன்மையை விபரித்துக் கூறுவார்.
- மனித விலங்கு நடத்தைகளை விளக்கிக் கூறுவார்.
- மழை நாளொன்றின் தன்மை வெளிப்படுமாறு ஓவியமொன்றை வரைவார்.
- பொருத்தமான வர்ணங்களையும் நுட்பமுறைகளையும் உப யோகிப்பார்.
- மன அடக்கத்துடன் தொழிற்படுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- மழை நாளொன்றின் நிகழ்வுகளை சித்திரிக்கும் மாதிரி ஓவியங்கள்
- மனித விலங்குகளின் பல நடத்தைகளை சித்தரிக்கும் ஓவியங்கள்.
- பாட விருத்திக்குத் தேவையான கருவிகள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1.2.1.1** :
- தரவிருத்தி உள்ளீடுகளை உபயோகித்து கவர்ச்சியான விதத்தில் பாடத்தினுள் பிரவேசிக்குக.
- மாதிரி ஓவியங்களை நோக்கச் செய்க.
- அவற்றினூடாக பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்தி மழை நாளொன்றின் நிகழ்வுகள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
  - சூழலின் தன்மை (இருள், பனி, குளிர்)
  - சூழல் தன்மை (கிராமிய, நகரம், மலைநாடு, வரண்ட நிலப் பகுதி)
  - மனித விலங்கு நடத்தைகளும் உடல் நிலைகளும்
  - ஓவியக் கோட்பாட்டு விதிகளின் உபயோகம்
  - வர்ணங்களும், நுட்பமுறைகளும் உபயோகப்பட்டுள்ள விதம்

(10 நிமிடங்கள்)

**படிமுறை 1.2.1.2** :
- தலைப்புக்குப் பொருந்தும் விதத்தில் மழை நாளொன்றை ஓவியமாக வரைய மாணவரைப் பணிக்குக.
- தேவையான முன்னூட்டல்களையும் பின்னூட்டல்களையும் வழங்குக.
- மாணவர்களை செயற்பாட்டின் இறுதி வரைக்கும் வழிகாட்டுக.
- பூர்த்தி செய்யப்பட்ட ஓவியங்களை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(55 நிமிடங்கள்)

படிமுறை 1.2.1.3 :
- தமது ஆக்கங்களை விபரித்துக்கூற மாணவர்களுக்கு வாய்ப்பளிக்குக.
- மதிப்பிடவும் விமர்சிக்கவும் ஏனைய மாணவர்களை வழி நடத்துக.
- சிறு கலந்துரையாடலில் ஈடுபடுக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி கணிப்பீடு மதிப்பீட்டை நடாத்துக.

- மழை நாளொன்றின் தன்மையையும் சிறப்பையும் முன்வைத்தல்.
- ஓவியம் வரையத் தேவையான கோட்பாட்டு விதிகளை நன்றாக உபயோகித்தல்.
- மனித விலங்கு உடல் நிலைகளை ஆக்கபூர்வமாக வெளிப்படுத்துதல்.
- வர்ணங்களையும் நுட்பமுறைகளையும் உபயோகித்து மழை நாளொன்றின் தன்மையை அர்த்தமுள்ள வகையில் வெளிப்படத்துதல்.

**கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் செயற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்க.**

1.2.2 ஞாயிறு சந்தை (02 பாடவேளைகள்)

1.2.3 பாடசாலை விளையாட்டுப் போட்டியின் நிகழ்வொன்று (02 பாடவேளைகள்)

1.2.4 பஸ்தரிப்பு நிலையமொன்றின் நிகழ்வொன்று (Bus halt) (02 பாடவேளைகள்)

1.2.5 வியத்தகு வனம் (02 பாடவேளைகள்)

1.2.6 சரணாலயமொன்றை பார்வையிடுவோர். (02 பாடவேளைகள்)

**தேர்ச்சி 1.0 : சுற்றாடல் சார்ந்த கருப்பொருட்களின் கீழ் ஓவியங்கள் வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 :** பல்வேறுபட்ட மத ஸ்தலங்களின் ஓவியங்களைக் கற்று, அவை கொண்டுள்ள விசேட கலையம்சங்களைக் கொண்டு ஓவியங்களை வரைவார்.

**செயற்பாடு 1.3.1:** ''மதம் சார்ந்த ஓவியங்களை ஆதாரமாகக் கொண்ட ஓவியங்களை வரைவோம்.''

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**
- பல வித சமய ஸ்தலங்களில் உள்ள சுவரோவியங்களை விளக்குவார்.
- ஒவ்வொரு சமய ஸ்தலங்களிலும் உள்ள ஓவியங்களுக்கு உரித்தான ஓவியப் பண்புகளை விளக்கிக் கூறுவார்.
- கற்றறிந்த ஓவியங்கள் தொடர்பாக விரும்பிய கலைப்பாணி யொன்றை உபயோகித்து சுயமான ஓவியங்களை வரைவார்.
- நிர்மாணிப்புகளை நயந்து மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- 'பல்வெறு சமய ஸ்தலங்களுடன் தொடர்புடைய அவற்றுக்கு உரித்தான ஓவியங்கள்/நிழற்படங்கள்/இறுவட்டுக்கள்
- இணைப்பு 1.3.1.1 இற்குரிய ஆய்வு செயற்பாட்டுப் படிவங்கள்
- பல்வேறு உடல்நிலை செயற்பாடுகளுடன் கூடிய பரும்படிப் படங்கள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1.3.1.1 :**
- பாடசாலைக்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ள மதஸ்தல மொன்றை பார்வையிட சிறு பயணம் ஒன்றை ஒழுங்கமைக்குக.
- குறிப்பிட்ட மதஸ்தலத்தின் ஓவியங்கள் மீது கவனஞ் செலுத்துக.
- அந்நிர்மாணிப்புகளினூடாக பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கலந்துரையாடல் ஒன்றை நடத்துக.
    - மனித உருவங்களை வரைதலும் வடிவங்களை ஒருங்கிணைத்தலும்
    - அலங்கார வடிவங்களின் உபயோகம்
    - பின்னணியிடப்படல்
    - வர்ண உபயோகம்

(40 நிமிடங்கள்)

**படிமுறை 1.3.1.2** :
- பார்வையிட்ட மதஸ்தலத்தின் ஓவியக் கலைப்பாணியைத் தழுவி சுயமான ஆக்கமொன்றை செய்ய மாணவர்களை அறிவுறுத்துக.
- ஆய்வு, அறிவுறுத்தற் படிவத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய ஓவியமொன்றை வரையச் செய்க.
- நிர்மாணிப்பில் ஈடுபடும் மாணவர்களுக்கு தேவையான அறிவுரை களையும் வழிகாட்டல்களையும் வழங்குக.
- தெரிவுசெய்யப்பட்ட கலைப்பாணிக்குப் பொருத்தமான நுட்பமுறை களை உபயோகித்து வர்ணம் தீட்டி பூரணப்படுத்த வழிகாட்டுக.
- பூர்த்தி செய்த ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(70 நிமிடங்கள்)

**படிமுறை 1.3.1.3** :
- மாணவர் நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- நிர்மாணித்தவை தொடர்பாக விருத்தி செய்யக்கூடியவாறான கருத்துகளை முன்வைக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்குக.
- தெரிவுசெய்யப்பட்ட ஓவியக் கலைப்பாணி, அதன் ஓவியப் பண்புகள் மீது கவனஞ்செலுத்தி மாணவர்களின் நிர்மாணிப்புகள் தொடர்பாக அவற்றை விருத்தி செய்யக்கூடியவாறான கருத்துகளை வழங்குக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி கணிப்பீடு மதிப்பீட்டை நடாத்துக.
- சமய ஸ்தலங்களில் உள்ள சுவரோவியங்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைக்குக.
- அவ்வோவியங்களின் தனித்துவமான அம்சங்களை விபரித்தல்.
- கற்றுக்கொண்ட கலைப்பாணிக்கு ஏற்ற ஓவியமொன்றை நிர்மாணித்தல்.
- கலைப்பாணிக்குப் பொருந்தக்கூடிய வகையில் நிறங்களையும் ஓவிய நுட்பமுறைகளையும் பயன்படுத்துதல்.

**ணைப்பு 1.3.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- வகுப்பில் காட்சிப்படுத்திய மாதிரி ஓவியங்கள்.∴ நிழற்படங்கள்.∴ இறுவட்டுகளின் காட்சிகளை நன்றாக நோக்குக.
- மனித செயற்பாடுகள் பலவற்றுக்குரிய பரும்படிப்படங்களின் மாதிரிகைகளைக் கவனித்து உமது நிர்மாணிப்பில் ஈடுபடுக.
- உமது ஓவியத்தை வர்ணம் தீட்டும்போது தெரிவுசெய்யப்பட்ட கலைப்பாணிக்குப் பொருந்தும் நுட்பமுறையை உபயோகிக்குக.
- ஆசிரியரின் உதவியை அவ்வப்போது பெற்றுக்கொள்க.
- பூரணப்படுத்தியவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**தேர்ச்சி** **2.0 : சுற்றாடலிற் காணப்படும் பொருட்களை ஒருங்கிணைத்து ஓவியங் களை வரைவார்.**

**தேர்ச்சி மட்டம்** **2.1 :** இயற்கை மற்றும் செயற்கைப் பொருட்களை இரேகைகளால் கற்றறிவார்.

**செயற்பாடு** **2.1.1:** ''திறந்த வெளியான இடமொன்றுக்குச் சென்று மரமொன்றின் வடிவத் தினை இரேகைகளால் வரைவோம்.''

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- தாவரங்களின் பல்வகைத் தன்மையையும் சுபாவத்தினையும் கலந்துரையாடுவார்.
- தாவரங்களின் அடிப்படை வடிவத்தினை இரேகைகளால் வரைவார்.
- பலவித இரேகைகளை உபயோகித்து தாவரப் பகுதிகளின் குண இயல்புகளை வெளிப்படுத்திக் காட்டுவார்.
- வெவ்வேறு வகையான பென்சில்களை பொருத்தமான நுட்பமுறை களுக்கேற்ப உபயோகிப்பார்.
- பொருட்களை பார்த்து வரையும் கோட்பாட்டு விதிகளைப் பின் பற்றுவார்.
- ஏனைய மாணவர்களது நிர்மாணிப்புகளை மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- ஓவியம் வரையும் தாள்கள்
- 2B, 4B, 6B வகைப் பென்சில்கள்
- வரைதற் பலகைகள்
- வரைதற் தாங்கியொன்று
- தாள் கவ்வி அல்லது ஊசி
- மாதிரி ஓவியங்கள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 2.1.1.1** :
- ஓவியங்களை வரையத் தேவையான பொருட்களையும் கருவி களையும் எடுத்துக்கொண்டு பாடசாலைச் சூழலின் பொருத்தமான இடமொன்றுக்கு மாணவர்களை அழைத்துச் செல்க.
- சூழலில் காணப்படும் மரஞ்செடிகொடிகளை அவதானித்து அவை பற்றிக் கலந்துரையாடுக.
  - தாவரங்களின் பல்வகைத் தன்மை
  - இலைகளின் வடிவங்களினதும் வர்ணங்களினதும் வேறுபாடு
  - தாவரத் தண்டின் வடிவமும் மரப்பட்டையின் தன்மையும்
- மரஞ்செடி கொடிகளின் வடிவத்தை இரேகைகளால் வரையும்போது அதற்கு உரித்தான பாணியை வெளிப்படுத்தும் விதத்தினை மாதிரிப் படங்கள் மூலம் காட்டுக.

- பொருட் கூட்டத்தைப் பார்த்து வரையும்போது பின்பற்ற வேண்டிய கோட்பாட்டு விதிகளை விளக்குக.
  - பரிமாணம்
  - ஒளி நிழல் காட்டுதல், முப்பரிமாண இயல்பு
  - மேற்பரப்புத் தன்மை

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2.1.1.2** :
- பார்த்து வரைவதற்குப் பொருத்தமான விதத்தில் இடத்தைத் தெரிவு செய்து உபரகணங்களையும் கருவிகளையும் சரியாக அமைத்துக் கொள்வதில் உதவுக.
- தாவரமொன்றின் அடிப்படை வடிவம், இலைகள், கிளைகள், தண்டு, மரப்பட்டையின் தன்மை என்பன பென்சிலால் வரைய மாணவர் களைப் பணிக்குக.
- இரேகைகளின் பல்வகைத் தன்மைகளையும் பென்சிலை உபயோகிக் கும் வேறுபட்ட முறைகளையும் உபயோகித்து செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களுக்குத் தேவையான அறிவுரைகளையும் உதவிகளையும் வழங்குக.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 2.1.1.3** :
- சகல மாணவர்களும் நிர்மாணிப்புகளை காண வாய்ப்பளித்து சுய மதிப்பீட்டுக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- ஆக்கங்களின் வலிவு நலிவுகளை காண்பித்து விருத்தி செய்யக் கூடிய விதத்திலான கருத்துகளை முன்வைக்க சந்தர்ப்பளிக்குக.
- நிர்மாணிப்புகளின் கோட்பாட்டு விதிகள், நுட்பமுறைகளின் உபயோகம், செயற்பாட்டில் ஈடுபட்டமை தொடர்பாக சிறு கலந்துரையாடலில் ஈடுபடுக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி கணிப்பீடு மதிப்பீட்டை நடாத்துக.

- தாவரங்களின் பல்வகைமை அவற்றின் குண இயல்புகள் என்பவற்றைக் கலந்துரையாடுதல்.
- தாவரங்களின் எளிமையான அடிப்படை வடிவங்களை பென்சிலால் வரைதல்.
- தாவரப் பகுதிகளின் குண இயல்புகளை இரேகைகளால் வெளிப்படுத்துதல்.
- பொருத்தமான கோட்பாட்டு விதிகளையும் நுட்பமுறைகளையும் உபயோகித்தல்.

**தேர்ச்சி 2.0 :** **சுற்றாடலிற் காணப்படும் பொருட்களை ஒருங்கிணைத்து ஓவியங் களை வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 :** இயற்கை மற்றும் செயற்கைப் பொருட்களை இரேகைகளால் கற்றறிவார்.

**செயற்பாடு 2.1.2:** ''சதுரமுகி வடிவப் பொருளொன்று, தண்ணீர் குடிக்கும் பெரிய அளவிலான கிளாஸ் ஒன்று. கோள வடிவிலான பழமொன்று என்பன இரேகைகளால் கற்றறிவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

- பொருட்களின் அளவு, வடிவம், குண இயல்பு ஆகியவற்றின் வேறுபாட்டை விபரித்துக் கூறுவார்.
- தளத்துக்குப் பொருத்தமானவாறு பொருட் கூட்டத்தை அளவிடைக் கேற்ப வரைந்து காட்டுவார்.
- ஓவியங்கள் வரையும் கோட்பாட்டு விதிகளை சரியாக உப யோகித்து பொருட் தொகுதியை ஒருங்கிணைப்பார்.
- பலவிதமான பென்சில்களை உபயோகித்து இரேகைகளின் வலிமையை வெளிப்படுத்தப் பொருத்தமான நுட்பமுறைகளை பின்பற்றுவார்.
- நிர்மாணிப்புகளை நயந்து மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சதுரமுகி வடிவமான பொருளொன்று
- தண்ணீர் குடிக்கும் பெரிய அளவிலான கிளாஸ் ஒன்று
- பொருட்களை வைக்கப் பொருத்தமான ஆதாரப் பலகையொன்று
- ஓவியம் வரையும் தாள்கள்
- 2B, 4B வகைப் பென்சில்கள்
- மாதிரி ஓவியங்கள்
- இணைப்பு 2.1.2.1 இற்குரிய ஆய்வு செயற்பாடு அறிவுரைப் படிவப் பிரதிகள்.

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 2.1.2.1 :**

- பொருட்களை ஒவ்வொரு மாணவனும் நோக்கும்படியாக அவர்கள் அவற்றை தொட்டு உணரச் செய்க. அவற்றின் அளவு, வடிவம், குண இயல்புகள் பற்றி வினவுக.
- பொருட் கூட்டம் பொருத்தமான விதத்தில் கண்மட்டத்துக்கு கீழே ஒழுங்குபடுத்துக.

- சகல மாணவர்களும் பொருட்களைப் பார்க்கக்கூடிய விதத்தில் மேசை, கதிரை என்பவற்றை அரைவட்ட ஒழுங்கில் வைக்க.
- பொருள்களின் அளவு, பரிமாணம், குண இயல்புகள், தூரநோக்கு, ஒளிநிழல், முப்பரிமாணத் தன்மை, தளப்பிரயோகம் என்பன பற்றி கலந்துரையாடுக.
- உரிய கோட்பாட்டு விதிகளை இரேகைகள் மூலம் வெளிப்படுத்தும் போது இரேகைகளின் வலிமையை வெளிப்படுத்தும் விதத்தினையும் வெவ்வேறு பென்சில்களை உபயோகிக்கும் விதத்தினையும் மாதிரி ஓவியங்கள் மூலம் காண்பிக்குக.

(05 நிமிடங்கள்)

**படிமுறை 2.1.2.2** :

- இணைப்பு 2.1.2.1 இற்குரிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- ஓவியங்கள் வரையத் தேவையான பொருட்களையும் கருவிகளை யும் மாணவர்களுக்கு வழங்குக.
- செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்துக்கு அமைய மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- செயற்பாட்டில் ஈடுபடும்போது மாணவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குக.
- மாணவர் நிர்மாணித்தவற்றை வகுப்பில் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக.

(25 நிமிடங்கள்)

**படிமுறை 2.1.2.3** :

- காட்சிப்படுத்தப்படும் மாணவர்களது ஆக்கங்கள் தொடர்பாக சுயமதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்குக.
- நிர்மாணிப்புகளின் வலிவு நலிவுகளைக் காண்பித்து விருத்தி செய்யக்கூடிய விதத்திலான கருத்துகளை முன்வைக்க வாய்ப்பளிக்குக.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கலந்துரையாடலில் ஈடுபடுக.
    - தளத்துக்குப் பொருந்தும் விதத்தில் பொருட்களை ஒருங்கிணைத்தல்.
    - அளவு பரிமாணம்
    - தூரநோக்கு இயல்புகள்
    - ஒளிநிழல், முப்பரிமாண இயல்புகள்
    - இரேகைகளின் பல்வகைத் தன்மை

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடாத்துக.

- பொருட்களின் அளவு, வடிவம், குண இயல்பு ஆகியவற்றின் வேறுபாட்டை விபரித்துக் கூறுதல்.
- தளத்துக்குப் பொருத்தமாமனவாறு பொருட் கூட்டத்தை அளவிடைக்கேற்ப வரைந்து காட்டுதல்.
- தூரநோக்குப் பண்புகளை சரியாக வெளிப்படுத்தல்.
- இரேகைகளின் வலிமையை உபயோகித்து ஒளிநிழல், முப்பரிமாண இயல்புகள் வெளிப் படுத்துதல்.
- நிர்மாணிப்புகளை மதிப்பிடல்.

**இணைப்பு 2.1.2.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- உங்களுக்கு முன்னால் வைக்கப்பட்ட பொருட் கூட்டத்தை நன்றாக நோக்குக.
- ஒவ்வொரு பொருளுக்கு இடையில் காணப்படும் அளவு வேறுபாடு, வடிவத்தின் வேறுபாடு, தன்மையின் வேறுபாடு என்பவற்றை அறிந்து கொள்க.
- ஒட்டுமொத்தமாக உள்ள பொருட்கூட்டத்தின் அளவைக்கருதி, தளத்துக்குப் பொருத்தமானவாறு அளவிடைகளுக்கு ஏற்ப பொருட்தொகுதியை இரேகைகளால் வரைக.
- சதுரமுகியை வரையும்போது தூரநோக்கு இயல்பைக் கவனத்திற் கொள்க.
- முப்பரிமாண இயல்புகள் தோன்றும் விதத்தில் ஒளிநிழல் காட்டுக.
- பலவித பென்சில்களை உபயோகித்து இரேகைகளின் வலிமை புலப்படுமாறு பொருட்களை வரைக.
- உங்களது நிர்மாணிப்புகளை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**பின்வரும் தலைப்பின்கீழ் இன்னொரு செயற்பாட்டைத் திட்டமிட்டுக்கொள்க.**

2.1.3 ‘‘கனவுரு வடிவப் பொருளொன்று, பப்பாசிக் காயொன்று, அரைவாசிக்கு நீர் நிரப்பப்பட்ட கண்ணாடி போத்தல் ஒன்றில் இடப்பட்ட குறோட்டன் கிளையொன்று என்பவற்றை இரேகைகளால் வரைவோம்.’’

(2 பாடவேளைகள்)

**தேர்ச்சி** **2.0 :** **சுற்றாடலிற் காணப்படும் பொருட்களை ஒருங்கிணைத்து ஓவியங் களை வரைவார்.**

**தேர்ச்சி மட்டம்** **2.2 :** இயற்கை மற்றும் செயற்கைப் பொருட்களை ஒருங்கிணைத்து ஓவியங் களை வரைவார்.

**செயற்பாடு** **2.2.1:** ''கனவுரு வடிவப் பொருளொன்று, உருளை வடிவ பாத்திரமொன்றில் இடப்பட்ட குறோட்டன் கிளையொன்று, தோடங்காயொன்று என்பவற்றை வரைந்து வர்ணம் தீட்டுவோம்.''

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- பொருட்களில் காணப்படும் பல்வகைத் தன்மையை விபரித்துக் கூறுவார்.
- தளத்தையும் இடப்பரப்பையும் சரியாக உபயோகித்து பொருட் கூட்டத்தை அளவிடைக்கு ஏற்ப வரைவார்.
- பெருட்களைப் பார்த்து வரைவதற்கான சரியான கோட்பாட:டு விதிகளைப் பின்பற்றுவார்.
- வர்ண ஊடகத்துக்குப் பொருத்தமான நுட்பமுறைகளை சரியாக உபயோகித்து பொருட்கூட்டத்தை வர்ணம் தீட்டுவார்.
- நிர்மாணிப்புகளை நயந்து மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- கனவுரு வடிவமான பொருளொன்று
- உருளை வடிவப் பாத்திரமொன்று
- அகன்ற 5 இலைகளைக்கொண்ட குறோட்டன் இளையொன்று
- தோடங்காயொன்று
- பொருட்கள் வைக்கப் பொருத்தமான பலகையொன்று
- வரைதற் தாள்கள்
- பென்சில்கள், வர்ண ஊடகங்கள் (பெஸ்ரல், நீர்வர்ணம், தூரிகைகள்)
- பொருட்தொகுதிகள் சித்தரிக்கப்பட்டுள்ள மாதிரி ஓவியங்கள்
- இணைப்பு 2.2.1.1 இற்குரிய ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவங்கள்.

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 2.2.1.1** :
- பொருட்களை தனித்தனியாக காண்பித்து அவற்றின் பல்வகைத் தன்மைகள் பற்றி மாணவர்களிடம் வினவுக.
  (வடிவம், அளவு, இயல்பு, வர்ணங்கள் என்பன தொடர்பாக)
- பொருட் கூட்டத்தைப் பொருத்தமான பலகையின்மீது, கண் மட்டத்துக்குக் கீழே மாணவர்கள் அவற்றை நோக்கும்படி வைக்குக.

- ஒவ்வொரு பொருளினதும் அளவு, பரிமாண இயல்புகள், குண இயல்புகள், தூரநோக்குப் பண்புகள், முப்பரிமாண தன்மை என்பன கண்மட்டத்துக்கு புலப்படும் விதத்தைக் கலந்துரையாடுக.
- பொருத்தமான கோட்பாட்டு விதிகள், இரேகைகள், வர்ணங்கள் உபயோகிக்கும் விதத்தினை மாதிரி ஓவியங்களின் துணையுடன் விளக்குக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2.2.1.1** :

- இணைப்பு 2.2.1.1 இற்குரிய ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- ஓவியம் வரையத் தேவையான பொருட்களையும் கருவிகளையும் மாணவர்களுக்கு வழங்குக.
- செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்துக்கு அமைய மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- செயற்பாட்டில் ஈடுபடும்போது மாணவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குக.
- மாணவர் வரைந்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 2.2.1.3** :

- காட்சிப்படுத்தப்படும் மாணவர்களது ஆக்கங்கள் தொடர்பாக சுயமதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்குக.
- வரைந்தவற்றின் வலிவு நலிவு காண்பித்து விருத்தி செய்யக்கூடிய வித்திலான கருத்துக்களை முன்வைக்குக.
- பின்வரும் விடயங்கள் உள்ளடக்கி கலந்துரையாடலில் ஈடுபடுக.
  - நன்றாக அவதானிப்பதன் மூலம் பல்வகைத் தன்மைகளை இனங்காணல்
  - தளப் பிரயோகம்
  - அளவு, பரிமாணம், தூரநோக்கு இயல்புகள், ஒளிநிழல், முப்பரிமாண இயல்புகள் வெளிப்படுத்தல்.
  - வர்ண ஊடகங்களின் பயன்பாடு, சரியான நுட்பமுறைகளைப் பின்பற்றுதல்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடாத்துக.

- பொருட்களின் பல்வகைத் தன்மையை விளக்குதல்.
- தளத்தை சரியாகப் பிரயோகித்து பொருட் கூட்டத்தை அளவிடைக்கு ஏற்ப வரைதல்.
- கோட்பாட்டு விதிகளை சரியாக உபயோகித்தல்.
- வர்ண ஊடகங்களுக்குப் பொருத்தமான நுட்பமுறைகளை உபயோகித்தல்.

**இணைப்பு 2.2.2.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- உங்களுக்கு முன்னால் வைக்கப்பட்ட பொருட் கூட்டத்தை நன்றாக நோக்குக.
- ஒவ்வொரு பொருளுக்கு இடையிலும் காணப்படும் அளவு வேறுபாடு, வடிவத்தின் வேறுபாடு, தன்மையின் வேறுபாடு என்பவற்றை அறிந்து கொள்க.
- ஒட்டுமொத்தமாக உள்ள பொருட்கூட்டத்தின் அளவைக்கருதி, தளத்துக்குப் பொருத்தமானவாறு அளவிடைகளுக்கு ஏற்ப பொருட்தொகுதியை இரேகைகளால் வரைக.
- தூரநோக்கு இயல்புகளை சரியாகக்கொண்டு கனவுரு வடிவத்தை வரைக.
- ஒளிநிழல் சரியாகக் காண்பித்து முப்பரிமாண இயல்பை வெளிப்படுத்துக.
- வர்ண ஊடகங்களுக்குப் பொருத்தமான நுட்பமுறைகளையும் கருவிகளையும் சரியாக உபயோகிக்குக.
- உங்களது நிர்மாணிப்புகளை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.
- பின்வரும் தலைப்பின் கீழ் மேலதிக செயற்பாடொன்றை திட்டமிட்டுக்கொள்க.

**பின்வரும் தலைப்புகளின் கீழ் மற்றைய செயற்பாடுகளை திட்டமிட்டுக்கொள்க.**

2.2.2 ‘‘பிஸ்கட் பெட்டியொன்று, செவ்விளநீர் ஒன்று, சிறிய குடமொன்றில் இடப்பட்ட அலரிப் பூக்களுடனான சிறு கிளையொன்று என்பன ஒருங்கிணைத்து வரைந்து வர்ணம் தீட்டுவோம்.’’

(2 பாடவேளைகள்)

2.2.3 ‘‘பெரிய புத்தகமொன்று, அந்தூரியம் செடியுடனான சாடியொன்று, துணித்துண்டொன்று என்பன ஒருங்கிணைத்து வரைந்து வர்ணம் தீட்டுவோம்.’’

(2 பாடவேளைகள்)

2.2.4 ‘‘சதுரமுகி வடிவப் பொருளொன்று, பப்பாசிக்காயொன்று, கத்தாப்பு போன்ற அகன்ற இலைகளுடனான கிளையொன்று (மூன்று இலைகள்), துணித் துண்டொன்று என்பன ஒருங்கிணைத்து வர்ணம் தீட்டுவோம்.’’

(2 பாடவேளைகள்)

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்காக நிர்மாணிப்புக்களில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** தாவர, விலங்கு வகைகளுக்குரிய பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகளின் எண்ணக்கருக்களையும் அவற்றின் வர்ணங்களையும் கற்பார்.

**செயற்பாடு 3.1.1:** ''வேலைப்பாடுகள் மிக்க குடை''

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**

- தாவர வகைக்குரிய பாரம்பரிய அலங்காரக் காட்டுருக்களைக் குறிப்பிடுவார்.
- விசித்திரமாக அமைக்கப்பட்ட பாரம்பரிய மலர்வடிவங்களை பாவனைப் பொருட்களில் இடும் விதத்தை விளக்கிக் கூறுவார்.
- அலங்காரக் காட்டுருவின் வடிவத்துக்குப் பொருத்தமான அலங்கார வேலைப்பாடுகளை நிர்மாணிப்பார்.
- பொருத்தமானவாறு வர்ணம் தீட்டுவார்.
- பூரணப்படுத்திய அலங்கார வேலைப்பாட்டை நயந்து மதிப்பிடுவார்.
- குழு மனப்பாங்குடன் செயற்படுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 3.1.1.1 இற்குரிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவப் பிரதிகள்.
- இணைப்பு 3.1.1.2 இற்குரிய உருவப் படங்களின் பிரதிகள்.
- பாரம்பரிய மலர் அலங்காரக் காட்டுருக்கள் உபயோகித்து அலங்கார வேலைப்பாடுடைய குடையொன்று.
- பிறிஸ்டல் போட் ஒன்றில் வட்டத்தின் 1/8 பங்கு வடிவில் வெட்டப்பட்ட குடைக்குப் பொருத்தமான போதியளவிலான வலையுருக்கள் (குழுவுக்கு ஒன்று வீதம்)
- கேத்திரகணித உபகரணங்கள், கத்தரிக்கோல்கள், ஒட்டப் பொருத்தமான பிசின், பசை அல்லது கம்
- பிறிஸ்டல் போட், பிரதியிடும் தாள்கள், டிமைத்தாள்கள்
- வர்ணங்கள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 3.1.1.1 :**

- அலங்கார வேலைப்பாடுடைய குடையை மாணவர் முன் விரித்துக் காண்பிக்குக.
- அதில் இடப்பட்டுள்ள வேலைப்பாடுகள் தொடர்பான மாணவர்களது கருத்துகளை வினவுக.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்துக.
  - குடையொன்று பெரும்பாலும் 8 சமபகுதிகளைக் கொண்டுள்ளது என்பது.
  - குடைத் துணியை அலங்கரிக்க பாரம்பரிய ஓவியங்களில் இடப்பட்டிருக்கும் மலர் வடிவங்களை உபயோகிக்கலாம் என்பது பற்றி.
  - பொருளுக்கும் ஊடகத்துக்கும் பொருத்தமான விதத்தில் வர்ணங்கள் உபயோகிக்கும் விதம் பற்றி.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 3.1.1.2** :
- பொருத்தமான விதத்தில் மாணவர்களைக் குழுக்களாக்குக.
- இணைப்பு 3.1.1.1 இற்குரிய ஆய்வு செயற்பாட்டு அறிவுரைப் படிவங்கள் ஒன்று வீதம் மாணவர்களுக்கு வழங்குக.
- அமைத்த வலையுருவை ஒன்றுவீதம் குழுக்களுக்கு வழங்குக.
- தேவையான உபகரணங்களையும் கருவிகளையும் மாணவர் களுக்கு வழங்குக.
- நிர்மாணிப்பு முடிபு வரைக்கும் உங்கள் ஒத்துழைப்பை வழங்குக.
- பூரணப்படுத்திய நிர்மாணிப்புகளை முன்வைக்கத்த தயாராகுக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 3.1.1.3** :
- குழுக்கள் நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- ஒழுங்குமுறையில் நலனை நோக்காகக் கொண்ட விமர்சனத்துக்குச் சந்தர்ப்பமளிக்குக.
- பெற்றுக்கொண்ட திறமைகளின் அளவை அறிந்து மேலும் விருத்தி செய்துகொள்ள வேண்டிய விடயங்களை முன்வைக்கும் கருத்துகளை வழங்குக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- பாரம்பரிய மலர் அலங்காரங்களைக் குறிப்பிடல்.
- பாரம்பரிய மலர் வடிவங்களைக் கொண்டு அலங்கார வேலைப்பாடுகளை நிர்மாணிக்கலாம் என்பதைக் கூறல்.
- பாரம்பரிய மலர் அலங்காரங்களைக் கொண்டு குடையொன்றுக்குப் பொருத்தமான அலங்கார வேலைப்பாடொன்றை நிர்மாணித்தல்.
- குழுக்கள் நிர்மாணித்தவற்றில் மிகச் சிறந்த ஆக்கத்தைத் தெரிவு செய்தல்.
- அடைவின் நோக்கத்திற்காக குழுவாக இயங்குதல்.

**இணைப்பு 3.1.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- உங்கள் முன்வைக்கப்பட்டுள்ள மாதிரியை நன்றாக நோக்குக.
- உங்களுக்கு வழங்கப்பட்ட வலையுரு அமைப்புக்குப் பொருத்தமான விதத்தில் காட்சிப்படுத்தப்பட்ட பாரம்பரிய மலர்களைக் கொண்டு அலங்கார வடிவமொன்றை நிர்மாணிக்குக.
- உங்களுக்கு விருப்பமான விதத்தில் பாரம்பரிய மலர் வடிவங்களை ஆக்கபூர்வமாக அமைக்க.
- தேவைக்கேற்ற விதத்தில் கேத்திர கணித உபகரணங்களை பயன்படுத்துக.
- குழுவில் உள்ள ஒவ்வொரு மாணவனும் நிர்மாணித்த அலங்கார வேலைப்பாடுகளில் மிகவும் பொருத்தமான அலங்கார அலகைத் தெரிவுசெய்து கொள்க.
- தெரிவுசெய்யப்பட்ட அலங்கார அலகை குழுவிலுள்ள சகல அங்கத்தவர்களும் பிரதியிட்டுக் கொள்ளச் செய்க.
- குழவின் சகல அங்கத்தவர்களும் ஒரே விதமாக வர்ணம் தீட்டுக.
- அலங்கார அலகுகள் தெளிவாகப் புலப்படும் விதத்தில் வெளிப்புற இரேகைகள் வரைக.
- உமக்கு வழங்கப்பட்ட பிறிஸ்ரல் போட் அட்டை மீது, விரித்த குடையின் வடிவம் தோன்றும் விதத்தில் ஒவ்வோர் அங்கத்தவரும் நிர்மாணித்த பகுதிகளை ஒட்டுக.
- குழுக்கள் நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.

- **பின்வரும் தலைப்பின்கீழ் மேலதிக செயற்பாடொன்றை திட்டமிட்டுக் கொள்க.**

  3.1.2 ‘‘விலங்குருவத்துக்கான பாரம்பரிய அலங்கார அலகொன்றை ஆக்கபூர்வமாக உபயோகித்து மரத்தால் செய்யப்பட்ட கதவுக்குப் பொருத்தமான அலங்கார வேலைப்பாட்டை உருவாக்குவோம்.’’

(03 பாடவேளைகள்)

**தேர்ச்சி** **3.0** : **பயன்பாட்டுத் தேவைகளுக்காக நிர்மாணிப்புகளில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம்** **3.2** : துணிமணிகளுக்கான பல்வகை அமைப்பு கொண்ட பரவுருவ அலங்கார வேலைப்பாடுகளை நிர்மாணிப்பார்.

**செயற்பாடு** **3.2.1**: ''ஆண் அல்லது பெண்களின் துணிவகைகளுக்காக பரவுருவ அலங்காரங்களை நிர்மாணிப்பார்.''

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- இயற்கை, செயற்கை வடிவங்களை பரவுருவ அலங்காரங்களுக்கு உபயோகிக்கலாம் என்பதைக் கூறுவார்.
- அவ்வடிவங்களை ஆக்கபூர்வமான தன்மையுடன் உபயோகிக்கலாம் என்பதைக் கூறுவார்.
- அமைத்துக்கொண்ட அலங்கார அலகை ஒழுங்கான கோலத்துக்கமைய தொகுத்து பரவுருவ அலங்காரத்தை திட்டமிட்டுக் கொள்வார்.
- பொருத்தமான விதத்தில் கேத்திரகணித உபகரணங்களை உபயோகிப்பார்.
- பொருத்தமான நுட்பமுறைகளில் வர்ணம் தீட்டுவார்.
- ஒழுங்குமுறையில் செயல்களில் ஈடுபடுவார்.
- நிர்மாணிப்புகளை நயந்து மதிப்பிடுவார்.
- தன்னடக்கத்தடன் செயற்படுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**:

- அலங்கார வேலைப்பாடுகளுக்கு உபயோகிக்கக்கூடிய பலவித பொருட்கள்
  - இயற்கை வடிவங்கள்
    (பூக்கள், இலைகள், காய்கள், தாவர விலங்குருவங்கள்)
  - செயற்கை வடிவங்கள்
    (கேத்திரகணித வடிவங்கள், அரூப வடிவங்கள்)
  - பரவுருவ அலங்காரங்களையுடைய பாவனைப் பொருட்கள் (துணிவகை, பரிசுப் பொதிகளின் உறை, பொலித்தீன், பாத்திரங்கள்)
- பரவுருவ அலங்காரங்களையுடைய மாதிரி ஓவியங்கள்
- சுவட்டுப் பிரதித்தாள்கள், வரைதற்தாள்கள், கேத்திர கணித உபகரணங்கள் வர்ண ஊடகங்கள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 3.2.1.1** :

- பெற்றுக்கொண்ட கற்றல் - கற்பித்தல் சாதனங்களைப் பொருத்தமான முறையை உபயோகித்து வகுப்பில் காட்சிப்படுத்தி கலந்துரையாடலில் ஈடுபடுக.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்குக.
  - தேவைப்படும் சந்தர்ப்பம்
  - வடிவம், வர்ணம்
  - அலகொன்றை நிர்மாணித்தல்
  - பரவலடைதல்.
  - கேத்திரகணித உபகரணங்களை உபயோகித்தல்

(15 நிமிடங்கள்)

**படிமுறை 3.2.1.2** :
- இணைப்பு 3.2.1.1 இற்கான ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- நிர்மாணிப்புக்குத் தேவையான உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவத்துக்கு ஏற்ப மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- மாணவர்களுக்குத் தேவையான முன்னூட்டல்களையும் பின்னூட்டல் களையும் வழங்குக.
- மாணவர்கள் நிர்மாணித்ததை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 3.2.1.3** :
- மாணவர்களின் நிர்மாணிப்புகளை வகுப்பில் முன்வைக்க வாய்ப்பளிக்குக.
- சுய மதிப்பீட்டிற்கு வாய்ப்பளிக்குக.
- ஏனையவர்களது நிர்மாணிப்புகளை மதிப்பீடு செய்ய மாணவர் களுக்கு உதவுக.
- நிர்மாணிப்பின் பூரணப்பாடு, வடிவம், அயல் எதிர் வர்ணங்களின் உபயோகம், உபகரணங்களை சரியாக உபயோகித்தல், ஆக்க பூர்வமான தன்மை பற்றிய விடயங்களை உள்ளடக்கி சிறு கலந்துரையாடலில் ஈடுபடுக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- இயற்கை, செயற்கை வடிவங்களை உபயோகித்து அலங்கார அலகொன்றை நிர்மாணித்தல்.
- பரவுருவ அலங்காரத்தை நிர்மாணிக்கும்போது அலங்கார அலகுகளை சமநிலையில் உபயோகித்தல்.
- நிர்மாணிப்புக்குக் கேத்திரகணித உபகரணங்களை சரியாக உபயோகித்தல்.
- நிர்மாணிப்பை தூய்மையாகவும், நுணுக்கமாகவும் தரமாகவும் பூரணப்படுத்துதல்.

**இணைப்பு 3.2.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- உங்களிடம் வழங்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் சாதனங்களை நன்றாக நோக்குக.
- உங்கள் விருப்பத்திற்கு ஏற்புடையதாக அலங்கார அலகொன்றை அல்லது பலவற்றை நிர்மாணிக்குக.
- நிர்மாணித்த அலகுகளில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்க.
- தெரிவு செய்யப்பட்ட அலங்கார அலகை சுவட்டுப் பிரதித் தாள்களின் துணையுடன் பிரதியிட்டு வரைதற் தாளில் அவற்றை சரியான கோலம் அமையுமாறு பதித்துக்கொள்க.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துக.
  - தளத்துக்குப் பொருத்தமாக பரவுருவ அலங்காரத்தைத் திட்டமிடல்.
  - பொருத்தமான அளவீட்டு முறையை உபயோகித்தல்
  - அலகை மீண்டும் மீண்டும் உபயோகித்தல்.
  - பரவுருவ அலங்காரத்துக்காக தளத்தை பிரயோகிக்கும்போது ஒரு பக்கத்தில் அலகின் பகுதியொன்றை இடும்போது அதன் மறு பகுதியுடன் அலகு பொருந்தி வருமாறு மறுபக்கத்தில் அலகின் மீதிப் பகுதியை வரைந்துகொள்ள வேண்டும்.
- வர்ணம்தீட்டுகையில் அயல் வர்ணங்கள் அல்லது எதிர் வர்ணங்களை உபயோகிக்குக.
- ஊடகத்துக்குப் பொருந்தும் நுட்பமுறைகளைக் கையாள்க.
- தூய்மை, நுணுக்கம், தரம் என்பவற்றில் கவனம் செலுத்துக.
- தேவையானபோது ஆசிரியரின் உதவியை நாடுக.

**பின்வரும் தலைப்பின்கீழ் ஒரு செயற்பாட்டைத் திட்டமிட்டுக்கொள்க.**

3.2.2.2 ''சிறுவர்களுக்குப் பொருத்தமான கட்டில் விருப்புக்காக பரவுருவ அலங்காரமௌனர்றை திட்டமிடுவோம்.''

(3 பாடவேளைகள்)

**தேர்ச்சி** 3.0 : **பயன்பாட்டுத் தேவைகளுக்காக நிர்மாணிப்புகளில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம்** 3.3 : பாவனைத் தேவைகளுக்காகப் புதிய வடிவில் அமைந்த திட்டமைப்பு களை ஓவியங்களாக வரைவார்.

**செயற்பாடு** 3.3.1: ''புதிய பாணியில் அமைந்த வேட முகங்களை ஓவியங்களாக வரைவோம்.''

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- பலவித வேடமுகங்களின் வகைகளை விளக்குவார்.
- வேடமுகங்களுக்கு உபயோகிக்கும் வடிவங்கள், அலங்கார வேலைப்பாடுகள், வர்ணங்கள் பற்றிய கருத்துகளை எடுத்துரைப்பார்.
- ஆக்கபூர்வமான வேடமுகத்துக்கான பருமட்டான படங்களை வரை வார்.
- பொருத்தமான நுட்பமுறைகளை உபயோகித்து வர்ணம் தீட்டுவார்.
- தன்னடக்கத்துடன் செயற்படுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- மாதிரி வேடமுகங்கள், நிழற்படங்கள், உருவப்படங்கள்
- சித்திரம் வரையும் தாள்கள், வர்ணங்கள், தூரிகைகள்/பெஸ்ரல்
- இணைப்பு 3.3.1.1 இற்குரிய உருவப்படங்கள், அறிவுறுத்தல் படிவங்கள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 3.3.1.1** :
- விசித்திர வேலைப்பாடுகளைக்கொண்ட உண்ணாட்டு வெளிநாட்டு வேடமுகங்களின் நிழற்படங்கள்/சித்திரங்கள் என்பவற்றை விரும்பிய முறைகளை உபயோகித்து மாணவர்களுக்கு காட்சிப்படுத்துக. (இணைப்பு 3.3.1.1 இல் உள்ள உருவப்படங்களையும் 6.1.1.1 இற்குரிய வாசிப்புப் படிவத்தின் இலங்கையின் பாரம்பரிய வேட முகங்கள் என்பவற்றையும் அவதானிக்கச் செய்க.)
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கலந்துரையாடலில் ஈடுபடுக.
  - பலவித பாரம்பரியப் பண்புகள், கலாசாரங்களுக்குரிய வேடமுகங் களின் இயல்புகள்.
  - உபயோகப்படுத்தப்பட்டுள்ள வடிவங்கள், அலங்கார வேலைப் பாடுகள், வர்ணங்கள், மூலப்பொருட்களின் பல்வகைத் தன்மை போன்றவை.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 3.3.1.2** :
- உண்ணாட்டு, வெளிநாட்டு வேட முகங்களைக் கொண்டு புதிய வேடமுகமொன்றை ஓவியமாக வரைய வழிகாட்டுக.
- எளிமையான வடிவங்களையும் குறியீட்டு ரீதியான வர்ணங்களையும் உபயோகிக்க அறிவுறுத்துக.

- தேவையான போது கேத்திரகணித உபகரணங்களை உபயோகிக்க வழிகாட்டுக.
- தேவையான முன்னூட்டல்களையும் பின்னூட்டல்களையும் வழங்கி உதவுக.
- மாணவர்களது நிர்மாணிப்புகளை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுக.

(60 நிமிடங்கள்)

படிமுறை 3.3.1.3 :
- மாணவர் நிர்மாணித்தவற்றை காட்சிப்படுத்த வாய்ப்பளிக்குக.
- சுயமதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்குக.
- ஏனையவர்களது நிர்மாணிப்புகளை மதிப்பிடவும் நயக்கவும் வாய்ப்பளிக்குக.
- அலங்கார அலகுகளை விசித்திரமாக உபயோகித்து புதிய பாணியில் நிர்மாணிப்பொன்றை உருவாக்கலாம் என்பதை அழுத்திக் கூறுக.
- ஒட்டுமொத்த செயற்பாட்டை பற்றி சிறு கலந்துரையாடலில் ஈடுபடுக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- பலவித வேடமுகங்கள் பற்றிய தகவல்களை முன்வைத்தல்.
- வேடமுகங்களின் பருமட்டான படங்களை வரைதல்.
- அலங்காரங்களையும் வர்ணங்களையும் உபயோகித்தல்.
- சரியான நுட்பமுறைகளைப் பின்பற்றுதல்.

**இணைப்பு 3.3.1.1**

**உருவப்படப் படிவம்**











- **பின்வரும் தலைப்புகளின் மேலதிக செயற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்க.**

3.3.2 ‘‘கடிதங்களை தாங்கி வைக்கக்கூடிய சுவர் அலங்காரமொன்றை வரைவோம்.’’ (03 பாடவேளைகள்)

3.3.3 ‘‘அரூப வடிவில் அமைந்த விலங்குருவைக்கொண்டு மெழுகுவர்த்தி தாங்கி யொன்றை வரைவோம்.’’ (02 பாடவேளைகள்)

**தேர்ச்சி 4.0** : **உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக 'கிராபிக்' ஆக்கங்கள் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1** : பல்வேறு தேவைகளுக்காக சுவரொட்டிச் சித்திரம் மற்றும் முகப்புறை போன்றவற்றை வடிவமைப்பார்.

**செயற்பாடு 4.1.1:** ''வன வளத்தைப் பாதுகாப்போம்'' எனும் தொனிப்பொருளில் சுவரொட்டிச் சித்திரமொன்றை வரைவோம்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :
- சுவரொட்டிச் சித்திரங்கள் சக்திவாய்ந்த தொடர்பாடல் ஊடகமொன்றென விபரித்துக் கூறுவார்.
- சுவரொட்டிச் சித்திரமொன்றின் அடிப்படை அம்சங்களை விபரித்துக் கூறுவார்.
- உத்தேசிக்கப்பட்ட தலைப்பொன்றின் கீழ் சுவரொட்டிச் சித்திரம் வரைவார்.
- தெரிவுசெய்யப்பட்ட தலைப்புக்குப் பொருத்தமான குறியீடுகள், எழுத்துருக்கள், வர்ணங்கள் என்பன உபயோகிப்பார்.
- மன அடக்கத்துடன் ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 4.1.1.1 இற்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்கள்
- சுவட்டுப் பிரதித்தாள்கள், கேத்திர கணித உபகரணங்கள், வரைதற் தாள்கள், பென்சில்கள்.
- போஸ்டர் சாயம், நீர் வர்ணம், தூரிகைகள்
- மூன்று A4 தாள்கள் நிர்மாணிக்கப்பட்ட 3 நிர்மாணிப்புகள்.
- பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி தொடர்பாக அறிவித்தலொன்று (எழுத்தின் அளவு 24 இல் அமைந்த)
- எளிமையான குறியீடுகள் உபயோகித்து அமைக்கப்பட்ட சுவரொட்டியொன்று.

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 4.1.1.1** :
- அதிபரின் அனுமதியுடன் கல்லூரியின் விளம்பரப் பலகையில் நிர்மாணித்தவற்றை ஒட்டுக.
- பாடவேளை ஆரம்பிக்கையில் வகுப்பிலுள்ள சகல மாணவர்களையும் அறிவித்தல் பலகையருகே அழைத்துச் செல்க.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கலந்துரையாடலில் ஈடுபடுக.
  - அறிவித்தல்கள், சுவரொட்டிச் சித்திரங்கள் அனைத்தும் கிராபிக் வகைக்குரியன என்பது பற்றி.
  - அறிவித்தல், சுவரொட்டிச் சித்திரம் என்பவற்றுக்கிடையில் வேறுபாடுகள் உள்ளன என்பது பற்றி.
  - சுவரொட்டி சித்திரங்கள் தொடர்பாடலை துரிதமாக்கும் என்பது பற்றி
  - செங்குத்தாக சுவரொட்டி சித்திரங்கள் நிர்மாணிப்பது மிகவும் பொருத்தமானது என்பது பற்றி.
  - தொனிப்பொருளுக்குரிய குறியீடுகளையும் எளிமையான தள வடிவங்களையும் உபயோகித்து தொடர்பாடலுக்குரிய செய்தி யைத் தெளிவாக வெளிப்படுத்தலாம் என்பது பற்றி
  - பொருத்தமான வர்ணங்களையும் எழுத்துருக்களையும் உப யோகித்து செய்தியை தீவிரப்படுத்தலாம் என்பது பற்றி.
  - கவர்ச்சியாகவும் சிறந்த பூரணப்பாட்டுடனும் இருக்க வேண்டும் என்பது பற்றி.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 4.1.1.2** :
- இணைப்பு 4.1.1.1 இற்குரிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தை மாணவர்கள் அவதானிக்கும்படி செய்க.
- வழங்கப்பட்டுள்ள தலைப்பின்கீழ் சுவரொட்டிச் சித்திரம் ஒன்றை நிர்மாணிக்கச் செய்க.
- செயற்பாட்டில் ஈடுபட்டு இருக்கையில் தேவையான வழிகாட்டல் களை வழங்குக.
- பூரணப்படுத்தியவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்த வாய்ப் பளிக்குக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 4.1.1.3** :
- ''வன வளத்தைப் பாதுகாப்போம்'' எனப்படும் தொனிப்பொருளைக் கொண்டு வரையப்பட்ட சுவரொட்டிச் சித்திரங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- நிர்மாணிப்புகள் தொடர்பாக மாணவர்களின் கருத்துகளை முன்வைக்க வாய்ப்பளிக்குக.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி சிறு கலந்துரையாடலை நடத்துக.
  - சுவரொட்டிச் சித்திரங்கள் சக்திவாய்ந்த தொடர்பாடல் ஊடகம் என்பது பற்றி.
  - பார்வையாளர்கள் தொனிப்பொருளை இலகுவாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் உருவங்கள், குறியீடுகள், எழுத்துருக்கள், வர்ணங்கள் என்பன அமைய வேண்டும் என்பது பற்றி.
  - நல்ல பூரணப்பாட்டை கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றி.
  - எளிமையாகவும், பொருத்தமாகவும் தொனிப்பொருளை தீவிரப் படுத்தி வெளிப்படுத்தக்கூடிய விதத்தில் வசனங்கள் பிரயோகிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது பற்றி.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- சுவரொட்டிச் சித்திரங்கள் சக்திவாய்ந்த தொடர்பாடல் ஊடகம் என்பதை உணர்த்திக் கூறுதல்.
- சுவரொட்டிச் சித்திரமொன்றில் இருக்கவேண்டிய அடிப்படை அம்சங்களை விபரித்துக் கூறுதல்.
- தொனிப்பொருளுக்குப் பொருத்தமான எளிமையான வடிவங்களையும் குறியீடுகளையும் உபயோகித்து சுவரொட்டி சித்திரமொன்றை நிர்மாணித்தல்.
- தொனிப்பொருளுக்குரிய விதத்தில் வர்ணங்களை பிரயோகித்தல்.
- ஆக்கபூர்வமாகவும் கலைத்துவப் பண்புகளுடனும் சுவரொட்டியை நிர்மாணித்தல்.

**இணைப்பு 4.1.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல், சுவரொட்டிச் சித்திரம் மீது கவனம் செலுத்துக.
- அறிவித்தல், சுவரொட்டி என்பவற்றுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளை நோக்குக.
- ஆசிரியரின் அறிவுரைகளுக்கு அமைய வர்ணங்களையும் குறியீடுகளையும் உபயோகிக்குக.
- எளிமைத்தன்மை, வெளிப்பாட்டின் தீவிரப்பாடு என்பவற்றை நன்றாக நோக்குக.
- ''வன வளத்தைப் பாதுகாப்போம்'' எனும் தொனிப்பொருளுக்குப் பொருத்தமான எளிமையான குறியீடுகள், உருவங்கள், வடிவங்கள் உபயோகித்து பரும்படிப் படத்தை வரைக.
- சுவட்டுப் பிரதித் தாள்களை உபயோகித்து ஓவியம் வரையும் தாளில் பரும்படிப் படத்தைப் பிரதியிட்டுக் கொள்க.
- செய்தியைத் தீவிரப்படுத்தத் தூண்டும் எழுத்துருக்களை இடுக.
- தலைப்புக்குப் பொருத்தமான வர்ணங்களை உபயோகிக்குக.
- பூரணப்படுத்தியவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**தேர்ச்சி 4.0** : **உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக 'கிராபிக்' ஆக்கங்கள் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1** : பல்வேறு தேவைகளுக்காக சுவரொட்டிச் சித்திரம் மற்றும் முகப்புறை போன்றவற்றை வடிவமைப்பார்.

**செயற்பாடு 4.1.2**: பல்வேறு தேவைகளுக்காக முகப்புறைகளை வடிவமைப்போம்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- முகப்புறையொன்றில் இருக்கவேண்டிய அம்சங்களை இனங்கண்டு விபரித்துக் கூறுவார்.
- சுற்றுறையின் வடிவம், பயன்படுத்திய ஊடகம், உபயோகப்படுத்தும் இடம் என்பவற்றுக்கு ஏற்ப முகப்புறையை வடிவமைக்க வேண்டும் என விளக்கிக் கூறுவார்.
- தெரிவுசெய்யப்பட்ட பொருளின் குண இயல்புகளுக்குப் பொருத்த மாக முகப்புறையை வடிவமைப்பார்.
- நுகர்வோரைக் கவரும் விதத்தில் முகப்புறை அமைய வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பார்.
- மற்றவர்கள் வடிவமைத்தவற்றை, விளக்கத் தன்மையுடன் விமர்சிப் பார்.
- நிர்மாணிப்புக்களை நயந்துரைப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**:

- இணைப்பு 4.1.2.1 இற்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்கள்.
- பிரதியிடும் தாள்கள், கேத்திர கணித உபகரணங்கள், வரைதற் தாள்கள், பென்சில்கள்.
- போஸ்டர் வர்ணம், நீர்வர்ணம், தூரிகைகள்.
- பல ஊடகங்கள், வடிவங்கள், அளவுகளுடைய கொள்கலன்கள், பொதியுறைகள்
- பல வடிவங்களில் அமைந்த முகப்புறைகள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 4.1.2.1** :

- முதல் நாளில் ஏற்பாடு செய்துகொண்ட பலவித ஊடகங்கள், வடிவங்கள், அளவு என்பவற்றைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட கொள்கலன்கள், சுற்றுறைகள் உள்ளடக்கப்பட்ட பெரியளவிலான பாத்திரமொன்றை ஆசிரியரின் மேசை மீது வைக்குக.
- தெரிவுசெய்யப்பட்ட மாணவர் சிலரை ஆசிரியர் மேசையருகே அழைத்து ஒன்றை (கொள்கலன் அல்லது சுற்றுறையொன்று) எழுமாறாகத் தெரிவு செய்யும்படி பணிக்குக.
- அவர்கள் அனைவரையும் ஆசிரியரின் மேசையைச் சுற்றிவர நிறுத்துக.

- அவர்கள் கையிலுள்ள உற்பத்திப்பொருளின் அச்சிடப்பட்ட தகவல்களை வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களிடம் எடுத்துக்கூற வாய்ப்பளிக்குக.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கலந்துரையாடலில் ஈடுபடுக.
  - முகப்புறையை நிர்மாணித்தல் கிராபிக் செயற்பாட்டுக்கு உரிய தென்பது பற்றி
  - பொருட்களை விளம்பரப்படுத்த, முகப்புறைகள் பெரும் பங்காற்று கின்றன என்பது பற்றி.
  - சுற்றுறை அல்லது கொள்கலனின் அளவு, ஊடகம், வடிவம் என்பவற்றுக்குப் பொருத்தமாக முகப்புறையின் தன்மையை ஆக்கபூர்வமாக வடிவமைக்கலாம் என்பது பற்றி.
  - முகப்புறையின் விபரிப்புத்தன்மை, எளிமை, கவர்ச்சி என்பன நுகர்வோரின் கவனத்தை ஈர்க்க முக்கிய பங்காற்றுகின்றது என்பது பற்றி
  - உற்பத்திக்காக இடப்படும் பெயர், எழுத்துருக்கள். வர்ணங்க்ள என்பன அச்சிடுவதற்குப் பொருத்தமாக இருக்க வேண்டும் என்பது பற்றி.

(15 நிமிடங்கள்)

படிமுறை 4.1.2.2 :
- ஒவ்வொரு குழுவிலும் 3-4 பேர் இருக்கம் வீதம் மாணவர்களை குழுக்களாக்குக.
- இணைப்பு 4.1.2.1 இற்குரிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தை மாணவர்கள் அவதானிக்கும்படி செய்க.
- ஒவ்வொரு குழுவுக்கும் தலைப்புகளை வழங்குக.
- குறிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய தலைப்புக்குப் பொருத்தமான முகப்புறையை வடிவமைக்கச் செய்க.
- வர்த்தகப் பெயர் கவர்ச்சியாகவும் எளிமையாகவும் இருக்க வேண்டியதுடன் உபயோகிக்கும் வர்ணங்கள், எழுத்துருக்கள் பற்றிய அறிவையும் அவ்வப்போது பெற்றுக்கொடுக்குக.
- பூரணப்படுத்திய நிர்மாணிப்புகளை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராக்குக.

(55 நிமிடங்கள்)

படிமுறை 4.1.2.3 :
- மாணவர்கள் நிர்மாணித்தவற்றை வகுப்பில் முன்வைக்குக.
- விருத்தி செய்யக்கூடிய விதத்திலான கருத்துகளை முன்வைக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்குக.
- மேலும் விருத்தி செய்யக்கூடிய விடயங்களை விளக்கிக் கூறுக.
- ‘கிராபிக்’ வடிவமைப்பின்போது கவனிக்க வேண்டிய தூய்மை, மென்மை அச்சிடுவதற்கு பொருந்தும் தன்மை என்பன பற்றிய விளக்கத்தை அளிக்குக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- முகப்புறையொன்றில் இருக்கவேண்டிய அம்சங்களை விபரித்துக் கூறுதல்.
- நுகர்வோரின் கவனத்தை ஈர்ப்பதற்காக முகப்புறைகள் கவர்ச்சிகரமாகத் திட்டமிடல்.
- வழங்கப்பட்டுள்ள மாதிரியொன்றை நோக்கிய பின் பொருளுக்குரிய முகப்புறையை வடிவமைத்தல்.
- பொருத்தமான எழுத்துருக்களையும் வர்ணங்களையும் உபயோகித்தல்.
- தூய்மை, மென்மை, அச்சிடுவதற்குப் பொருத்தமாகப் பூர்த்தி செய்தல்.

**இணைப்பு 4.1.2.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- ஆசிரியரின் அறிவுரைப்படி நான்கு குழுக்களாகி பின்வரும் தலைப்புகளைக் பெற்றுக்கொள்க.
  குழு 1 - குடிநீர் சுற்றுறைக்கான முகப்புறையொன்று.
  குழு 2 - குழந்தைகளின் ‘கொலோன்’ போத்தலுக்குப் பொருத்தமான முகப்புறையொன்று.
  குழு 3 - பான வகைப் போத்தலொன்றுக்குப் பொருத்தமான முகப்புறையொன்று.
  குழு 4 - சுவை சரக்கு சுற்றுறையில் ஒட்டப் பொருத்தமான முகப்புறையொன்று.
- ஆசிரியர் வழங்கப்பட்ட செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பைக் கற்றறிக.
- அத்துடன் மாதிரி வடிவமைப்பொன்றை ஆசிரியரின் மேசைமீதுள்ள பாத்திரத்தில் இருந்து தெரிவு செய்க.
- மாதிரியை நன்றாக நோக்குக.
- சொர சொரப்பான தாளுக்கு உரிய விதத்தில் முகப்புறையை வரைந்து கொள்க.
- தேவையான போது கேத்திரகணித உபகரணங்களை உபயோகிக்குக.

ஆசிரியரின் உதவியுடன் வரையப்பட்ட இரேகை சித்திரத்தை மேலும் திருத்தியமைத்துக் கொள்க.

- சுவட்டுப் பிரதித் தாள்களை உபயோகித்து வரைதற் தாளில் அதனைப் பிரதியிட்டுக் கொள்க.
- பின்னணி, வரைந்த தளவடிவங்கள் அல்லது உருவங்களை முதலில் வர்ணம் தீட்டுக.
- பொருத்தமான தூரிகையை உபயோகித்து, உருக்களையும் இரேகை அலங்காரங்களையும் வர்ணம் தீட்டுக.
- நிர்மாணித்தவற்றைக் காட்சிப்படுத்துக.

**தேர்ச்சி** **4.0 :** **உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக (வரைவியல்) கிராபிக்கு ஆக்கங்கள் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம்** **4.2 :** சிறுவர் கதைப் புத்தகமொன்றிற்குப் பொருத்தமான முகப்பு அட்டையை நிர்மாணிப்பார்.

**செயற்பாடு** **4.2.1:** ''சிறுவர் கதைப் புத்தகமொன்றுக்குப் பொருத்தமான முகப்பு அட்டையை நிர்மாணிப்போம்.''

**பாடவேளைகள்** **:** 03

**கற்றற் பேறுகள்** **:**

- சிறுவர் கதைப் புத்தகமொன்றின் முகப்பு அட்டையில் இருக்க வேண்டிய சிறப்பம்சங்களை விளக்கிக் கூறுவார்.
- வாசகர்களின் கவனத்தை ஈர்க்க முகப்பு அட்டை கவர்ச்சிகரமாக இருக்க வேண்டுமெனக் கூறுவார்.
- எழுத்துருக்களை அமைக்கும்போது எளிமை, நுட்பமான பூரணப்பாடு தொடர்பில் கவனம் செலுத்திச் செயற்படுவார்.
- உபகரணங்களைக் கையாளும்போது திறமைகளை வெளிப்படுத்து வார்.
- தொனிப்பொருளுக்கு ஏற்றவாறு புத்தகத்தின் முகப்பு அட்டையை வடிவமைப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 4.2.1.1 இற்குரிய ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் போதியளவிலான பிரதிகள்.
- வரைதற் தாள்கள்
- கேத்திரகணித உபகரணங்கள், தூரிகைகள், நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம்
- அச்சிடப்பட்ட சிறுவர் கதைப் புத்தகங்களின் மாதிரி முகப்பு அட்டைகள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 4.2.1.1** **:**

- மாணவர்களுக்கு முன்னரே அறிவித்துப்பெற்ற சிறுவர் கதைப் புத்தகங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து வகுப்பறையில் காட்சிப்படுத்த அறிவுரை வழங்குக.
- வருடாந்த புத்தகக்கண்காட்சி, சிறுவர் புத்தகப் பிரிவு எனும் பெயர் பலகைகளை உரிய இடங்களில் பொருத்தி வைக்குக.
- பத்தகக் கண்காட்சியை சகல மாணவர்களும் பார்ப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்க.

- சிறுவர்களது அவதானிப்புக்குட்பட்ட சிறுவர் கதைப் புத்தகங்களின் துணையுடன் முகப்பு அட்டை, திட்டமைப்பு, உருவங்கள், வர்ண உபயோகம், எழுத்துருக்கள் தொடர்பாக மாணவர்களது கருத்து களை வினவுவதுடன் சிறு உரையாடலில் ஈடுபடுக.
- புத்தக முகப்பு அட்டையை வடிவமைத்தல் ‘கிராபிக்’ வகைக்குரிய தென கூறுக.
- சிறுவர் புத்தக முகப்பு அட்டையை நிர்மாணிக்கும்போது உரிய தொனிப்பொருளுக்கு ஏற்றதாக பெயர், உருவங்களை வடிவமைத்தல், வர்ண உபயோகம், அளவு என்பன அமைய வேண்டும் என உறுதிப்படுத்துக.
- வடிமைக்கும்போது முன், பின் அட்டைகளையும் புத்தகத்தின் தடிப்பத்தினையும் கவனத்திற்கொள்ள வேண்டும் என்பதை நினைவு படுத்துக.

(12 நிமிடங்கள்)

**படிமுறை 4.2.1.2** :
- வகுப்பு மாணவர்களை இரண்டு அல்லது மூன்று குழுக்களாகப் பிரித்துக் கொள்க.
- இணைப்பு 4.2.1.1 இற்குரிய செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- புத்தகத்தின் முன், பின் அட்டைகள், தடிப்பம், அளவு என்பவற்றை திட்டமைக்கும் விதத்தை மாதிரியமைப்புகளின் ஊடாக விளக்குக.
- ஆய்வு/அறிவுறுத்தற் படிவத்திற்கமைய சிறுவர் கதைப்புத்தக முகப்பு அட்டையை நிர்மாணித்து அவற்றை வகுப்பில் காட்சிப்ப டுத்தத் தயாராக்குக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 4.2.1.3** :
- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவை பற்றிய மாணவர்களது கருத்துகளை அறிந்துகொள்வதுடன் ஆசிரியரது கருத்துகளையும் வழங்குக.
- பெற்றுக்கொண்ட திறமைகளை விளங்கிக்கொண்டு மேலும் விருத்தி செய்யக்கூடிய விடயங்களை எடுத்துரைக்குக.
- ‘கிராபிக்’ நிர்மாணிப்புகளின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய தூய்மை, மென்மை, பூரணப்பாடு, நுகர்வோர் கவர்ச்சி பற்றி விபரிக்குக.

(18 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- புத்தகமொன்றின் முன், பின் அட்டைகளில் இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களை விளக்கிக்கூறுதல்.
- வடிவமைக்க உத்தேசிக்கும் புத்தகத்தின் பெயர், ஏனைய பெயர்கள், எழுத்துருக்கள் என்பன மாதிரியுடன் பொருந்தியிருக்கும் தன்மையை விபரித்துக் கூறுதல்.
- எளிமையானதும் கவர்ச்சியானதுமான உருவங்கள், தளவடிவங்கள், வர்ணங்கள் என்பன உபயோகித்து புத்தகத்தின் முகப்பு அட்டையை வடிவமைத்தல்.
- ஏனையோர்களது நிர்மாணிப்புகளை மதிப்பிடல்.

**இணைப்பு 4.2.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- வகுப்பறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள மாதிரிகளை அவதானித்து புத்தகத்தின் முகப்பு அட்டையொன்றை நிர்மாணிக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய அடிப்படை அம்சங்கள் பற்றிய விளக்கத்தினைப் பெறுக.
- பெற்றுக்கொண்ட வரைதற்தாள்மீது கேத்திரகணித உபகரணங்களை உபயோகித்து தேவையான விதத்தில் புத்தகத்தின் முகப்பு அட்டைகள், தடிப்பம் என்பவற்றைக் குறித்துக்கொள்க.
- புத்தக முகப்பு அட்டையின் அளவுக்கு ஒத்த வேறு அளவுடைய சொர சொரப்பான தாளில், முன், பின் அட்டைகளின் எல்லைக் கோடுகள், உத்திசேத்துள்ள பெயர், ஆசிரியர் பெயர், வேறு வடிவங்கள் என்பவற்றைத் திட்டமிட்டுக்கொள்க.
- வரைதற்தாள் மீது வரையப்பட்ட உருவங்கள், வடிவங்கள் என்பவற்றை சுவட்டுப் பிரதித் தாள்களின் துணையுடன் பிரதியிட்டுக்கொள்க.
- உரிய வர்ணங்களை இட்டு வர்ணம் தீட்டுக.
- பின்னணியில் இருந்து எழுத்துருக்கள் தெளிவாகத் தெரியும் விதத்தில் பொருத்தமான வர்ணங்களை தூரிகைகளை உபயோகிக்குக.
- புத்தகத்தின் முகப்பு அட்டை மடியும் பகுதிகளை முறிகோடுகளால் காண்பிக்குக.
- தேவையானபோது ஆசிரியரின் அறிவுரைகளைப் பெற்று நிர்மாணிப்பை பூரணப்படுத்தி காட்சிக்கு வைக்குக.

**தேர்ச்சி 4.0 :** **உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக (வரைவியல்) கிராபிக்கு ஆக்கங்கள் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 :** சிறுவர் கதையொன்றில் தெரிவுசெய்த நிகழ்வொன்றுக்கான விளக்கப் படத்தை நிர்மாணிப்பார்.

**செயற்பாடு 4.3.1:** ''சிறுவர் கதையொன்றில் தெரிவு செய்த நிழக்வொன்றுக்கான விளக்கப் படத்தை வடிவமைப்போம்.''

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**
- விளக்கப்படங்கள் என்ன என்பதனை விளக்கிக் கூறுவார்.
- சிறுவருக்கான நிர்மாணிப்பொன்றில் அடங்க வேண்டிய அம்சங் களை விளக்குவார்.
- சிறப்பானதொரு குழுவினருக்காக முன்வைக்கப்படும் வடிவமைப் பொன்றென விளக்குவார்.
- சிறுவர் மனதில் பதியும் இரேகைகள், வர்ணங்கள், தளவடிவங்கள் உபயோகிக்கப்பட வேண்டும் என்பதை விளக்குவார்.
- அச்சுப் பிரதிக்குரிய விதத்தில் ஓவியங்களைப் பிரதியிடுவார்.
- பூரணப்பாட்டுடன் விளக்கப் படத்தை வடிவமைப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 4.3.1.1 இற்குரிய ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் போதியளவிலான பிரதிகள்.
- தென்னாலி இராமனின் கதைகள் அடங்கிய விளக்கப்படங்களின் பிரதிகள் சில.
- நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், பென்சில், தூரிகைகள்
- வரைதற் தாள்கள், சுவட்டுப் பிரதித்தாள்கள், டுவைன் நூல், தாள் கவ்வி ஊசிகள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 4.3.1.1 :**
- நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியரின் அறிவுரைப்படி பாடலொன்றைப் பாடிக்கொண்டே தென்னாலி இராமனைப் போல் வேடம் பூண்ட மாணவனொருவனை வகுப்புக்கு அழைத்து, பாடத்திற் பிரவேசிக்குக.
- சில நிமிடங்கள் வரை அவரது நடிப்பிற்கு இடமளிக்குக.
- அச்சந்தர்ப்பத்திற் கவனஞ் செலுத்தி தென்னாலி இராமனின் கதைகள் அடங்கிய வர்ணத்திலான விளக்கப்படங்கள் சிலவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி சிறு கலந்துரையாடலில் ஈடுபடுக.
    - விளக்கப்படங்கள் ‘கிராபிக்’ வகைக்குரியவை என்பது பற்றி.
    - கதை, பாடல், சிறப்புக்கட்டுரை ஒன்றின் உள்ளடக்கத்தினை மேலும் முனைப்பாக அறிவிக்க விளக்கப்படங்கள் துணை புரிவது பற்றி.
    - ஓவியமாக்குகையில் சிறுவர் மனதைத் தொடும் விதத்தில் விளக்கப்படங்கள் வடிவமைக்க வேண்டும் என்பது பற்றி.
    - அச்சிடப் பொருத்தமான வகையில் தாளில் விரும்பியவாறு ஓவியத்தை நிர்மாணிக்க சுதந்திரம் உண்டு என்பது பற்றி.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 4.3.1.2** :

- இணைப்பு 4.3.1.1 இற்குரிய செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு விளக்கப் படமொன்றை வடிவமைக்கும்படி மாணவர்களைப் பணிக்குக.
- தேவையானபோது வழிகாட்டல்களை வழங்குக.
- பூரணப்படுத்திய விளக்கக்காட்சிப் படங்களை வகுப்பில் காட்சிப் படுத்த வாய்ப்பளிக்குக.

(60 நிமிடங்கள்)

**படிமுறை 4.3.1.3** :

- மாணவர்கள் வடிவமைத்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவை பற்றிய கருத்துகளைத் தெரிவிக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்குக.
- கதைக்குப் பொருத்தமாக விளக்கக்காட்சி படத்தின் பொருத்தம், பொருத்தமின்மை தொடர்பாக கலந்துரையாடுக.
- மேலும் விருத்தி செய்யக்கூடிய பகுதிகளைக் குறித்து அவற்றுக் கான அறிவுரைகளை வழங்குக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- விளக்கப்படங்களை இனங்கண்டு விபரித்துக்கூறுதல்.
- சிறுவர் கதையொன்றின் உணர்ச்சிபூர்வமான ஒரு நிகழ்வை விளக்கப்படத்தின் மூலமாக மேலும் தீவிரப்படுத்திக் காட்டலாம் என்பதைக் கூறுதல்.
- சிறுவர் கதையொன்றுக்கு விளக்கப்படமொன்றை நிர்மாணித்தல்.
- ஓவியமொன்றை பிரதியிட்டுக்கொள்ளும் திறமையை ஏனைய நிர்மாணிப்புகளில் உபயோகித்தல்.

**இணைப்பு 4.3.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- வகுப்பறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தென்னாலி இராமனின் கதையை விளக்கும் விளக்கப்படங்களை நன்றாக நோக்குக.
- அக்கதையை அல்லது வேறு கிராமியக் கதையொன்றை தெரிவுசெய்க.
- விளக்கப்படத்துக்காக தெரிவுசெய்யப்பட்ட நிகழ்வுக்குப் பொருத்தமான உருவங்கள், வடிவங்கள், சுற்றுப்புறச் சூழல் தொடர்பான தகவல்களை பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கோவைப் படுத்துக.
  - சிறுவர் மனதைக் கவரும் (பொருந்தும்) தன்மை.
  - அச்சிடுவதற்குப் பொருத்தமான வசனங்களும் ஓவியமும் பக்கங்களுடன் பொருந்துதல்
  - கவர்ச்சிகரமான பூரணப்பாடு

  எனும் விடயங்கள் மீது கவனஞ் செலுத்துக.
- சொரசொரப்பான தாளில் வரையப்பட்ட ஓவியத்தினை சுவட்டுப் பிரதித்தாளின் உதவியுடன் வரைதற் தாளில் பிரதியிட்டுக்கொள்க.
- உருவங்கள் தெளிவாகத் தெரியும் விதத்தில் திரும்பவும் பென்சிலால் அவற்றை வரைக.
- மனங்களைக் கவரும் விதத்திலான வர்ணங்களை இடுக.
- தேவையான இடங்களில் வெளிப்புறக் கோடுகளை கடும்நிற இரேகைகளால் வரைக.
- பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாணிப்புகளைக் காட்சிப்படுத்துக.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **5.0 :** | **பல்வேறுவகைப்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்திச் சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகளைச் செய்வார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **5.1 :** | அப்புதல், பொளிதல், ஒருங்கிணைத்தல் திறன்கைளப் பயன்படுத்திப் பல்வேறு வகையான சிற்பங்களை வடிவமைப்பார். |
| **செயற்பாடு** | **5.1.1:** | ''களிமண் ஊடகத்தைக் கொண்டு விலங்குருவங்களை ஒருங்கிணைப்போம்'' |
| **பாடவேளைகள்** | : | 03 |

**கற்றற் பேறுகள்** :
- அப்புதலுக்காக உபயோகப்படுத்தும் களிமண் ஊடகத்தின் தன்மையை விளக்குவார்.
- பல்வேறுபட்ட உபகரணங்களை கையாளும் திறமையை வெளிப் படுத்துவார்.
- நிர்மாணித்தவற்றைப் பூரணப்படுத்துவார்.
- ஏனையவர்களது ஆக்கங்களை நயந்து மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 5.1.1.1 இற்குரிய ஆய்வு/ செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் பிரதிகள்.
- மாதிரி விலங்குச் சிற்பங்கள், விலங்குருவங்களைக் கொண்ட படங்கள்/ நிழற்படங்கள்.
- 15cm x 12 cm அளவுடைய மரப் பலகைத்துண்டு
- பலகைக் கீலங்கள், உலோகங்கள் அரியும் வாள்
- பதப்படுத்திய களிமண்
- கடதாசி, பென்சில்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 5.1.1.1** :
- மாதிரிச் சிற்பங்கள், படங்கள், நிழற்படங்களை என்பவற்றை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.
- அவ் ஆக்கங்களைப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- பயன்படுத்தும் வடிவங்களை ஒருங்கிணைக்கும் விதத்தைக் கலந்துரையாடுக. (10 நிமிடங்கள்)

**படிமுறை 5.1.1.2** :
- இணைப்பு 5.1.1.1 இற்குரிய ஆய்வு/ செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- பரும்படிப் படங்கள் வரையத் தேவையான தாள்களை வழங்குக.
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடச்செய்க.
- மாணவர்கள் நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராக்குக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 5.1.1.3** :
- மாணவர் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- சுய மதிப்பீட்டிற்கும், கருத்துக்களை வெளியிடுவதற்கும் சந்தர்ப்பத்தை அளிக்குக.
- விருத்தி செய்யக்கூடிய கருத்துக்களை முன்வைத்து மதிப் பீடொன்றை செய்ய மாணவர்களைப் பணிக்குக.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கலந்துரையாடலில் ஈடுபடுக.
  - நிர்மாணிப்பில் ஈடுபட முன் அதன் பக்கத்தோற்றத்தின் பரும்படிப் படங்களை வரைந்து கொள்வது நிர்மாணிப்பை இலகுவாக்கும் என்பது பற்றி.
  - நிர்மாணிக்கும் செயற்பாட்டை இலகுபடுத்துவதற்காக களி மண்ணை நன்றாகப் பதப்படுத்தியிருக்க வேண்டும் என்பதுடன் சிற்பத்தின் நுட்பமான பகுதிகளை வெளிக்கொணருவதற்குப் பொருத்தமான கருவிகளை உபயோகிக்க வேண்டும் என்பது பற்றியும்

(20 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- அப்புதல் தொழிலுக்கு உபயோகிக்கப்படும் களிமண் ஊடகத்தின் தன்மையை விளக்குதல்
- பலவித உபகரணங்களை கையாளும் திறமையை வெளிப்படுத்துதல்.
- நிர்மாணிப்பைப் பூரணப்படுத்துதல்.
- ஏனையவர்களது ஆக்கங்களை நயந்து மதிப்பிடல்.

**இணைப்பு 5.1.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- ஆசிரியர் காண்பிக்கும் விலங்குருவங்களைக் கொண்ட சிற்பங்கள் / படங்கள் / நிழற்படங்களை நன்றாக அவதானித்துக் கொள்க.
- விலங்கொன்றின் எளிமையான உடல் நிலையொன்றைத் தெரிவுசெய்க.
- நீங்கள் விரும்பிய விலங்குருவங்கள் இரண்டை வரைக. அவை வெவ்வேறு பக்கங்களிலிருந்து தோன்றும் விதத்தினை வரைக. (முன்பக்கத்தோற்றம், பக்கத்தோற்றம், பின்பக்கத் தோற்றம்)
- பரும்படிப் படத்தை வரையும்போது வெளியே நீட்டப்பட்டிருக்கும் சின்னஞ்சிறிய பகுதிகளை இயன்றவு குறைக்குக.
- ஆதாரப் பலகை மீது பதப்படுத்திய களிமண் பகுதிகளை வைத்து பரும்படி படத்தில் உள்ள விதத்தில் விலங்குருவத்தை கட்டியெழுப்புக.
- பொருத்தமான கருவிகளை உபயோகித்து நுட்பமான பகுதிகளை வடிவமைத்துக்கொள்க.
- மேற்பரப்புத் தன்மை பலவிதத்தில் வெளிப்படுமாறு சிற்பத்தை வடிவமைக்குக.
- நீங்கள் பூரணப்படுத்தியதை வகுப்பில் காட்சிப்படுத்துக.

**தேர்ச்சி 5.0 :** **பல்வேறுவகைப்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்திச் சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகளைச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 :** பொளிதல் நுட்பமுறையைப் பயன்படுத்திப் புடைப்புச் செதுக்கலொன்றை வடிவமைப்பார்.

**செயற்பாடு 5.2.1:** 'வேட முகமொன்றை வடிவமைப்போம்.

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**
- புடைப்பு செதுக்கலொன்றால் என்ன என்பதை விபரித்துக் கூறுவார்.
- கீழைத்தேய சாந்திக் கிரிகைகள், கோலம் எனப்படும் நடன வகைகளில் பயன்படுத்தப்படும் வேடமுகங்களின் கலைத்துவப் பண்புகளை உபயோகித்து வேடமுகங்களை நிர்மாணிக்கலாம் என ஏற்றுக் கொள்வார்.
- ரெஜிபோம் ஊடகத்தை உபயோகித்து புடைப்பு செதுக்கலொன்றை நிர்மாணிப்பார்.
- தேவைக்கேற்ற விதத்திலான கருவிகளை தெரிந்தெடுப்பார்.
- முன்னர் பெற்ற அனுபவங்களை இந்நிர்மாணிப்பின்போது உபயோகிப்பார்.
- ஏனையவர்களது ஆக்கங்களை நயந்து மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- சாந்திக்கிரிகைகளின்போது பயன்படுத்தும் பல வகை வேடமுகங்கள் உள்ளடக்கிய நிழற்படங்கள், வடிவமைக்கப்பட்ட வேடமுகங்கள்
- ரெஜிபோம்
- செதுக்கலுக்கு உபயோகிக்கும் உபரகணங்கள், பலகைக் கீலங்கள், இரும்பரியும் வாள் அலகுகளால் அமைத்துக்கொண்ட கருவிகள் (Tools)
- பரும்படிப் படத்தை வரையத் தேவையான பொருட்களும் உபகரணங்களும்
- வர்ணங்கள், தூரிகைகள்
- இணைப்பு 5.2.1.1 இற்குரிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்கள்.

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 5.2.1.1 :**
- வேடமுகங்கள் அடங்கிய நிழற்படங்கள், உருவப்படங்கள், வடிவமைக்கப்பட்ட மாதிரி வேடமுகங்கள் என்பவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவற்றை பார்வையிட மாணவர்களுக்கு சந்தர்ப்பமளிக்குக. பின்னர் அவை தொடர்பாகக் கலந்துரையாடுக.

- சாந்திக் கிரியைகளில் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட வேட முகங்கள் பற்றி வினவுக. அவை தொடர்பான சிறிய விளக்கத்தை அளிக்க.
- ரெஜிபோம் ஊடகத்தை உபயோகித்து வேடமுகமொன்றின் செதுக்கலை இலகுவில் வடிவமைக்கலாம் என்பதை விளக்குக.
- கருவிகள் உபயோகிக்கும் விதம் தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்துக. (15 நிமிடங்கள்)

**படிமுறை 5.2.1.2** :
- 5.2.1.1 இற்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தைக் மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்குக.
- பரும்படிப் படங்கள் வரையத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குக.
- ரெஜிபோம் மற்றும் தேவையான உபகரணங்களைக் மாணவர் களுக்கு வழங்குக.
- வரைந்து கொண்ட பரும்படிப் படத்துக்கிணங்கச் செதுக்கலை நிர்மாணிக்கும்படி மாணவர்களைப் பணிக்க.
- ஒவ்வொரு மாணவனுக்கும் தேவையான உதவிகளை வழங்குக.
- வர்ண ஊடகங்களையும் தூரிகைகளையும் மாணவர்களுக்கு வழங்குக.
- வடிவமைக்கப்பட்ட செதுக்கலைச் செய்து முடித்ததும் அறிவுரை வழங்கி அதனை வர்ணம் தீட்ட வழிகாட்டுக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 5.2.1.3** :
- பூரணப்படுத்திய வடிவமைப்பை வகுப்பில் காட்சிப்படுத்த வாய்ப்பளிக்குக.
- வடிவமைப்பைப் பற்றி சுயமதிப்பீட்டிற்கு வாய்ப்பளிக்குக. பின்னர் விருத்திசெய்து கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக கருத்துகளை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- ரெஜிபோம் ஊடகத்தைப் பயன்படுத்தி புடைப்பு செதுக்கல் ஒன்றை நிர்மாணிக்கும்போது பின்பற்ற வேண்டிய படிமுறைகளை மாணவர் நிர்மாணிப்புகளினூடாக விளக்குக.
- உபகரணங்களையும், ஊடகத்தையும் சரியாக உபயோகப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- புடைப்புச் செதுக்கல் என்றால் என்ன என விளக்குதல்.
- செதுக்கல் நுட்பமுறையில் வேடமுகமொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு பரும்படிப் படங்களை வரைதல்.
- சரியான படிமுறைகளில் ரெஜிபோமைப் பயன்படுத்திப் புடைப்புச் செதுக்கல் ஒன்றை நிர்மாணித்தல்.
- அறிவுரைக்கு ஏற்ப வர்ணம் தீட்டுதல்.
- மற்றவர்களது ஆக்கங்களை நயந்து மதிப்பிடல்.

**இணைப்பு 5.2.1.1**

### ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- உமக்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிப் புடைப்புச் செதுக்கல், படங்கள், பரும்படிப் படங்கள் என்பவற்றை நன்றாக நோக்குக.
- அவற்றில் காணப்படுகின்ற வடிவங்கள், வர்ணங்கள், பூரணப்பாடு, ஊடகப்பயன்பாடு, முப்பரிமாணம் ஆகியவற்றை நன்றாக அவதானித்துக் கொள்க.
- தேசிய சாந்திக் கிரியைகளில் பயன்படுத்தப்படும் வேட முகங்களின் வடிவமைப்புகளைக் கொண்டு ஆக்கபூர்வமான தன்மையுடன் வேட முகமொன்றின் செதுக்கலுக்கான பரும்படிப் படங்களை வரைக.
- நீங்கள் வரைந்துகொண்ட பரும்படிப் படத்தை ரெஜிபோம் மீது இரேகைகளால் வரைந்து கொள்க.
- பொருத்தமான உபகரணங்களை உபயோகித்து, எதிர்பார்க்கும் வடிவத்தினை பெறும் பொருட்டு, தேவையான பகுதிகளை வெளித்தள்ளியும் குடைந்து அகற்றியும் செதுக்கலை வடிவமைத்துக் கொள்க.
- செதுக்கிய வடிவத்தினை பாரம்பரிய வேட முகங்களுக்கு இடும் வர்ணங்களை உபயோகித்து, வர்ணம் தீட்டுக.
- நிர்மாணித்த ஒவ்வொரு செதுக்கலையும் ஆசிரியரின் அறிவுரைக்கேற்ப வகுப்பில் முன்வைக்குக.

**தேர்ச்சி 5.0 :** **பல்வேறுவகைப்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்திச் சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகளைச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 5.3 :** ஒருங்கிணைத்தல் நுட்பமுறையைப் பயன்படுத்தி சிற்பங்களை நிர்மாணிப்பார்.

**செயற்பாடு 5.3.1:** ''கழிவுப் பொருட்களைக் கொண்டு வீட்டை அலங்கரிக்கக்கூடிய புதிய பாணியிலான நிர்மாணிப்பொன்றில் ஈடுபடுவோம்.''

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள் :**
- ஒருங்கிணைத்தல் நுட்பமுறையைப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- கழிவுப்பொருட்களை ஒருங்கிணைத்து நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.
- ஒருங்கிணைக்கும்போது உபயோகிக்கக்கூடிய முறைகளை கையாண்டு பார்ப்பார்.
- ஊடகங்களின் தனித்துவப் பண்புகளைத் தேடியறிவார்.
- வெவ்வேறு வடிவங்களை ஆக்கபூர்வமாக ஒருங்கிணைக்கும் திறமையை வெளிப்படுத்துவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- மாதிரிப் படங்கள், வடிவமைக்கப்பட்ட மாதிரி சிற்பங்கள்
- கழிவுப்பொருட்கள் (பிளாஸ்டிக், தகடு, தகரம், இரும்பு, பலகைத் துண்டுகள், பலகைக் கீலங்கள், கம்பி, ஆணி, பொத்தான், வேறு பொருட்கள்)
- கம் வகை (பிசின்) தீப்பெட்டி, மெழுகுவர்த்திகள்
- தூரிகைகள், வர்ணங்கள்
- குரடு, தகடு வெட்டும் கத்தரிக்கோல் ஒன்று

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 5.3.1.1 :**
- மாதிரிப் படங்களையும் சிற்பங்களையும் மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக. அவை பற்றிக் கலந்துரையாடுக.
- மாதிரிகள், படங்கள், நிழற்படங்கள் என்பவற்றையும் மாணவர் களுக்கு காண்பிக்குக.
- பெற்றுக்கொண்ட பல்வேறுபட்ட பொருட்களின் பலவகைத் தன்மைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் கருத்துகளை பரிமாறிக்கொள்ளுக.
- ஒவ்வொரு பொருளையும் ஆக்கபூர்வமாக பொருத்திக்கொள்ளும் பொறிமுறைகள் தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்துக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 5.3.1.2** :
- இணைப்பு 5.3.1.1 இற்குரிய ஆய்வு/செய்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- தரவிருத்தி உள்ளீட்டில் பெற்றுக்கொண்ட பொருட்களையும் மாணவர்களுக்கு வழங்குக.
- ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிட்டவாறு ஒருங்கிணைத்தல் நுட்பமுறையினை உபயோகித்து வீட்டை அலங்கரிக்கக்கூடிய நிர்மாணிப்பொன்றில் ஈடுபடும்படி மாணவர்களை அறிவுறுத்துக.
- மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குக.
- மாணவர்கள் வடிவமைத்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்த தயாராகுக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 5.3.1.3** :
- மாணவர்கள் நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவை தொடர்பான கருத்துகளை முன்வைக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்குக.
- மேலும் விருத்தி செய்யக்கூடிய விடயங்களை வலியுறுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடி தேவையான அறிவுறுத்தல்களை வழங்குக.

இவ்வாறான நிர்மாணிப்பில் ஈடுபடும்போது ஏற்படும் தொழினுட்ப சிக்கல்நிலைகள் தொடர்பான கருத்துகளை பரிமாறிக் கொள்க.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- ஒருங்கிணைக்கும் நுட்பமுறை தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- கழிவுப்பொருட்களை பொருத்தமாக ஒருங்கிணைத்து நிர்மாணிப்பில் ஈடுபடல்.
- ஒருங்கிணைக்கும் செயற்பாட்டைக் கொண்டு வீட்டின் அழகுக்காக வைக்கப்படும் நிர்மாணிப் பொன்றை செய்தல்.
- வர்ணம் தீட்டும் நுட்பமுறைகள் பலவற்றை உபயோகித்தல்.

**இணைப்பு 5.3.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவம்

- உமக்கு வழங்கப்பட்டுள்ள மாதிரியமைப்புகளையும் படங்களையும் நன்றாக நோக்குக. அத்துடன் வழங்கப்பட்ட பொருட்களையும் தேவையின் பொருட்டு பகிர்ந்து கொள்க.
- உம்மிடம் உள்ள பல பொருட்களின் துணையுடன் வீட்டை அலங்கரிக்கக்கூடிய அலங்காரப் பொருளொன்றை வடிவமைக்க பரும்படிப் படமொன்றை வரைந்து கொள்க.
- தேவைப்படும் கருவிகளை தெரிவுசெய்து கொள்க.
- வரைந்து கொண்ட பரும்படி படத்துக்கு ஏற்ப பொருத்தமான பொறி முறைகளை உபயோகித்து கழிவுப்பொருட்களை ஒருங்கிணைக்குக. (கட்டுக, ஒட்டுக, சுட்டுப் பொசுக்கி ஒட்டுக)
- தேவையான விதத்தில் வர்ணங்கள் இட்டு அலங்கரித்துக்கொள்க.
- நிர்மாணிப்பை பூர்த்திசெய்ததும் அவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட தேசிய, சர்வதெச ரீதியில் தெரிவுசெய்த கலைஞர்களின் கலையாக்கங்களை வெகுசன தொடர்பு சாதனங்களினூடாகக் கண்டறிந்து, இரசித்து விமர்சன ரீதியில் தமது சுய ஆக்கங்களுக்குப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 :** இலங்கையில் பாரம்பரிய வேடமுகக் கைத்தொழில் தொடர்பான கலை நிர்மாணிப்புகளை கற்றறிந்து நயந்துரைப்பார்.

**செயற்பாடு 6.1.1:** வேடமுகக் கலை

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**

- வேடமுகக் கைத்தொழிலுக்குப் பிரசித்திபெற்ற பிரதேசங்களைக் குறிப்பிடுவார்.
- வேடமுகக் கைத்தொழிலுக்கு உபயோகப்படுத்தும் மரவகைகளைக் குறிப்பிடுவார்.
- பாரம்பரிய வேடமுகமொன்றை நிர்மாணிக்க உதவும் நுட்பமுறைகள், கலைப்பாணிகள் என்பன விபரித்துக் கூறுவார்.
- வேடமுகங்களை நிர்மாணிக்க அடிப்படையாக அமைந்த காரணிகளை விளக்கத்துடன் வேடமுக வகைகளைக் குறிப்பிடுவார்.
- பாரம்பரிய வேடமுகங்களின் கலைப்பண்புகளை மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 6.1.1.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவப் பிரதிகள்
- இணைப்பு 6.1.1.2 இற்குரிய வாசிப்புப்படிவப் பிரதிகள்
- பாரம்பரிய வேடமுகக் கைத்தொழிலுக்குரிய உருவப்படங்கள்/ நிழற்படங்கள்
- அந்நிர்மாணிப்புகள் அடங்கிய ஒளிநாடாக்கள், இறுவட்டுக்கள், கணினி இயந்திரங்கள்.

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.1.1.1 :**

- பாரம்பரிய வேடமுகக் கைத்தொழிலுக்கான உருவப்படங்கள்/ நிழற்படங்கள் என்பவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அக்கைத்தொழிலின் செயற்பாடுகளை விளக்கும் ஒளி நாடாக்கள்/ இறுவட்டுகளை கணினி இயந்திரத்தின் உதவியுடன் பார்வையிடச் செய்க.
- இக்கைத்தொழிலுக்கான தொழில்நுட்ப முறைகள், நுட்பத்திறன்கள், உபகரணங்கள் இருப்பது பற்றி விளக்குக.
- பல தேவைகளின் பொருட்டு வேடமுகங்கள் நிர்மாணிக்கப்படுகின்றதென்பதை உதாரணங்கள் மூலம் விளக்கி சிறு கலந்துரையாடலில் ஈடுபடுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.1.2** :
- இணைப்பு 6.1.1.1 இற்குரிய செயற்பாட்டு படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.1.1.2 இற்குரிய வாசிப்புப் படிவங்களை மாணவர் களுக்கு அளிக்குக.
- மாணவர்களை மூன்று குழுக்களாக்குக.
- கருத்துகளை பரிமாறிக்கொள்ள வாய்ப்பளிக்குக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.1.3** :
- மாணவரது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த வாய்ப்பளிக்குக.
- அவற்றின் திருத்தமான தன்மையைக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடும் அதேவேளை மாணவர்கள் கண்டறிந்த விடயங்களை திருத்திக்கொள்ள வாய்ப்பளிக்குக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- வேடமுகக் கைத்தொழிலுக்குப் பிரசித்திபெற்ற பிரதேசங்களையும் அதற்கு உபயோகப்படுத்தும் மூலப்பொருள்களையும் குறிப்பிடுதல்.
- பாரம்பரிய வேடமுகக் கைத்தொழிலில் உபயோகப்படுத்தும் தொழில் நுட்பமுறைகள், கலைப் பாணி, உபகணரங்கள் என்பவற்றை விளக்குதல்.
- வேடமுகங்கள் நிர்மாணிக்க ஏதுவான விடயங்களை விளக்கி, வேடமுக வகைகளையும் இனங்காணுதல்.

**இணைப்பு 6.1.1.1**

## ஆய்வு/செயற்பாட்டுப் படிவம்

- இணைப்பு 6.1.1.2 இற்கான வாசிப்புப்படிவத்தின் உருவப்படங்களை நோக்குக.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட் செயற்பாட்டில் ஈடுபடுக.

  குழு 1:

  வேடமுக கைத்தொழிலுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற பிரதேசங்களையும் அதற்கு உபயோகப்படுத்தும் மூலப்பொருட்களையும் குறிப்பிடுக.

  குழு 2:

  பாரம்பரிய வேடமுகக் கைத்தொழிலில் உபயோகப்படுத்தம் தொழில்நுட்ப முறைகள், நுட்ப முறைகள், உபகரணங்கள் பற்றி விளக்குக.

  குழு 3:

  வேடமுகங்களை நிர்மாணிக்க அடிப்படையாக அமையும் காரணிகளை விளக்கி, முகமூடி வகைகளையும் குறிப்பிடுக.
- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்குக.
- ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்க.

**இணைப்பு 6.1.1.2**

## வாசிப்புப் படிவம்

## இலங்கையின் பாரம்பரிய வேடமுகக்கலை

### வரலாற்றுப் பின்னணி

உலகின் பல்வேறு நாடுகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலும் வரலாற்றுக்கு முந்திய, விவசாயத்தில் ஈடுபட்ட காலங்களிலும் வேடமுகம் உபயோகிக்கப்பட்டது. மழை, உணவு (வேட்டையாடல், பயிர்ச்செய்கை) வியாதி (பாதுகாப்பு) போன்ற அன்றாட கருமங்கள் பலவற்றுக்காக வேண்டி கிரிகைகள் செய்வதிலும் அச்சந்தர்ப்பங்களில் வேடமுகங்களை அணிவதில் ஈடபட்டனர். வேட்டையாடி வாழ்ந்த கோத்திர மக்கள் விலங்குகளை பீதியடையச் செய்யவும் விலங்குகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளவும் எண்ணி வேட முகங்களை அணிந்தனர்.

### இலங்கையில் பிரபல்யமடைந்துள்ள பிரதேசங்கள்

- தென் மாகாணத்தின் அம்பலாங்கொடை பிரதேசம் பாரம்பரிய வேடமுகக் கைத்தொழலுக்குப் பிரசித்திபெற்றது. பெந்தர, மிரிஸ்ஸ, ரைகம் கோரளை, மதுகம எனும் பகுதிகளிலும் இக்கைத்தொழில் காணப்படுகின்றது.

### மூலப்பொருட்கள்

- வேடமுக நிர்மாணிப்புக்காக கடல் மாங்காய், தேமா போன்ற மரங்களை பழைமையான கலைஞர்கள் உபயோகித்துள்ளனர்.

### வேடமுக நிர்மாணிப்பு

மரக்குற்றியை வெட்டி பட்டை உரித்து துண்டுகளாக்கப்படும் செயற்பாடே முதற் படிமுறையாக அமைகிறது. இது ''கனகெப்பீம'' என கூறப்படும். பின்னர் மரப்பலகையின் வைரமான பகுதிகள் வெட்டி தட்டையாக்கப்படும். இது ''பாயம் பேகீம'' எனப்படும். இவ்வாறு அமைத்துக்கொள்ளப்பட்ட பலகைமீது முகமூடியின் பருமட்டான வடிவம் குறிக்கப்படும். பின்னர் முகத்தின் அளவுக்கு அப்பலகை செதுக்கி, குறைத்து செப்பனிடப்படும்.

பின்னர் செதுக்குவதற்கும் வர்ணமிடுவதற்கும் இலகுவான விதத்தில் மரப்பலகையில் பால் வடியும் தன்மையை அகற்றுவதற்காக இளவெயிலில் உலர வைக்கப்படும். இது ''கிரி ஹிந்தவீம'' (பால் உலரவிடல்) எனப்படும்.

முகத்தின் வடிவம் வெளிக்கொணரப்பட்டு கண் போன்ற மென்மையான பகுதிகளைக் குறித்தல் ''லக்குணு கெப்பீம்'' எனப்படும். மனிதன் ஒருவனுடைய முகத்துக்கு ஏற்றவாறு உட்பக்கமாக குடைந்து அகற்றப்படும். ஆதிகாலத்தில் நீண்டகால பாவனைக்காக இது மீண்டும் மூன்று மாதங்களுக்கு புகைக்கூட்டில் இட்டு உலரவிட்டனர்.

பின்னர் முகத்தக்குத் தேவையான ஏனைய அங்கங்களான தலைமயிர், தாடை, மீசை, பல், கிரீடம் போன்றவை தனியாக நிர்மாணிக்கப்பட்டு பொருத்தப்படுகின்றன.

## வேடமுகங்களைச் சித்தரித்தல்

- வேடமுகங்களின் சித்தரிப்புப் பணி ஆரம்பிக்க முன் அவற்றில் வெள்ளை நிறத்தில் பூச்சு பூசப்படும். வெண்களி அல்லது ''மகுலு மெட்டி'' எனப்படும் ஒருவகை வெண்களி மண்ணைக் கரைத்து வடித்து தயாரிக்கப்படும் இப்பூச்சு ''அல்லியாது'' என்றழைக்கப்படும்.

- இந்நிர்மாணிப்பில் ஈடுபடும் கலைஞர்கள் மஞ்சள் வர்ணத்தை ''ஹிரியல்'' (ஒருவகை மண்) மூலமும் சிவப்பு நிறத்தை 'சாதிலிங்கம் (ஒருவகை மண்) மூலமும் வெள்ளையை ''மகுலு மெட்டி'' எனப்படும் ஒருவகை வெண்களி மூலமும் பெற்றுக்கொண்டனர். போவிட்டியா, கீ கரிந்திய, ஆவாரை, பயற்றை ஆகிய கொடிகளில் இருந்து ஊதா, பச்சை வர்ணங்களைப் பெற்றனர். (தற்காலத்தில் வேட முகங்களை வர்ணமிடுவதற்கு பெரும்பாலும் செயற்கை வர்ணங்கள் உபயோகப்படுகின்றன.)

- ஆதிகாலத்தில் வர்ணம் பூசப்பட்ட பின்னர் நீண்டகால பாவனை, ஈரலிப்புத்தன்மைக்கு ஈடுகொடுத்தல், பளபளப்பான மேற்பரப்புத் தன்மையைப் பேணல் எனும் நோக்காகக் கொண்டு 'தொரண' எனப்படும் எண்ணை வகைத் தாவரத்தில் இருந்து பெறப்பட்ட என்ணெயும் 'ஹல்' எனப்படும் தாவரத்தில் இருந்து பெறப்படும் குங்கிலியமும் கொண்ட கலவை பூசப்படும்.

## வேடமுக வகைகள்

- பாரம்பரிய சாந்திக் கிரிகைகளுக்காகவும் கிராமிய நாடகங்களுக்காகவும் பாரம்பரிய வேடமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இவ்விரண்டு நோக்கங்களுக்காக அமைக்கப்படும் வேடமுக வகைகள்
  - அரச முகம்
  - இராட்சத முகம்
  - இயக்கர் முகம்
  - நாகக் கன்னி முகம்
  - சன்னி முகம்
  - 'கோலம்' எனப்படும் முகம்

## உசாத்துணைகள்:


- 'கோலம்' முகமும் இலங்கையின் வேடமுகங்களும் - கலாநிதி. எம்.எச். குணதிலக்க
- சிங்கள பாரம்பரிய கோலம் - காமினி தேல பண்டார



வேட முகங்கள் நிர்மாணிக்கப்படும் சந்தர்ப்பங்கள்









வேட முகங்கள் நிர்மாணிக்கப்படும் சந்தர்ப்பங்கள்



அரசனும் அரசியும்




நாக இராட்சதம்



குருளு இராட்சத முகம்



கறா யக்கா



சுரம்பாவள்ளி முகம்



கொற சன்னி



தேவ சன்னி



நாக சன்னி



கிராமத்து விதான ஆரச்சி



ஹேவா கோலம்
(படையினரின்)



பறங்கிக் கோலம்

புகைப்பட மேற்கோள்: வேடமுகக் கலை, ஜே.டபிள்யூ. பத்ராநந்த

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட தேசிய, சர்வதேச ரீதியில் தெரிவுசெய்த கலைஞர்களின் கலையாக்கங்களை வெகுசன தொடர்பு சாதனங்களினூடாகக் கண்டறிந்து, இரசித்து விமர்சன ரீதியில் தமது சுய ஆக்கங்களுக்குப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 :** அலங்கார மரச்செதக்கல்களைக் கொண்ட இந்து ஆலய கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவார்.

**செயற்பாடு 6.2.1:** ''ஆலய விழாக்களில் உபயோகப்படுத்தப்படும் செதுக்கல்களைக் கொண்ட வாகனங்களை அறிந்து கொள்வோம்''.

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

- மரவாகனங்கள் இந்து மதத்தவர்களின் நிர்மாணிப்புகள் எனக் கூறுவார்.
- மரவாகனங்கள் தொடர்பான வரலாற்றை விபரித்துக் கூறுவார்.
- மரவாகன வகைகளைக் குறிப்பிடுவார்.
- செதுக்கலைக் கொண்ட சிறப்பு வாய்ந்த மரவாகனங்கள் காணப் படும் இடங்களைக் குறிப்பிடுவார்.
- மஞ்சம், தேர், சிங்கவாகனம், குதிரை வாகனம் போன்றவற்றின் தன்மையை விளக்குவார்.
- மரவாகன செதுக்கல்களில் உபயோகிக்கும் அலங்கார வேலைப் பாடுகளைக் குறிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 6.2.1.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவப் பிரதிகள்
- மஞ்சம், தேர், சிங்கவாகனம், குதிரை வாகனம் ஆகியன கொண்டுள்ள நிழற்படங்களும் இறுவட்டுக்களும்
- கணினி இயந்திரங்கள், பல்லூடக எறிவை இயந்திரங்கள்
- இணைப்பு 6.2.1.2 இற்குரிய வாசிப்புப்படிவம்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.2.1.1 :**

- நிழற்படங்கள், இறுவட்டுக்கள் என்பன உபயோகித்து பாடத்தினுள் பிரவேசிக்குக.
- இந்நிர்மாணிப்புகள் தொடர்பாக மாணவர் அறிந்த விடயங்களை விசாரிக்குக.
- மதத்துடன் தொடர்பான நிர்மாணிப்புகளாயினும் இவை கலைத்துவ பண்புகள் அதிகம் கொண்டவை என்பதை பின்வரும் தலைப்புகளின் கீழ் கலந்துரையாடுக.
  - வரலாற்றுப் பின்னணி
  - அந்தந்த மரவாகனங்களின் பண்புகள்
  - உபயோகித்த அலங்கார வேலைப்பாடுகள்

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.2.1.2** :
- இணைப்பு 6.2.1.1 இற்குரிய செயற்பாட்டு படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.2.1.2 இற்குரிய வாசிப்புப் படிவங்களை மாணவர் களுக்கு அளிக்குக.
- வகுப்பிலுள்ள மாணவர்களை மூன்று குழுக்களாக்கிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள வாய்ப்பளிக்குக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 6.2.1.3** :
- மாணவர் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க வாய்ப்பளிக்குக.
- அவற்றின் திருத்தமான தன்மையைக் கலந்துரையாடுக.
- சரியான தகவல்களை சகல மாணவர்களும் குறித்துக் கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்பளிக்குக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.
- மரவாகனங்கள் தொடர்பான வரலாற்றை விபரித்துக்கூறுதல்.
- மரவாகன வகைகளைக் குறிப்பிடுதல்.
- செதுக்கல்களைக் கொண்ட சிறப்பு வாய்ந்த மரவாகனங்கள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுதல்.
- மஞ்சம், தேர், சிங்கவாகனம், குதிரை வாகனம் போன்றவற்றின் தன்மையையும் கலைத்துவப் பண்புகளையும் விளக்குதல்.
- மர வாகன செதுக்கல்களில் உபயோகிக்கும் அலங்கார வேலைப்பாடுகளையும் அவற்றின் கலைத்துவப் பண்புகளையும் விளக்குதல்.

**இணைப்பு 6.2.1.1**

## ஆய்வு/செயற்பாட்டுப் படிவம்

- இணைப்பு 6.2.1.2 இற்கான வாசிப்புப்படிவத்தை நன்றாக வாசிக்குக.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்ட செயற்பாட்டில் ஈடுபடுக.

  குழு 1:

  மரவாகனங்களின் வரலாற்றுப் பின்னணியையும் அவற்றின் வகைகளையும் குறிப்பிடுக.

  குழு 2:

  சிங்கவாகனம், குதிரை வாகனம் என்பவற்றின் கலைத்துவப் பண்புகளை விபரித்துக் கூறுக.

  குழு 3:

  மஞ்சம், தேர் ஆகியவற்றின் கலைத்துவப் பண்புகளை விபரித்துக் கூறுக.

- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்குக.
- ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்க.

**இணைப்பு 6.2.1.2**

## வாசிப்புப் படிவம்

## இந்து மதப் பண்பாடுகளுடன் இணைந்த மரச் செதுக்கல்கள்

### வரலாற்றுப் பின்னணி

சங்க காலத்தில் இருந்து மரச்செதுக்கல்கள் இருந்ததாக 'மணிமேகலை' எனப்படும் இந்திய வரலாற்று நூல் எடுத்துக்கூறுகின்றது. மரம், யானைத்தந்தம், களிமண் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட சிலைகள் இருந்ததாக அதிலுள்ள பாடலொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி மரத்தால் ஆன சிலைகள் இருந்திருப்பின் அவை செதுக்கல்களாக இருந்திருக்கும் என எண்ணலாம்.

பல இலக்கிய மூலங்களில் இந்து மதத்துடன் தொடர்புடைய மரச் செதுக்கல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. செதுக்குதல், உருவங்களை வரைதல், வர்ணம் தீட்டுதல், அலங்கார வேலைப்பாடுகளின் உபயோகம் தொடர்பாகவும் இவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலுமே மரவாகனங்கள் வளர்ச்சியடைந்தன என்பது அறிஞர்களது கூற்றாகும்.

### செதுக்கப்பட்ட நிர்மாணிப்புகளும் அவற்றின் உபயோகமும்

இந்து ஆலயங்களில் பல விழாக்கள் நடைபெறுகின்றன. அந்தந்த விழாக்களுக்குச் சிறப்புப்பெற்ற வாகனங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அதிக வாகனங்கள் மரத்தால் அமைக்கப் பட்டிருப்பதால் இவை மரவாகனம் என குறிக்கப்படுகின்றன. இவை செதுக்கு வேலைப்பாடுகளாலேயே அலங்கரிக்கப்பட்டுள்ளன. இந்து மதம் பரவலடையத் தொடங்கியதுடன் இலங்கையிலும் கோயில்களில் மரவாகனங்கள் உருவாக்கப்பட்டள்ளன. இவை தெய்வங்களுக்காக நிர்மாணிக்கப்பட்டவையாகும். தெய்வ உருவங்களை இவற்றில் வைத்து சுற்றுப் பிரகாரத்தில் கொண்டு செல்வர்.

வாகன வகைகள் முக்கியமாக இருவகைப்படும்.

1. வடம் எனப்படும் கயிற்றால் இழுத்துச் செல்லப்படும் வாகனங்கள்.
   உதாரணம்: தேர், மஞ்சம், கைலாச வகாகனம், சப்பறம்
2. மனிதர்களால் தூக்கிச் செல்லப்படும் வாகனங்கள்
   உதாரணம்: சிங்க வாகனம், நாக வாகனம், அன்ன வாகனம், எலி வாகனம் (மூசிக), மயில்வாகனம், குதிரை வாகனம்

### செதுக்கல் வேலைப்பாடுகள்

மரத்தால் செதுக்கி வர்ணமிடப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. விலங்குருவங்களும் பட்சி உருவங்களும் இங்கே உபயோகிக்கப்பட்டுள்ளன. யானை, சிங்கம், குதிரை போன்ற உருவங்களும், குள்ள வடிவில் உள்ள மனித உருவங்களும் (முயலகன்), யாழி (பல விலங்குகளை உபயோகித்து உருவாக்கப்பட்டது), காமதேனு (பெண் தலையும் பசுவின் உடலையும் கொண்ட) போன்ற கற்பனை வடிவில் அமைந்த சிறப்பான உருவங்களும் உபயோகிக்கப்பட்டுள்ளன. மலர் அலங்காரங்கள் வர்ணங்களிட்டு கவர்ச்சிகரமாக அமைக்கப்பட்டுள்ளன.

## தற்போது இலங்கையில் காணப்படும் செதுக்கல்களுடனான சிறப்பான மர வாகனங்கள்

### சிங்க வாகனம்





இதனை யாழ்ப்பாணத்தின் மூளாயிலமைந்த சித்தி வினாயகர் கோயிலில் காணலாம். 20ஆம் நூற்றாண்டில் வட்டுக்கோட்டை சின்னட்டியார் ஆசாரியால் நிர்மாணிக்கப்பட்டது.

### கலைத்துவப் பண்புகள்

மோடிப்படுத்தப்பட்ட உருவமொன்றாகும். மிகவும் நுட்பமான முறையில் செதுக்கப்பட்டுள்ளது. துருத்தி நிற்கின்ற உருட்டு விழிகள், சிவந்த முரசுடைய திறந்த வாய், அவற்றில் காணப்படும் சிறிய மற்றும் நெடுத்த பல் வரிசை, முகத்துக்குச் சமாந்தரமாக வளைந்தெழுந்து வில்போல நிற்கும் வால், சீற்றத்தையும் கம்பீரத்தையும் வெளிப்படுத்துகிறது. அடுக்கடுக்கான மாலைகள், பதக்கங்கள் என்பவற்றையுடைய கழுத்தணி வரிசைகளில் பூவலங்காரங்கள் இடப்பட்டுள்ளன. வைத்திழைத்த கண்ணாடி புடைப்பலங்காரங்கள் ஒளிதெறித்து அதற்கொரு புராணிக விண்ணுலகப் பாங்கைத் தருகிறது.

### குதிரை வாகனம்





யாழ்ப்பாண நல்லூர் கந்தசாமி கோயிலில் இதனைக் காணலாம். திரு விடை மருதூர் கோவிந்தசாமி ஆசாரியாரால் 1963-1964 காலப்பகுதியில் செதுக்கப்பட்டது.

### கலைத்துவப் பண்புகள்

நேர்முகத் தன்மையானது. யுத்தம் முதலான செயற்பாடுகளை நோக்கி ஆக்கிரோசமாகப் பாயும் தோரணையுடையது. அதன் உடற்பாரத்தை பின்னால் வைத்தல் என்ற பொறிமுறை பேணப் பட்டுள்ளது. இது, ஆக்கிரோசம், கம்பீரம், மிடுக்கு எனும் பண்புகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. இது உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு நிர்மாணிப்பாகும்.

### மஞ்சம்





யாழ்ப்பாண இணுவில் கந்தசாமி கோயிலில் இதனைக் காணலாம். இது 1909 - 1910 காலப்பகுதிக்குரிய மஹோற்சவ நாட்களில் ஒன்றான மஞ்சத் திருவிழாவுக்கான விசேட ஊர்தியாகும். இது இழுத்துச் செல்ல இலகுவான விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

### ஊர்தியின் தன்மையும் கலைத்துவப் பண்புகளும்

இவ்வூர்தி மரச் செதுக்கல்களைக் கொண்டது. இது அமைப்பு ரீதியாக கீழ்ப்பகுதி, நடுப்பகுதி, மேல் பகுதி என மூன்றாக வகுக்கப்படும். கீழ்ப்பகுதியின் சக்கரங்களுக்கு மேல் அடுக்குகளை யுடையது. இது கடவுளர்கள், விலங்குகள், பறவைகள், பூதங்கள் மற்றும் தாமரை, பலாப்பெத்தி முதலிய உடையதாகக் காணப்படுகின்றன.

நடுப்பகுதி கடவுளர்களை வைக்கும் பீடத்தோடு ஆரம்பமாகிறது. அதனை தேவாசனம் என்பர். தேவாசனப் பகுதியையும் மேற்பகுதியையும் இணைக்கும் தூண்கள் பவளக்கால்கள் எனப்படும். இந்தப் பவளக் கால்களுடைய வெளிப்பக்கங்களில் தட்டையான, நெடுத்த யாழிகள் சுற்றி வர அமைக்கப்பட்டுள்ளன.

மேற்பாகம் விமானம் எனப்படும். இது கோயிலின் கோபுர பண்புகளைக்கொண்டது. இது பல அடுக்குகளைக் கொண்டுள்ளது. விமானத்தின் அடுக்குகளின் உள்ளே தெய்வ உருவங்கள் (விக்கிரகங்கள்) காணப்படுவதுடன் வெளியே விலங்குருவங்களும் மலர்கொடி அலங்காரங்களும் காணப்படுகின்றன.

## தேர்









மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சிறப்புத் தேரொன்று காணப்படுகின்றது. இது நூற்றாண்டுகளைக் கடந்தது.

### தேரின் அடிப்படைத் தோற்றமும் கலைத்துவப் பண்புகளும்

இத் தேர் சிற்பங்கள் இலங்கையில் காணப்படும் காலத்தால் முற்பட்ட மரச் செதுக்கு பாரம்பரியத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அங்குள்ள தேர்களில் சிவனுக்குரிய தேர் அதிக பழைமை வாய்ந்தது.

தேர்களில் மூலத்ரே், கட்டுத்தேர் என இரு வகைகள் உண்டு. இவற்றின் அடிப்படை அமைவு வட்டச்சுற்றுடையது. இவ்வட்டங்கள் மேலே செல்லச் செல்ல அவற்றின் விட்டங்கள் குறைந்து ஒடுங்குகின்றன. இத்தேர்களும் மஞ்சம் போன்று மூன்று பகுதிகளைக் கொண்டது. மூலத்தேர் என்பது கீழிருந்து மேலே வரைக்கும் ஒட்டுமொத்தமாக நிரந்தரமாமகப் பொருத்தப்பட்டிருக்கும் அமைப்பை உடையது.

கட்டுத் தேரானது கீழ்ப்புறத்தை மட்டுமுடையதாகவும் மேற்பக்கம், நடுப்பக்கம் ஆகியன தேரோட்டத்தின்போது மட்டும் தற்காலிகமாகப் பொருத்தப்படுவதாகவும் அமையும். அவ்வாறான தேர்களில் மேற்பாகம் துணியால் சுற்றிக் கட்டப்படும். துணியால் வேயப்படும் பகுதி பல வர்ணத் துணிகள், கொடிகள் ஆகியவற்றுடன் காணப்படுகிறது.

தேர்களின் அடித்தளமானது புராணக் கதைகள், கடவுளர் விக்கிரகங்கள், யாழிகள், அன்னங்கள், பூத (குள்ளர்) வரிசைகளும் சிருங்கார இரசனையுடைய அலங்கார வேலைப்பாடுகளும் கொண்டுள்ளது.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட தேசிய, சர்வதெச ரீதியில் தெரிவுசெய்த கலைஞர்களின் கலையாக்கங்களை வெகுசன தொடர்பு சாதனங்களினூடாகக் கண்டறிந்து, இரசித்து விமர்சன ரீதியில் தமது சுய ஆக்கங்களுக்குப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.3 :** இலங்கையின் பாரம்பரிய அரக்குத் கைத்தொழில் தொடர்பான கலை நிர்மாணிப்புகளை கற்றறிந்து நயந்துரைப்பார்.

**செயற்பாடு 6.3.1:** ''அரக்கு நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்''.

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**
- அரக்குத் தொழிலுக்குப் பிரசித்திபெற்ற பிரதேசங்களைக் குறிப்பிடு வார்.
- அரக்குத் தொழிலுக்குத் தேவையான, அரக்கு தயாரிக்கும் முறை யை ஒழுங்கு முறையில் குறிப்பிடுவார்.
- அலங்கார வேலைப்பாடுகளுக்கு அரக்கு உபயோகப்படுத்தப்படும் இரு பிரதான நுட்பமுறைகளை விளக்குவார்.
- அரக்கை உபயோகித்து பொருட்களை அலங்கரிக்கும் விதம் பற்றி விளக்குவார்.
- அரக்கை உபயோகித்து அலங்கரிக்கப்படும் பொருட்களையும் அலங்கார வேலைப்பாடுகளையும் குறிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 6.3.1.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவப் பிரதிகள்
- இணைப்பு 6.3.1.2 இற்குரிய வாசிப்புப்படிவப் பிரதிகள்
- அரக்குத் தொழிலுக்குரிய உருவப்படங்கள்/நிழற்படங்கள்
- அந்நிர்மாணிப்புகள் அடங்கிய ஒளிநாடாக்கள், இறுவட்டுக்கள், கணினி இயந்திரங்கள்.

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.3.1.1 :**
- அரக்குத்தொழிலுக்கான உருவப்படங்கள்/ நிழற்படங்கள் என்பவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அத்தொழில் நிர்மாணிப்புகளை விளக்கும் ஒளிநாடாக்கள், இறுவட்டுகளை கணினி இயந்திரத்தின் துணையுடன் பார்வையிடச் செய்க.
- அரக்குத் தொழிலுக்கான சிறப்பு உபகரணங்கள், தொழில்நுட்ப முறைகள், பலவகைப் பாணிகள் இருப்பது பற்றி விளக்குக.
- அரக்கை உபயோகித்து பல பொருட்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளது பற்றி உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.3.1.2** :
- இணைப்பு 6.3.1.1 இற்குரிய செயற்பாட்டு படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.3.1.2 இற்குரிய வாசிப்புப் படிவங்களை மாணவர் களுக்கு அளிக்குக.
- மாணவர்களை மூன்று குழுக்களாக்குக.
- கருத்துகளை பரிமாறிக்கொள்ள வாய்ப்பளிக்குக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.3.1.3** :
- மாணவரது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த வாய்ப்பளிக்குக.
- அவற்றின் திருத்தமான தன்மையைக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடும் அதேவேளை மாணவர்கள் கண்டறிந்த விடயங்களை திருத்திக்கொள்ள வாய்ப்பளிக்குக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.
- அரக்குக் கைத்தொழிலுக்கு புகழ்பெற்ற பிரதேசங்களையும் அதற்காக உபயோகிக்கப்படும் மூலப்பொருள்களையும் இனங்காணுதல்.
- அரக்குத் தொழிலின் தொழில்நுட்ப முறைகள், பாணி வகை, உபகரணங்கள் பற்றி விளக்குகதல்.
- அரக்கை உபயோகித்து அலங்கரிக்கப்படும் பொருட்களும் அவற்றின் அலங்கார வேலைப் பாடுகளையும் குறிப்பிடுதல்.

**இணைப்பு 6.3.1.1**

## ஆய்வு/செயற்பாட்டுப் படிவம்

- இணைப்பு 6.3.1.2 இற்கான வாசிப்புப்படிவத்தின் உருவப்படங்களை நோக்குக.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்ட செயற்பாட்டில் ஈடுபடுக.

  குழு 1:

  அரக்குத்தொழிலுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற பிரதேசங்களையும் அதற்கு உபயோகப்படுத்தும் மூலப்பொருள்களையும் குறிப்பிடுக.

  குழு 2:

  அரக்குத்தொழிலின் தொழில்நுட்ப முறைகள், கலைப்பாணி, உபகரணங்கள் பற்றி விளக்குக.

  குழு 3:

  அரக்கை உபயோகித்து அலங்கரிக்கரிக்கப்படும் பாவனைப் பொருட்கள் அவற்றில் இடப்படும் அலங்கார வேலைப்பாடுகள் என்பவற்றைக் குறிப்பிடுக.
- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்குக.
- ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்க.

**இணைப்பு 6.3.1.2**

## வாசிப்புப் படிவம்

### வரலாற்றுப் பின்னணி

- கண்டிக் காலத்தில் அரக்குத் தொழில் பிரபல்யமடைந்து காணப்பட்டதாக சான்றுகள் உள்ளன. ''கோட்டல்பத்த'' எனப்படும் அரச தொழில்நுட்பப் பிரிவில் இவர்கள் பணியாற்றியுள்ளனர். இங்கெ இவர்கள் ''ஹங்கிடிவசம'' என குறிப்பிடப்பட்டனர். இத்தொழிலில் ஈடுபடும் கலைஞர்கள் ''ஹங்கிடியன்'' என அக்காலத்தில் அழைக்கப்பட்டனர்.

### அரக்குத் தொழிலுக்குப் புகழ்பெற்ற பிரதேசங்கள்:

மாத்தளை - ஹப்புவித
தங்கல்லை - அங்குல்மடுவ
கண்டி - கூரிகடுவ
பலங்கொடை - பல்லேகந்த

இருந்தபோதும் இத்தொழில் தற்போது மாத்தளை - ஹப்புவித பகுதியிலேயே அதிகளவில் செயற்பட்டு வருகிறது.

### மூலப்பொருட்கள்

- அரக்குத் தொழிலுக்கு ''லாக்ஷா'' எனப்படும் ஒருவகை பூச்சியினத்தில் இருந்த பெறப்படும் அரக்கு, மூலப்பொருளாகப் பயன்படுகின்றது.

### மூலப்பொருட்களைத் தயார்படுத்திக்கொள்ளும் விதம்

- 'லாக்ஷா' எனப்படும் பூச்சியிலிருந்து சுரக்கும் ஒருவகைப் பிசின் வளியின் தாக்கத்தினால் இறுகி அரக்கு எனும் நிலையையடையும். அப்பிசின் வகை காணப்படும் மரக்கிளைகளை வெட்டி வெயிலில் உலரவிடப்படும். பின்னர் அவற்றில் காணப்படும் அரக்கை கத்தி போன்ற கூரான ஆயுதமொன்றினால் சுரண்டி எடுக்க வேண்டும். பின்னர் பருத்தித் துணியொன்றில் அவற்றை இட்டு இறுக முடிச்சுப்போட வேண்டும். அதன் பின்னர் அடுப்புக்கு மேலே பிடித்து. உருகும்போது தூய அரக்கை பிழிந்தெடுக்க வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட அரக்கு திரும்பவும் உருக்கி துண்டுகளாக்கப்படும்.

**சாயம் பெறப்படும் விதம்**

சிவப்பு - சாதிலிங்கம் தூள்
கறுப்பு - விளக்குக்கரி, அல்லது 'கெக்குணகரி'
மஞ்சள் - ஹிரியல் (ஒருவகை மண்)
பச்சை - மஞ்சள் ஹிரியல்லுடன் நீலம் சேர்க்கப்படும்.

தயார்படுத்திய அரக்கை இரு கம்புகளை இணைத்து வெப்பமேற்றி, சாயம் கலந்து, சரியான பதம் பெறும் வரை இழுத்து, நார் வடிவில் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

**அரக்கின் உபயோகம்**

மரத்தாலான பொருட்களின் மேற்பரப்பை அலங்கரிப்பதற்காக மட்டும் அரக்கு உபோயகப்படும்.

**கலைப்பாணி வகை**

- இருவகைக் நுட்பமுறைகளைப் பயன்படுத்தி அலங்கார வேலைப்பாடுகள் இடப்படுகின்றன.

**நகவேலை (Nail work)**

- இங்கே அரக்கு நார்கள் உபயோகித்து அலங்கார வேலைப்பாடுகள் இடப்படுகின்றன. வெப்பமேற்றிய அரக்கை விரல்களால் இழுத்து இவ்வகை நீளமான நார்கள் பெற்றுக்கொள்ளப் படுகின்றன. ஒரு வர்ணத்தால் ஆன நார்களை பொருள் மீது ஒட்டிய பின் ஏனைய வர்ணங்களால் ஆன நார்களால் அதன்மீது அலங்கார வேைலப்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. இதற்காக நகத்தை உபயோகப்படுத்துவதால் இம்முறை நகவேலை (நியபொது வெட) எனப்படும்.

**பட்டரை வேலை (பட்டல் வெட)**

- பட்டடை மீது வைக்கப்பட்ட பொருள் சுற்றிவரும்போது வெப்பமேற்றிய அரக்கு அதன் மீது பிடிக்கப்படும். அப்போது அரக்கானது சீரான முறையில் பொருள்மீது ஒட்டிக்கொள்ளும். பாரியளவில் பொருள் உற்பத்தி செய்கையில் இம்முறை உபயோகப்படும். இவ்வாறு ஒரு வர்ணத்திலான அரக்கு நார் முதலில் பொருள் மீது ஒட்டப்படும். பின்னர் அதற்குப் பொருந்தும்படி அலங்கார வேலைப்பாடுகள் பொருள்மீது இடப்படும்.

**அரக்குத் தொழிலில் உபயோகிக்கப்படும் அலங்கார அலகுகள்**


- வெல்பொத்த, லணுதங்கய, கல்பிந்து, அரச இலை, பலாபெத்தி (தாமரை இதழ்கள்), தனி பிந்து, குந்திரிக்கன், தனியிழை, ஈரிழை

**அரக்கு உபயோகித்து அலங்கரிக்கப்படும் பண்டங்கள்**

- ஆலவட்டத்தின் கைப்படி, கொடிகளின் கைப்பிடி, ஈட்டிப்பிடி, ‘‘பீரலு’’, ஊன்றுகோல், விசிறியின் கைப்பிடி, உடுக்கை




நகவேலை




பட்டரை வேலை



அரக்குப் பொருட்களை அலங்கரித்தல்








அரக்கினால் அலங்கார வேலைப்பாடுகள் இடப்பட்ட பொருட்கள்

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட தேசிய, சர்வதெச ரீதியில் தெரிவுசெய்த கலைஞர்களின் கலையாக்கங்களை வெகுசன தொடர்பு சாதனங்களினூடாகக் கண்டறிந்து, இரசித்து விமர்சன ரீதியில் தமது சுய ஆக்கங்களுக்குப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.4 :** தெரிவுசெய்யப்பட்ட மோடிப்படுத்திய மேடை நாடகமொன்றில் காணப்படும் ஓவியப் பண்புகளை நயந்துரைப்பார்.

**செயற்பாடு 6.4.1:** மோடிப்படுத்தப்படட மேடை நாடகமொன்றின் ஓவியப் பண்புகளை நயப்போம்.

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

- மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களின் விசேட பண்புகளை விளக்கிக் கூறுவார்.
- மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்கள் பலவற்றைக் குறிப்பிடுவார்.
- மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களில் ஒப்பனை செய்யும் விதத்தை தெரிவுசெய்யப்பட்ட மேடை நாடகமொன்றின் மூலம் விளக்குவார்.
- மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களின் கதாபாத்திரங்களுக்கு உகந்த அரங்கப்பொருட்கள், அரங்க ஆடையணிகளை விளக்கு வார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 6.4.1.1. இற்குரிய செயற்பாட்டுப் படிவங்கள்
- இணைப்பு 6.4.1.2. இற்குரிய வாசிப்புப் படிவங்கள்
- மோடிப்படுத்தப்பட்ட நாடகங்களுக்குரிய உருவப்படங்கள்/நிழற் படங்கள்
- மோடிப்படுத்தப்பட்ட நாடகங்கள் அடங்கிய காணொளிகள், இறுவட்டுகள், கணினி இயந்திரங்கள்.

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.4.1.1 :**

- மோடிப்படுத்தப்பட்ட நாடகங்களின் உருவப்படங்கள், நிழற்படங் களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- மோடிப்படுத்தப்பட்ட நாடகங்களின் காணொளிகளை கணினி இயந்திரத்தினூடாக பார்வையிடச் செய்க.
- காணொளியை பார்வையிட்ட பின் மோடிப்படுத்தப்பட்ட நாடகங் களின் பின்னணி அலங்காரம், ஒப்பனை, அரங்க ஆடையணிகள், அரங்கப் பொருள்களில் காணப்படும் விசேட பண்புகளைக் கலந்துரையாடுக.

(20 நிமிடங்கள்)

படிமுறை 6.4.1.2 :
- இணைப்பு 6.4.1.1 இற்கான செயற்பாட்டுப் படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.4.1.2 இற்குரிய வாசிப்புப் படிவங்களை மாணவர் களுக்கு வழங்கக.
- மாணவர்களை மூன்று குழுக்களாக்கி செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- மூன்று குழுக்களும் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக.
- கருத்துகளை பரிமாறிக்கொள்ள வாய்ப்பளிக்குக.
- மாணவர் கண்டறிந்தவற்றின் திருத்தமான தன்மையைக் கலந்துரை யாடுக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழே உள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களின் சிறப்பியல்புகளை இனங்கண்டு அவ்வியல்புகளுடைய வேறு நாடகங்களைக் குறிப்பிடுதல்.
- மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களில் ஒப்பனை செய்யும் விதத்தை தெரிவுசெய்யப்பட்ட மேடை நாடகமொன்றைக் கொண்டு விளக்குதல். (வர்ணப்பயன்பாடு, வர்ணக்கலைவை மீது அவதானம் செலுத்தி) மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களின் கதாபாத்திரங்களுக்கு உகந்த விதத்தில் அரங்கப் பொருட்கள் நிரமாணித்துள்ள விதத்தை இனங்காணல்.
- மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களில் நிர்மாணிக்கப்படும் அரங்க ஆடையணிகளில் காணப்படும் ஓவியப்பண்புகளை விளக்குதல்.

**இணைப்பு 6.4.1.1**

## செயற்பாட்டுப் பத்திரம்

- இணைப்பு 6.4.1.2 இற்கான வாசிப்புப்படிவத்தின் உருவப்படங்களை நோக்குக.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட் செயற்பாட்டில் ஈடுபடுக.

  குழு 1:

  மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களின் சிறப்பியல்புகளை விபரித்து, அவ்வாறான வேறுபல நாடகங்களைக் குறிப்பிடுக.

  குழு 2:

  மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களில் ஒப்பனை செய்யும் விதத்தைத் தெரிவு செய்யப்பட்ட நாடகமொன்றினூடாக விளக்குக.

  குழு 3:

  மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களின் கதாபாத்திரங்களுக்கு உகந்த அரங்கப் பொருட்கள், அரங்க ஆடையணிகள் என்பவை பற்றி விளக்குக.
- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்குக.
- ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்க.

**இணைப்பு 6.4.1.2**

## வாசிப்புப்பத்திரம்

- **மோடிப்படுத்தப்பட் நாடகங்களின் விளக்கம்**

நாடக தர்மம், உலக தரமம் என்று நாடகங்கள் இருவகைப்படும். இவற்றுள் மோடிப்படுத்தப்பட்ட நாடகங்கள் நாடக தர்ம வகைக்குரியன. நாடகத்தின் அனைத்து உரையாடல்களும், பாடல்கள் வடிவில் அமைந்தவையாகவும் இராகத்துடனான உரையாடல்களாகவும் இருக்கும். அத்துடன் நாடகத்தின் சகல அசைவுகளும் நடைகளும் இசைக்கேற்றவாறு சந்தத்துடன் நடைபெறும். மனமே, சிங்கபாகு, பெரஹண்ட போன்ற நாடகங்களை உதாரணங்களாகக் கூறலாம்.

- **பின்னணியை வடிவமைத்தல்**

மோடிப்படுத்தப்பட்ட நாடக மேடையின் பின்னணி எளிமையாகவும், அலங்காரமின்றியும் இருக்கும். சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான பின்னணியும் பாடல்களும் பார்வையாளரின் மனதைக் கதையின் பால் ஈர்த்துச் செல்லும்.

- **ஒப்பனை**

மோடிப்படுத்தப்பட்ட நாடகங்களின் ஒப்பனை (வேடம் பூணுதல்) செய்யப்படும் அக்கதாபாத்திரங் களுக்குரிய தன்மை, குண இயல்புகளை வெளிப்படுத்த முகத்துக்குச் சாயம் பூசுதல், வேறு அடையாளங்களை வரைதல், மீசை, தாடி, கேசம் ஆகியவை ஒட்டுதல் என்பன பெரும்பாலும் நடைபெறும் செயல்களாகும். சிங்கபாகு நாடகத்தின் சிங்கத்தின் கதாபாத்திரத்ததையும் மனமே நாடகத்தின் வேட அரசனின் கதா பாத்திரத்தையும் உதாரணங்களாகக் காட்டலாம்.

- **அரங்கப் பொருட்கள்**

மோடிப்படுத்தப்பட்ட நாடகங்களில் வரும் பலவித கதாபாத்திரங்களில் அதற்கான வகிபாகத்தை திறமையாக வெளிப்படுத்த அரங்கப் பொருள்கள் அத்தியாவசியமாகின்றன. அத்துடன் அவை நாடகத்துக்கு அழகையும் தருகின்றன. வாள், ஈட்டி, இரும்புகோல் எனும் பொருள்கள் இவற்றுள் அடங்கும்.

- **அரங்க ஆடையணிகள்**

நாடகத்தில் வரும் கதாபாத்திரங்களை மெருகூட்டவும் அவற்றை அழகுபடுத்தவும் ஆடையணிகள் பெரும் பங்காற்றுகின்றன. ஆடைகள், கிரீடம், நெற்றிப்பட்டம், அட்டியல், மாலை, தலைப்பாகை, வளையல்கள், தோடு, மோதிரம், சலங்கை, கொலுசு, சப்பாத்து என்பன இவற்றுள் அடங்கும்.



‘மனமே’ எனும் மேடைநாடகத்தின் ஒருகாட்சி



‘சிங்கபாகு’ எனும் மேடை நாடகத்தின் ஒரு காட்சி



‘பெரஹன்ட’ மேடை நாடகத்தின் ஒரு காட்சி

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட தேசிய, சர்வதேச ரீதியில் தெரிவுசெய்த கலைஞர்களின் கலையாக்கங்களை வெகுசன தொடர்பு சாதனங்களினூடாகக் கண்டறிந்து, இரசித்து விமர்சன ரீதியில் தமது சுய ஆக்கங்களுக்குப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5 :** தெரிவுசெய்யப்பட்ட உண்ணாட்டுக் கலைஞர்களின் கலை நிர்மாணிப்பு களை நயந்துரைப்பார்.

**செயற்பாடு 6.5.1:** ''எஸ். பீ. சார்ள்ஸ அவர்களின் நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்''.

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**
- கலைஞர் எஸ்.பீ. சார்ள்ஸ் அவர்களின் கலை நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- தேசிய கொடியிலும் செங்கோலிலும் உபயோகப்படுத்தியுள்ள குறியீடுகளை விபரித்துக் கூறுவார்.
- தேசிய கொடியினதும் செங்கோலினதும் சிறப்புப் பண்புகளை விபரித்துக் கூறுவார்.
- தேசிய கொடியினதும் செங்கோலினதும் கலைத்துவப் பண்புகளை நயந்துரைப்பார்.
- அந்நிர்மாணிப்புகளை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 6.5.1.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவப் பிரதிகள்
- இணைப்பு 6.5.1.2 இற்குரிய வாசிப்புப் படிவம்
- எஸ்.பீ. சார்ள்ஸ் அவர்களின் நிர்மாணிப்புகள் அடங்கிய நிழற் படங்கள்.
- கற்றல் உபகரணங்கள் (கணினி, இறுவட்டுக்கள், பக்கப்புரட்டி)

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.5.1.1 :**
- தேசிய கொடியினதும் செங்கோலினதும் நிழற்படங்களை மாணவர் களுக்குக் காட்சிப்படுத்துக.
- இந்நிர்மாணிப்புகள் தொடர்பாக மாணவர் அறிந்த விடயங்களை விசாரிக்குக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.5.1.2 :**
- இணைப்பு 6.5.1.1 இற்குரிய செயற்பாட்டு படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.5.1.2 இற்குரிய வாசிப்புப் படிவங்களை மாணவர் களுக்கு அளிக்குக.
- நிழற்படங்களின் துணையுடன் பாட விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்க.
- வாசிப்புப் படிவத்தை ஆதாரமாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.5.1.3** : 
- பொருத்தமான விதத்தில் விடைகளை மதிப்பீடு செய்க.
- தவறான பதிலளித்திருப்பின் அவற்றைத் திருத்தியமைத்து மொத்த வினாக்களுக்குமான சரியான விடைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளைச் செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- எஸ்.பீ. சார்ள்ஸ் அவர்களின் கலை நிர்மாணிப்புகளை குறிப்பிடுதல்.
- தேசிய கொடியிலும் செங்கோலிலும் உபயோகித்துள்ள குறியீடுகளை விபரித்துக் கூறுதல்.
- தேசிய கொடியினதும் செங்கோலினதும் சிறப்புப் பண்புகளை விபரித்துக் கூறுதல்.
- தேசிய கொடியினதும் செங்கோலினதும் கலைத்துவப் பண்புகளின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுதல்.

**இணைப்பு 6.5.1.1**

## ஆய்வு/செயற்பாட்டுப் படிவம்

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள எஸ்.பீ. சார்ள்ஸ் அவர்களின் நிர்மாணிப்புகளை நோக்குக.
- ஆசிரியரின் அறிவுரைப்படி இரண்டு குழுக்களாகுக.
- பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுக.

  குழு 1:

  எஸ்.பீ. சார்ள்ஸ் அவர்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட தேசிய கொடியை வரைந்து, அதில் காணப்படும் குறியீடுகளின் பொருளை எழுதுக.

  குழு 2:

  செங்கோலின் அடிப்படையான வடிவத்தை வரைந்து அதில் இடப்பட்டுள்ள அலங்காரச் செதுக்கல்களைக் குறிப்பிடுக.

- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்குக.
- ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்க.

**இணைப்பு 6.5.1.2**

## வாசிப்புப் படிவம்


**எஸ்.பீ. சார்ள்ஸ்**

- 1916 மாத்தறை வெலிகம வில் பிறந்த எஸ்.பீ. சார்ள்ஸ் கொக்மாதுவே நாணயக்கார எனும் கலைஞனின் கீழ் சித்திரக் கலையை பயின்று அது தொடர்பான அறிவை வளர்த்துக்கொண்டார்.
- பாரம்பரிய பௌத்த ஓவியங்களை பிரதி பண்ணும் பணிக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் பெருமளவு ஒத்துழைப்பு வழங்கிய கலைஞராவார்.
- எஸ்.பீ. சார்ள்ஸ் அவர்கள் 1944 இல் கொழும்பு தொழினுட்பக் கல்லூரியின் சித்திரக் கலைப்பிரிவின் ஜே.டீ.ஏ. பெரேராவிடம் சித்திரக்கலையைப் பயின்றார்.
- இலங்கை அரசாங்கத்தின் தேசிய கொடியினதும் பாராளுமன்றத்தின் குறியீடான செங்கோலினதும் நிர்மாணிப்புகளுக்காக அவர் வழங்கிய ஒத்துழைப்பு மிகவும் சிறந்தது.

## தேசிய கொடி

- தற்பொழுது பாவனையிலுள்ள தேசிய கொடி 1949 இல் நிர்மாணிக்கப்பட்டது.
- இலங்கையின் தனித்துவத்தையும் அபிமானத்தையும் பிரதிபலிக்கும் வகையில் தேசிய குறியீடுகளுடன் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- தேசிய கொடியின் வர்ணங்களும் குறியீடுகளும் உணர்ந்தும் பொருள்

| | | |
|---|---|---|
| வாளேந்திய சிங்கம் | - | மகிமை, மேன்மை |
| வாள் | - | இறையாண்மை |
| நான்கு அரச இலைகள் | - | நான்கு வித நற்பண்புகள் (அன்பு, கருணை, அனுதாபம், சமத்துவம்) |
| செம்மஞ்சள் | - | தமிழ் இனம் |
| பச்சை | - | முஸ்லிம் இனம் |
| சிவப்பு | - | சிங்கள இனம் |




## செங்கோல்

- செங்கோல் பாராளுமன்றத்தின் சபாநாயகருடைய அதிகார பலத்தைக் குறிக்கிறது.
- அத்துடன் அது முழு மந்திரி சபையின் அதிகார பலத்தையும் குறிக்கிறது.
- பாராளுமன்றத்தில் கூட்டமொன்று ஆரம்பிக்கும்போது செங்கோலை ஏந்திய படைக்கள சேவகரை (Mace-bearer) தொடர்ந்து சபாநாயகர் சபைக்குள் பிரவேசிப்பார்.
- பிரித்தானிய பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு ஏற்ப 1949 இல் செங்கோல் இந்நாட்டு பாராளுமன்றத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
- இச் செங்கோலை வடிவமைத்த பெருமை எஸ்.பீ. சார்ள்ஸ் அவர்களைச் சார்ந்ததாகும்.
- 1947 இல் எஸ்.பீ. சார்ள்ஸ் அவர்கள் வரைந்த செங்கோலின் திட்டமைப்புக்கு ஏற்ப பிரித்தானிய அரசர்களின் ஆபரணங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று இதை நிர்மாணித்தது.
- செங்கோலை வடிவமைக்கும் பொழுது தேசிய தனித்துவப் பண்புகள் நன்றாகப் புலப்படும் விதத்தில் பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகளும், கட்டமைப்புகளும் உபயோகப்படுத்தப்பட்டன.
- 122cm நீளமுடைய செங்கோலை நிர்மாணிக்க தங்கம், வெள்ளி, இரத்தினக்கற்கள் உபயோகப்படுத்தியதுடன் கைப்பிடிக்கு கருங்காலி மரப்பலகை உபயோகப்படுத்தப்பட்டது.
- கருங்காலி மரப்பிடியின் மத்தியில் பினர மலர், (பலாப்பெத்தி) தாமரை இதழ்களினாலான அலங்கார வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.
- கருங்காலி பிடிக்கு மேற்பகுதி பொலநறுவை மரபுக்குரிய தங்கம், வெள்ளியாலான தூணின் உச்சி காணப்படுகின்றது.

- அதன் முன்பகுதியில் மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்ட முத்து வலையும் காணப்படுகின்றது.
- கருங்காலி மரப்பிடியின் மத்திய பகுதி பினர மலர், தாமரை மலர் இதழ்கள் (பலாப்பெத்தி) எனும் வடிவங்களால் அலங்கரிக்கப்பட்டள்ளன.
- கைப்பிடிக்கு மேலால் பொலனறுவை சம்பிரதாயத்துக்கு ஏற்றதாக தங்கம், வெள்ளியயினால் அமைக்கப்பட்ட உச்சி காணப்படுகிறது.
- அதனையடுத்து இரத்தினக்கற்கள் பதித்த முத்துவலை (முத்துதெல்) அலங்கார வேலைப்பாடு உள்ளது.
- தூணின் உச்சியில் கண்டி சம்பிரதாயத்துக்கு ஏற்ற வெள்ளியினால் அமைக்கப்பட்ட தாமரை மலர் வேலைப்பாடுகளைக் கொண்ட போதிகை அமைப்பு காணப்படுகிறது. (இது ஹிந்தகல விகாரையின் போதிகை அமைப்பின் தழுவலைக் கொண்டது.)
- போதிகைக்கு அடுத்ததாக வெள்ளியால் அமைக்கப்பட்ட சதுரமுகி காணப்படுகிறது. நிலைத்தன்மை, நீதி, செழுமை என்பவற்றை அடையாளப்படுத்தி சூரியன் சந்திரனும், தர்ம சக்கரம், நிறைகுடம் என்பவையும் அதில் செதுக்கப்பட்டுள்ளன.
- சதரமுகியின் மீது வெள்ளியால் அமைக்கப்பட்ட 15 cm விட்டமுடைய செங்கோலின் முக்கிய பகுதியான கோளம் காணப்படுகிறது.
- கோள வடிவத்தின் மீது வாளேந்திய சிங்கத்தின் உருவம் சிறு புடைப்பு முறையில் அமைக்கப்பட்டுள்ளது.
- கோளத்தின் மேல் பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் வெள்ளி, தங்கம் போன்றவற்றினால் நிர்மாணிக்கப்பட்ட தாமரை மலரிதழ்கள் (பலாப்பெத்தி) கோலம் காணப்படுகிறது.
- அதற்கு மேல் பகுதியில் எட்டு மூலைகளைக்கொண்ட பளிங்கு உள்ளது.
- அது சைத்தியத்தின் கலசக்கொத்து உச்சியிலுள்ள சூடாமாணிக்கத்தின் வடிவத்தை ஒத்துள்ளது. அது தூய்மை, மேன்மை என்பவற்றை அடையாளப்படுத்துகிறது.
- இவ்வாறான அமைப்புடைய செங்கோல் சிங்கள மன்னர் ஆட்சிக்காலத்தில் உபயோகித்த யஷ்டிய, சோலுலீய, லீலாதண்டய எனும் பெயர்களால் குறிப்பிட்ட நிர்மாணிப்புகளுக்கு ஒத்த தன்மையைக் கொாண்டிருக்கிறது.





பளிங்கு
வெள்ளி
தங்கம்
தாமரை மலர்
தாமரை இதழ்
வெள்ளி
கோளத்தின் மத்தியில் சிங்கம்
சிங்கம்
தங்கம்
தாமரை
வெள்ளி
திண்ம அமைப்பு
தங்கம்
வெள்ளி
போதிகை
வெள்ளி
தங்கம், இரத்தினம்
தூண்
தலையின் பாரம்பரிய
அலங்காரம்
கருங்காலி மரம்
அலங்காரம்
தங்கம்
தங்கம்
தங்கம்
அலங்காரம்
அலங்காரம்
தண்டைச் சுற்றிவர சூரியன்,
சந்திரன், சக்கரம், புன்கலசம்
கருங்காலி மரம்
தாமரை
வெள்ளி
தங்கம்
தாமரை
சூரியன்
சந்திரன
சக்கரம்
புன்கலசம்

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட தேசிய, சர்வதெச ரீதியில் தெரிவுசெய்த கலைஞர்களின் கலையாக்கங்களை வெகுசன தொடர்பு சாதனங்களினூடாகக் கண்டறிந்து, இரசித்து விமர்சன ரீதியில் தமது சுய ஆக்கங்களுக்குப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.6 :** தெரிவுசெய்யப்பட்ட சித்திரக்கதை கலைஞர்களின் ஆக்கங்களை நயந்துரைப்பார்.

**செயற்பாடு 6.6.1:** பத்திரிகையில் வெளியாகும் சிதிரக்கதைக் கலைஞர்களின் நிர்மாணிப்பு களை மதிப்பிடுவோம்.

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- பத்திரிகைகளில் வெளியாகும் சித்திரக் கதைக் கலையில் ஈடுபட்ட முன்னோடிக் கலைஞர்களைக் குறிப்பிடுவார்.
- அக்கலைஞர்களின் ஓவியங்கள், தகவல்கள் என்பவற்றை சேகரிப்பார்.
- தெரிவுசெய்யப்பட்ட தொனிப்பொருள்களை விசாரித்தறிவார்.
- ஆக்கபூர்வமான கலைப்பண்புகளை விபரித்துக் கூறுவார்.
- சித்தரிப்பின் பண்புகளைத் தேடியறிவார்.
- பத்திரிகையில் வெளியாகும் சித்திரக் கதைகளின் கலை வெளிப் பாட்டை மதிப்பீடு செய்வார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சித்திரக்கலைக் கலைஞர்கள்
  - பந்துல ஹரிஸ்சந்திர
  - தயா ராஜபக்ஷ
  - ஜனக ரத்னாயக்க
- இணைப்பு 6.6.1.1 இற்கான செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.6.1.2 இற்கான வாசிப்புப்படிவம்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.6.1.1 :**
- பத்திரிகைகளில் வெளியாகும் சித்திரக்கதை கலைஞர்களின் நிர்மாணிப்புகள் மீது மாணவர்களது கவனத்தை ஈர்க்கச் செய்க.
- பத்திரிகைகளில் வெளியாகும் சித்திரக்கதை கலைஞர்களின் பல்வேறுபட்ட நிர்மாணங்களை அறிந்து கொள்ளும்படி பணிக்குக.
- அவர்களது நிர்மாணிப்பகளின் தொனிப்பொருள், கலைத்துவப் பண்பு போன்ற விடயங்கள் தொடர்பாக மாணவர்களிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.6.1.2** :
- இணைப்பு 6.6.1.1 இற்கான செயற்பாட்டுப் படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.6.1.2 இற்குரிய வாசிப்புப் படிவங்களை வாசித்தறியும்படி மாணவர்களைப் பணிக்குக.
- வாசிப்புப்படிவத்தின் துணையுடன் வினவப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடை காண உதவுக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.6.1.3** :
- எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் சிலரது விடைத்தாள் களை மதிப்பீடு செய்க.
- பத்திரிகைகளில் வெளியாகும் சித்திரக்கதைக் கலைஞர்களின் நிர்மாணிப்புகள் தொடர்பாக சிறு கலந்துரையாடலில் ஈடுபடுக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

கீழே உள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.
- பத்திரிகை சித்திரக் கதைக் கலையில் ஈடுபட்ட முன்னோடிக் கலைஞர்களை அறிந்து கொள்ளல்.
- அக்கலைஞர்களின் நிர்மாணிப்புகளையும் அவர்கள் தொடர்பான தகவல்களையும் சேகரித்துக் கொள்ளல்.
- பத்திரிகை சித்திரக் கதைகளுக்கு அடிப்படையாக அமைந்த கலைப் பாணிக்குரிய இயல்புகளை விபரித்துக் கூறல்.
- சித்தரிப்பு முறைகளையும் கோட்பாட்டுப் பண்புகளையும் விபரித்து கூறுதல்.
- பத்திரிகை சித்திரக்கதை கலைஞர்களின் நிர்மாணிப்புகளை நயந்து மதிப்பிடல்.

**இணைப்பு 6.6.1.1**

## செயற்பாட்டுப் படிவம்

- உமக்கு வழங்கப்பட்டுள்ள பத்திரிகை சித்திரக்கதை நிர்மாணிப்புகளை நன்றாக நோக்குக.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப்படிவத்தை நன்றாக வாசிக்குக.
- பத்திரிகை சித்திரக்கதை நிர்மாணிப்புகளில் காணப்படும் சிறப்பியல்புகளை இனங்காண்க.
- பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுக.
  1. பத்திரிகை சித்திரக்கதைக் கலை பற்றிய சிறிய விளக்கத்தினை அளிக்குக.
  2. பத்திரிகை சித்திரக் கதைக் கலைஞர்கள் சிலரை குறிப்பிடுக.
  3. பின்வரும் தலைப்புகளின் கீழ் பத்திரிகை சித்திரக்கதைக் கலைஞர்களது நிர்மாணிப்புகளை மதிப்பிடுக.
     i. தொனிப்பொருள்
     ii. நிர்மாணிப்பின் சிறப்பியல்புகள்
- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுக.

**இணைப்பு 6.6.1.2**

## வாசிப்புப்படிவம்

- பத்திரிகைத் துறையினூடாகவே சித்திரக்கதை மரபு தோற்றம் பெற்றது.
- 19 ஆம் நூற்றாண்டில் சித்திரக் கதைகள் அமெரிக்க பத்திரிகைகளில் முதல்முறையாகத் தோன்றின.
- சித்திரக் கதைகள் ஆரம்ப காலத்திலேயே நகைச்சுவைமிக்கதாகக் காணப்பட்டன. பின்னர் அவை இயல்பான தன்மையை எடுத்துக்காட்டும் விதமாக அமையத் தொடங்கின.
- 1951 ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி ஞாயிறு 'லங்காதீப' எனும் பத்திரிகையில் இலங்கையின் முதல் சித்திரக்கதை வெளியானது.
- அது 'நீலா' எனப்பட்டது. இக்கதைக்குரிய கலைஞன் ஜீ.எஸ். பர்ணாந்து ஆவார்.
- சித்திரக் கதைக்கென்றே தனியான ஒரு பத்திரிகை 'சித்திர' எனும் பெயரில் வெளியானது. இப்பத்திரிகை மூலம் ஆரம்பித்த பத்திரிகைகளில் வெளியாகும் சித்திரக்கதை கலையில் 'சதுட்ட', 'சித்திர மித்திர', 'சத்ஸர விஷ்ம' எனும்பெயர்களில் மேலும் சில பத்திரிகைகள் இணைந்து கொண்டன.
- இளையோர், முதியோர் என்ற பேதமின்றி யாவரும் சுவைத்து, இரசித்து வாசிக்கக்கூடிய சித்திரக் கதை கலை மரபு தொலைக்காட்சியின் அறிமுகத்துடன் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின.
- சித்திரக்கதைகள் தொடர்பாக பல கலைஞர்கள் தோன்றிய போதும் திறமைகள் பல வெளிப்படுத்திய முன்னோடிக் கலைஞர்களாக பந்துல ஹரிஸ்சந்திர, தயா ராஜபக்ஷ, ஜனக ரத்நாயக்க என்பவர்களை இனங்காணலாம்.

**பந்துல ஹரிஸ்சந்திர (1940 -**

- சிறுவயதில் இருந்து ஓவியம் வரைவதில் திறமை காட்டிய இவர் அடிப்படைக் கல்வியன் பின் அரசாங்க நுன்கலைமன்றத்தில் சிற்பக்கலையைப் பயின்றார்.
- பல துறைகளில் திறமைகளை வெளிப்படுத்திய பந்துல, துணிவகை, மட்பாண்டங்கள் என்பவற்றை வர்ணம் தீட்டினார். அத்துடன் தோரணங்களில் ஓவியங்கள் வரைவதிலும் ஈடுபட்டார். சுய விருப்பத்தில் சுயாதீனமாகத் தனித்துவமான ஓவியப் பண்பொன்றை உருவாக்கிக் கொண்டார்.
- பத்திரிகைகளில் சித்திரக் கதைகள் பிரபல்யம் அடைந்த காலப்பருவத்தில் 1962 ஆம் ஆண்டு லேக் ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியாகும் 'தினமின' எனும் பத்திரிகைக்கு ஒரு நாளில் வாசித்து முடியக்கூடிய ஜாதகக் கதைகளை சித்திரிக்கும் சித்திரக் கதைகளை வரைய ஆரம்பித்தார்.
- 'சுலசா' எனும் ஜாதகக் கதையே அவரது முதற் படைப்பாகும்.
- பல வர்ணங்களால் இலங்கையில் உருவான முதல் சித்திரக் கதையான 'நள தமயந்தி' யை நிர்மாணித்த கௌரவம் இவரையே சார்ந்ததாகும்.
- ஜாதகக் கதைகள், பௌத்த மதக் கதைகள், பைபிள் கதைகள், இலங்கை வரலாறு தொடர்பான கதைகள், மகாபாரதத்தின் கதைகள், கிரேக்க வீரக் கதைகள், 'அராபி நிசொல்லாசய', யப்பானிய சென் கதைகள் என்பன இவரது சித்திரக் கதைகளின் கருப்பொருள்களாயின.

- உயிரோட்டமாக உருவங்களை வரையும் பரந்தளவிலான திறமை கொண்டவர். பல்வேறுபட்ட சூழல், பல்வேறுபட்ட சூழலில் வாழும் மக்களின் தேக இலட்சணங்கள், ஆடையணிகள் என்பவற்றை மிகவும் தெளிவாக வரையும் திறமையுடையவரென அவரது சித்திரக்கதை தொகுப்புகளை அவதானிக்கும்போது புலப்படுகிறது.





**தயா ராஜபக்ஷ (1941 -)**


- தயா ராஜபக்ஷ சிறு வயதில் இருந்து சித்திரக் கலையில் நாட்டம் கொண்டு இருந்ததுடன் அவரது ஓவியம் வரையும் திறமையை விருத்தி செய்ய பாடசாலையின் சித்திரக்கலையே துணை புரிந்தது.
- இவரது முதல் சித்திரக்கதை 1966 ஆம் ஆண்டு 'சிலுமின' பத்திரிகையில் 'இந்து' எனும் பெயரில் வெளியானது.
- இந்து எனும் சித்திரக்கதை மூலம் பிரபல்யம் அடைந்த இவர் 'தினமின' எனும் பத்திரிகைக்கு 'ஆதர கொமா' எனும் சித்திரக் கதையை வரைந்து மேலும் பிரபல்யம் அடைந்த ஒரு கலைஞராவார்.
- கினிகத் கிரீடய, ஹுலவாலி, சாமபுராணய, அனுபமா, ரக்தா, ஜாதி தக்வா, வெத ஹாமுதுருவோ, தவலம எனும் பல பிரபல்யமான சித்திரக் கதைகளை வடிவமைத்துள்ளார்.
- அவரது அதிகமான கதைகள் அவரது சுயமான ஆக்கங்களாகவே இருந்தன. அவை சமூகச் சூழலின் இயல்பான தன்மையை பரிதிபலிப்பதாக இருந்ததன் காரணமாகவே இவரது கதைகள் திரைப்படங்களாகவும் தொலைக்காட்சி நாடகங்களாகவும் உருவாக வழிவகுத்தது.
- உயிரோட்டமாக உருவம் வரையும் பரந்த திறமையும், நகர்ப்புற சூழலைச் சார்ந்த மக்களின் தேக இலட்சணங்கள், சரிதைப் பண்புகள், ஆடையணிகள் என்பன மிகவும் நுணுக்கமாக வரையும் திறமை இருந்ததாக அவரது சித்திரக் கதைத் தொடர்கள் வெளிப்படுத்துகின்றன.





**ஜனக ரத்நாயக்க**

- கொழும்பு நாலந்தா கல்லூரியில் விஞ்ஞானத் துறையில் கல்வி பயின்ற போதிலும் ஓவியக் கலை தொடர்பாக பிறவித் திறமை கொண்டிருந்தார்.
- பொற்காலமாக அமைந்த 1970 தசாப்தங்களில் ஆக்கபூர்வமாக புதிய கலைப்பாணியில் ஓவியங்களை வரைந்தார்.
- 1971 இல் இருந்து 1979 வரை 'தவச' லேக்ஹவுஸ், மல்ரி பெக்ஸ் நிறுவனங்களில் கடமையாற்றிய காலப்பகுதி ஜனகவின் ஓவியக்கலையின் பொன்னான காலமாக இருந்தது.
- 'சாரங்கா', 'கபலென் லிபட்ட', 'சுசீமா', 'அத்திக்கா மல', 'பாட்ட பாட்ட ஹீனயக்', 'யளி பிப்புனு மலக்', 'கலு பரவியோ' அவரது பிரபல்யமான சில சித்திரக் கதைகளாகின.
- ஏனைய சித்திரக்கதை கலைஞர்களிடம் இருந்து இவர் வேறுபட்டுக் காணப்பட்டார். அவர் தனது கதைகளிலும் கதாபாத்திரங்களிலும் செயற்பாடுகளைக் குறிக்க இயல்பான காட்சிகளையே உபயோகித்தார்.
- 'ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பூங்காக்கள், விரிவுரை மண்டபங்கள், மாணவர் விடுதி, சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை இயற்கைத் தன்மையுடன் ஓவியமாக்கியுள்ளதை உதாரணங்களாகக் கூறலாம்.
- அக்கால நகர்ப்புற இளம் பருவத்தினரின் நவநாகரிகம், வாகனங்கள், மேற்கத்தேய திரைப்படக் காட்சிகளில் வரும் போர் வாகனங்கள், ஆயுதங்கள் என்பன ஆக்கங்களின் கருப்பொருள்களாயின.
- இயற்கை உருவங்களும், விபரிப்புத் தன்மையுடைய இரேகைகளும் கொண்டு நீர் வர்ணத்தினால் அவருக்கே உரித்தான பாணியில் வர்ணம் தீட்டப்பட்ட பிரபல்யமடைந்த சித்திரக் கதைகள் தொலைக்காட்சி நாடகங்களாக உருவாகின.


ඔව්! වෙඩිල්ලක් දෙකක් තියලා බලනවා!!..
තිරිසනා!! ඕක නවත්තපං!
හෝ! ඒ මොකද? වරෙං!.. වරෙං!!.. උඹ වගේ උන්ට මං හරිම කැමතියි!!
තියෙනවා!..ඒත්...
50.



**தேர்ச்சி 7.0 :** **வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளிநாட்டு சித்திரம், சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங் களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத் திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 :** வரலாற்று ரீதியான கட்டட நிர்மாணங்கள் சார்ந்த கலையம்சங்களை அறிவார்.

**செயற்பாடு 7.1.1:** ''சந்திரவட்டக்கல்'' நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்.

**பாடவேளைகள் :** 021

**கற்றற் பேறுகள் :**

- சந்திரவட்டக்கல்லை இனங்காண்பார்.
- அநுராதபுர காலத்தில் இருந்து கண்டிக்காலம் வரை காணப்பட்ட சந்திரவட்டக்கல்லின் பரம்பலை விபரிப்பார்.
- சந்திரவட்டக்கற் செதுக்கலில் உள்ள கலைத்துவப் பண்புகளை மதிப்பிடுவார்.
- சந்திரவட்டக்கற் செதுக்கல்கள் தொடர்பான கருத்துகளையும் முரண் பாடுகளையும் கலந்துரையாடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 7.1.1.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகள்
- இணைப்பு 7.1.1.2 இற்குரிய வாசிப்புப் படிவத்தின் பிரதிகள்
- பல காலங்களில் நிர்மாணிக்கப்பட்ட சந்திரவட்டக்கற்களின் நிழற் படங்கள்.
- பல காலங்களில் நிர்மாணிக்கப்பட்ட சந்திரவட்டக்கற்களை சித்திரிக்கும் ஒளி நாடாக்களும் இறுவட்டுக்களும்.
- கணினி இயந்திரங்கள், தொலைக்காட்சி, Tabs
- கடதாசி, பேனைகள், பென்சில்கள். அளவுகோல்கள், கவராயங்கள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.1.1.1 :**

- சந்திரவட்டக் கற்கள் உள்ளடக்கிய நிழற்படங்கள், ஒளி நாடாக்கள், இறுவட்டுக்கள், படவில்லை, கணினி இயந்திரங்கள், டெப் (Tab) என்பன உபயோகித்து மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.
- காட்சிப்படுத்திய படங்கள் பற்றிய கருத்துகளை வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.1.2 :**

- மாணவர்களை மூன்று குழுக்களாக்குக.
- இணைப்பு 7.1.1.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.1.1.2 இற்குரிய வாசிப்புப்படிவங்களை குழுக்களுக்கு வழங்குக.
- குழுக்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- கண்டறிந்த விடயங்களை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுக.

(60 நிமிடங்கள்)

படிமுறை 7.1.1.3 :
- ஒரு குழு தாம் கண்டறிந்தவற்றை முன்வைக்கையில் ஏனையவர்கள் அவற்றைக் குறித்துக்கொள்ளும்படி பணிக்குக.
- பொருத்தமான முறையொன்றை உபயோகித்து மாணவர்களை மதிப்பீடு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- சந்திரவட்டக்கல் என்ன என்பதனை இனங்காணல்.
- அநுராதபுரக் காலத்தில் இருந்து கண்டிக் காலம் வரையுள்ள சந்திரவட்டக் கல்லின் பரம்பலை விபரித்தல்.
- சந்திரவட்டக்கற் செதுக்கல்கள் தொடர்பான கருத்துகளையும் முரண்பாடுகளையும் கலந்துரையாடுதல்.

**இணைப்பு 7.1.1.1**

## செயற்பாட்டுப் படிவம்

- காட்சிப்படுத்தப்பட்ட சந்திரவட்டக்கல்லின் நிழற்படங்களை நோக்குக.
- ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க மூன்று குழுக்களாகுக.

  குழு 1 - அநுராதபுரக் காலத்துச் சந்திரவட்டக் கற்கள்.

  குழு 2 - பொலனறுவைக் காலத்துச் சந்திரவட்டக் கற்கள்.

  குழு 3 - கண்டிக் காலத்துச் சந்திரவட்டக் கற்கள்.
- உங்கள் குழுவுக்குக் கிடைத்த சந்திரவட்டக்கல்லின் உருவப்படத்தை டிமை தாளொன்றில் வரைந்து அதன் அங்கங்களைக் குறிக்குக.
- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுக.

**இணைப்பு 7.1.1.2**

## வாசிப்புப் படிவம்

- வணக்கஸ்தலமொன்றுக்குள் நுழையும் படிக்கட்டின் முன்னால் அமைந்த அரைவட்டக் கற் செதுக்கல் வேலைப்பாடானது சந்திரவட்டக் கல்லாகும்.
- சூரிய சந்திரகல, அடசந்த பகன, பாட்டிக்கா எனும் பெயர்களாலும் இது அழைக்கப்படுகிறது.
- ஆரம்ப காலத்தில் சதுரவடிவ அமைப்பைக் கொண்ட கல்லாக இருந்து அநுராதபுர, பொலனறுவைக் காலத்திலேயே பின்னர் அரைவட்ட வடிவமாக வளர்ச்சியடைந்தது. கண்டிக்காலத்தில் முக்கோண வடிவமைப்பாக மாற்றமடைந்தது.
- அத்துடன் ஆரம்பகாலத்தில் செதுக்கல்களின்றி காணப்பட்ட சந்திரவட்டக்கல்லில் படிப்படியாக செதுக்கல்கள் உள்ளடக்கப்பட்டு உன்னத கலைப்படைப்பானது.
- அரைவட்டங்களாக அமைந்த ஐந்து வரிசைகளைக் கொண்ட சந்திரவட்டக்கல்லின் ஒவ்வொரு வரிசையும் அலங்காரமான செதுக்கல்களைக் கொண்டன.

* சந்திர வட்டக்கல்லின் ஒவ்வொரு வரிசையின் செதுக்கல்கள் தொடர்பாக பேராசிரியர் செனரத் பரணவித்தான அவர்கள் தெரிவித்த கருத்து பின்வருமாறு அட்டவணை விளக்குகிறது.

| நிரை | பொழியப்பட்டுள்ள செதுக்கல் | பொருள் |
|---|---|---|
| 1 | தீச்சுடர் | பேராசை, காமம் ஆகிய நெருப்பு |
| 2 | சத்வாவலிய<br>(யானை, குதிரை, பசு சிம்மம்) | ஜாதி, வயோதிபம், வியாதி, மரணம் |
| 3 | கொடிவலை அலங்காரம் | பேராசை எனும் பிணைப்பு |
| 4 | ஹன்சாவலிய<br>(அன்ன வரிசை) | உண்மை நிலையை விளங்கிக் கொள்ளல் |
| 5 | எளிமையான கொடிவலை | பிணைப்புகளிலிருந்து விடுபடல் |
| 6 | அரைத் தாமரை | முக்திநிலை |

## பல்வேறு காலப்பகுதிகளுக்குரிய உயர் கலைப்பண்புகளைக் கொண்ட சந்திரவட்டக்கற்கள்

**அநுராதபுர காலம்**

* இராணி மாளிகையின் (மகாசென் மாளிகை) சந்திரவட்டக்கல்

**பொலனறுவைக் காலம்**

* வட்டதாகேயின் சந்திரவட்டக்கல்

**கண்டிக்காலம்**

* தலதா மாளிகையின் சந்திரவட்டக்கல்



இராணி மாளிகையின் (மகாசென் மாளிகை) சந்திரவட்டக்கல்



பொலனறுவை வட்டதாகேயின் சந்திரவட்டக்கல்



கண்டி தலதா மாளிகையின் சந்திரவட்டக்கல்

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளிநாட்டு சித்திரம், சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங் களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத் திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 :** வரலாற்று ரீதியான கட்டட நிர்மாணங்கள் சார்ந்த கலையம்சங்களை அறிவார்.

**செயற்பாடு 7.1.2:** ''காவற்கல், கைப்பிடி, படிவரிசை நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

- காவற்கல், கைப்பிடி, படிவரிசை, ஸ்தூபி என்பவற்றுடன் தொடர்புடைய கட்டட நிர்மாணிப்பு அங்கங்களை விளக்குவார்.
- நிர்மாணிப்புகளின் ஊடகம், நுட்பமுறைகளை ஆராய்ந்தறிவார்.
- காவற்கல், கைப்பிடி, படிவரிசை எனும் நிர்மாணிப்புகளை ஒப்பிட்டு மதிப்பிடுவார்.
- நிர்மாணிப்புகளின் கலைப் பண்புகளுடனான அங்கங்களை புதிய நிர்மாணிப்புகளில் உபயோகிப்பார்.
- தமது அனுபவத்தை விளக்குவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 7.1.2.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகள்
- இணைப்பு 7.1.2.2 இற்குரிய வாசிப்புப் படிவத்தின் பிரதிகள்
- ஸ்தூபிகள் அடங்கிய கட்டட நிர்மாணிப்புகளின் நிழற்படங்கள்
- டிமை தாள்கள், நிறப் பேனைகள்
- பக்கப் புரட்டி

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.1.2.1 :**

- காவற்கல், கைப்பிடி, படிவரிசை உள்ளடங்கிய நிழற்படங்களை காட்சிப்படுத்துக.
- நிழற்படங்கள் பற்றிய கருத்துகளை மாணவர்களிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.2.2 :**

- மாணவர்களை மூன்று குழுக்களாக்குக.
- இணைப்பு 7.1.1.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.1.1.2 இற்குரிய வாசிப்புப்படிவங்களை குழுக்களுக்கு வழங்குக.
- டிமை தாள்கள், நிறப்பேனைகள் வழங்குக.
- குழுக்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

(60 நிமிடங்கள்)

படிமுறை 7.1.2.3 :
- மாணவர்களின் ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்குக.
- தவறான விடயங்களைத் திருத்துக.
- ஒவ்வொரு நிர்மாணிப்புகளுக்கிடையில் உள்ள தொடர்பை விளக்கி கலந்துரையாடலை நடத்துக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- காவற்கல், கைப்பிடி, படிவரிசை, ஸ்தூபியுடன் தொடர்புடைய கட்டட நிர்மாணிப்பு அங்கங்களை விளக்குதல்.
- நிர்மாணிப்புகளின் ஊடகம், நுட்பமுறைகளை ஆராய்ந்தறிதல்.
- காவற்கல், கைப்பிடி, படிவரிசை எனும் நிர்மாணிப்புகளை ஒப்பிட்டு மதிப்பிடல்.
- நிர்மாணிப்புகளில் உள்ள கலைத்துவப் பண்புகளை புதிய நிர்மாணிப்புகளில் உபயோகித்தல்.
- தமது அனுபவத்தை விளக்குதல்.

**இணைப்பு 7.1.2.1**

## செயற்பாட்டுப் படிவம்

- காட்சிப்படுத்தப்படும் நிழற்படங்களை நன்றாக நோக்குக.
- வாசிப்புப்படிவத்தை அவதானிப்புடன் வாசிக்குக.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி, காவற்கல், கைப்பிடி, படிவரிசை பற்றி சுவர் பத்திரிகைக்கு கட்டுரையொன்றை தயாரிக்குக.
    1. காவற்கல், கைப்பிடி, படிவரிசை நிரமாணிக்க உபயோகித்துள்ள ஊடகங்கள்
    2. அவற்றில் காணப்படும் பல்வேறு செதுக்கல்கள்
    3. நிர்மாணிக்கப்பட்டுள்ள இடங்கள்
    4. கலைப் பெறுமானம்
- நிர்மாணிக்கப்பட்ட கட்டுரையில் உள்ளடங்கும் விடயங்களை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுக.
- ஆசிரியரின் உதவியைப் பெறுக.

இணைப்பு 7.1.2.2

## வாசிப்புப் படிவம்

**காவற்கல்**

- வணக்கஸ்தலங்கலுக்கு நுழையும் படிவரிசையின் அடிவாரத்தில் சந்திரவட்டக் கல்லுக்கு இரு புறத்திலும் காணப்படும் செதுக்கல்களுடனான கற்றகடு காவற்கல்லாகும்.
- கைப்பிடியை இது தாங்கி நிற்கவும் உதவுகிறது, படிவரிசையின் உறுதியையும் இது பேணுகிறது.
- ஆரம்ப காலத்தில் இது செதுக்கல்களின்றிக் காணப்பட்டது. பின்னர் படிப்படியாக செதுக்கல்களால் அலங்கரிக்கப்பட்டன.
  1. செதுக்கல்களின்றிய காவற்கல்
  2. புன்கலசத்துடனான காவற்கல்
  3. பைரவ காவற்கல்
  4. நாகபடக் காவற்கல்
  5. நாகராஜக் காவற்கல்
- அனுராதபுர, பொலனறுவைக் காலத்தில் நாகராஜக் காவற்கல் மிகவும் உயர்வான கலைப்பண்பு களைக் கொண்டிருந்தது.
- பல சந்தர்ப்பங்களில் காவற்கல், கருங்கல், செங்கல், சாந்து போன்ற ஊடகங்களால் நிர்மாணிக்கப் பட்டன.

### பல காலங்களுக்குரிய உயர் கலைப்பண்புகளைக் கொண்ட காவற்கற்கள்

**அநுராதபுரக் காலம்**

- 'இரத்தின பிரசாதய' காவற்கல்

**பொலனறுவைக்காலம்**

- பொலனறுவை வட்டதாகே காவற்கல்



அநுராதபுரக் காலத்து
'இரத்தின பிரசாதய' காவற்கல்



பொலனறுவை வட்டதாகே காவற்கல்

**கைப்பிடி (கொரவக்கல்)**

- வணக்கஸ்தலமொன்றுக்குள் அல்லது கட்டடம் ஒன்றுக்குள் நுழையும் படிவரிசையின் இரு புறத்திலும் கைப்பிடி போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்ட பாரிய இரு கற் சுவர்களும் கைப்பிடியாகும்.
- கைப்பிடியானது மகரவாயில் இருந்து வெளிவரும் தும்பிக்கை, நீரலை, தீச்சுடர் அமைப்புகளைக் கொண்டன.
- மகரவாயில் இருந்து வெளிவரும் சந்தத்துடனான நீரலையில் (தும்பிக்கை, தீச்சுடர்) நுணுக்கமான முறையில் செதுக்கல்கள் காணப்படுவதால் அது அருமையான நிர்மாணிப்பாகிறது.
- சிம்ம உருவங்கள், கஜசிங்க உருவங்கள், பெண் உருவங்கள் என்பன செதுக்கல்களில் காணப்படுகின்றன.
- அனுராதபுரம், பொலனறுவை காலத்தில் கருங்கல்லினாலும் கண்டி, கம்பளை காலத்தில் செங்கல், சாந்துக்கலவையினாலும் கைப்பிடி நிர்மாணிக்கப்பட்டது.
- அநுராதபுரம், பொலனறுவை காலங்களில் மகர உருவம் கைப்பிடியில் காணப்பட்டது. கண்டி, கம்பளை காலங்களில் கஜசிங்க உருவ எண்ணக்கருவிற்கு மாற்றமடைந்தது.
- பரிவரிசையின் படிக்கட்டுகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு கைப்பிடியின் நீளம், அகலம் என்பன தீர்மானிக்கப்பட்டன.

### பல காலங்களுக்குரிய உயர் கலைப்பண்புகளைக் கொண்ட கைப்பிடிகள்

**அநுராதபுரக் காலம்**

- இரத்தின பிரசாதயவின் கைப்பிடி

**பொலனறுவைக் காலம்**

- பொலனறுவை வட்டதாகேயின் கைப்பிடி

**கம்பளைக்காலம்**

- கடலாதெனிய விகாரையின் கைப்பிடி



இரத்தின பிரசாதயவின் கைப்பிடி



பொலனறுவை வட்டதாகேயின் கைப்பிடி




கடலாதெனிய விகாரையின் கைப்பிடி

**படிவரிசை**

- கீழ் தளத்தில் இருந்து மேற்றளத்துக்கு செல்ல இது அமைக்கப்பட்டுள்ளது.
- சந்திரவட்டக்கல், காவற்கல், கைப்பிடி எனும் அங்கங்களை இணைக்கும் வகையில் இது அமைந்துள்ளது.
- ஆரம்ப காலத்தில் இதில் செதுக்கல்கள் காணப்படவில்லை. பின்னர் இது விசித்திரமான அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டன.
- படிவரிசையில் ஏறுவதற்காக சந்திரவட்டக்கல்லை அடையும் ஒருவருக்கு படிக்கட்டின் நேராக அமையும் பரப்புகள் நன்றாகத் தோற்றமளிக்கும். எனவே இப்பரப்புகளை செதுக்கல்களுக்கு உபயோகித்தனர்.
- குள்ளர்களின் உருவங்கள், வஜிர உருவங்கள், தாமரை இதழ்கள், கொடிவலை என்பவற்றால் படிவரிசை அலங்கரிக்கப்பட்டது.
- அனுராதபுர இராணி (பிசோ) மாளிகை, மகாசென் அரண்மனை, படிவரிசை வஜ்ஜிர, குள்ள உருவங்களால் அலரிக்கப்பட்டன.
- பொலனறுவை வட்டதாகேயின் படிவரிசை அண்மித்தும் வரிசையாகவும் உள்ள குள்ள உருவங்கள் பலவற்றால் அலங்கரிக்கப் பட்டுள்ளன.
- கண்டி விஷ்னு ஆலயப் படிவரிசை கொடிவலை பூ அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.
- இலங்கையில் காணப்படும் சிறந்த செதுக்கல்களைக் கொண்ட படிவரிசைகள் கருங்கல்லை ஊடகமாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



அநுராதபுர இராணிமாளிகையின் படிவரிசை



பொலநறுவை வட்டதாகேயின் படிவரிசை



கண்டி விஷ்ணு ஆலயத்தின் படிவரிசை

**தேர்ச்சி 7.0 :** **வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளிநாட்டு சித்திரம், சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங் களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத் திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 :** வரலாற்று ரீதியான கட்டட நிர்மாணங்கள் சார்ந்த கலையம்சங்களை அறிவார்.

**செயற்பாடு 7.1.3 :** ‘‘வாகல்கட நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்.’’

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- வாகல்கட, வட்டதாகே என்பவற்றை இனங்காண்பார்.
- வாகல்கட, வட்டதாகேயின் கலைப்பண்புகளை மதிப்பிடுவார்.
- தூபியின் பாதுகாப்பு, வலிமை, அழகு என்பன தோற்றுவிக்க இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறிவார்.
- வாசிப்புப் படிவத்தின் மூலம் மேலும் விடயங்களை கண்டறிவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- இணைப்பு 7.1.3.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகள்
- இணைப்பு 7.1.3.2 இற்குரிய வாசிப்புப் படிவத்தின் பிரதிகள்
- வாகல்கட, வட்டதாகே உள்ளடங்கிய நிழற்படங்கள்
- பல காலங்களுக்கான சந்திரவட்டக்கற்களை உள்ளடக்கிய காணொலிகளும் இறுவட்டுக்களும்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.1.3.1 :**
- வாகல்கட, வட்டதாகே உள்ளடங்கிய நிழற்படங்களை காட்சிப் படுத்துக.
- அந்நிர்மாணிப்புகள் பற்றிய கருத்துகளை மாணவர்களிடம் வினவுக.
- இலங்கையில் தற்போது காணப்படும் வாகல்கட, வட்டதாகே தொடர்பான உரையாடலை நடத்துக.
- வாகல்கட, வட்டதாகே செதுக்கல்கள் தொடர்பாக மாணவர்களிடம் கலந்துரையாடுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.3.2 :**
- இணைப்பு 7.1.3.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.1.3.2 இற்குரிய வாசிப்புப்படிவத்தை உருப்பெருக்கம் செய்து காட்சிப்டுத்துக.
- வினாக்களை அப்பியாசப் புத்தகத்தில் பிரதியிடச் செய்க.
- வாசிப்புப் படிவத்தின் துணையுடன் வினாக்களுக்கு விடையளிக்குக.

(40 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.3.3** : • பொருத்தமான முறையில் விடைகளை மதிப்பீடு செய்க.
• தவறான விடயங்களைத் திருத்தம் செய்ய வாய்ப்பளிக்குக.
(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- வாகல்கட, வட்டதாகே என்பவற்றை இனங்காணுதல்.
- வாகல்கட, வட்டதாகே இன் கலைப்பண்புகளை மதிப்பிடுதல்.
- தூபியின் பாதுகாப்பு, வலிமை, அழகு என்பன தோற்றுவிக்க இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிதல்.

**இணைப்பு 7.1.3.1**

## செயற்பாட்டுப் படிவம்

- காட்சிப்படுத்தப்படும் வாகல்கட, வட்டதாகே இன் நிழற்படங்களை நன்றாக நோக்குக.
- வாசிப்புப்படிவத்தை அவதானிப்புடன் வாசிக்குக.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1. வாகல்கடம் என்பது எதனைக் குறிக்கிறது?
2. வாகல்கடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விலங்குருவங்கள் எவை?
3. உயர்வான கலைப்பண்புகளையுடைய வாகல்கடம் உள்ள இடத்தைக் குறிப்பிடுக.
4. தற்போது பாதுகாக்கப்பட்டுள்ள பொலறுவைக் காலத்து வாகல்கடம் ஒன்றைக் குறிப்பிடுக.
5. வாகல்கடத்துக்கு கூறப்படும் வேறு இரு பெயர்களைக் குறிப்பிடுக.
6. வட்டதாகே என்றால் என்ன?
7. இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட முதல் வட்டதாகே எது?
8. பெரிய சைத்தியங்கள் அல்லது சிறியளவிலான சைத்தியங்களை சுற்றியா வட்டதாகே அமைக்கப்பட்டுள்ளது?
9. தற்போது இலங்கையில் காணப்படும் வட்டதாகே சிலவற்றைக் குறிப்பிடுக.
10. வாகல்கட, வட்டதாகே ஆகியவை நிர்மாணிக்க உபயோகப்படுத்திய ஊடகங்களைக் குறிப்பிடுக.

இணைப்பு 7.1.3.2

## வாசிப்புப் படிவம்

**வாகல்கடம்**

- தாதுகோபத்துடன் இணைந்து அதன் நாற்றிசையிலும் அமைக்கப்பட்ட சிறப்புவாய்ந்த கட்டட நிர்மாணிப்பென இதனைக் குறிப்பிடலாம்.
- வாகல்கடம் 'ஆயக்க', 'ஆயிக்க' எனும் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.
- தாதுகோபத்துக்கு வலிமை, அழகு என்பன தோற்றுவிக்கப்படுகின்றதெனக் கருதலாம்.
- தாதுகோபத்தின் நாற்றிசைகளிலும் மலராசனத்துடன் இணைந்து இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- வாகல்கடத்தின் அடித்தளம் கல்லால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- மேற்பகுதியில் காணப்படும் விமானங்கள் செங்கல்லினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கல்லால் அமைக்கப்பட்ட கீழ் பகுதியில் மணியுருக்கட்டு ('பொரதம்') எனப்படும் பகுதிகள் பல உள்ளன. யானை, மகரம், முயலகன்கள், அன்னம் ஆகிய விலங்குருக்களை இவை கொண்டுள்ளன.
- செங்கல்லால் அமைக்கப்பட்ட சில வாகல்கடங்களில் மூன்று விமானங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் புத்தரின் உருவம், தெய்வ உருவம் என்பன வைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.
- வாகல்கடத்தின் இருபுறத்தில் விசித்தரமான செதுக்கல்களாலான கற்றூண்கள் காணப்படுகின்றன. இவை கல்பலதா, ஜீவன விருட்சம், சுயாதீனமான விலங்கு அலங்கராங்களைக் கொண்டுள்ளன.
- அக் கற்றூண்கள் மீது யானை, குதிரை, பசு, சிம்மம் எனும் உருவங்கள் உள்ளன. இவை நான்கு திசைகளையும் குறிப்பதாக நம்பப்படுகிறது.

### பல காலங்களுக்குரிய உயர் பண்புகளைக் கொண்ட வாகல்கடங்கள்

**அநுராதபுர காலம்**

- மிகிந்தலை கண்டக சைத்தியத்தின் வாகல்கடம்

**பொலனறுவைக் காலம்**

- ரன்கொத் விகாரையின் வாகல்கடம்




மிகிந்தலை கண்டக சைத்தியத்தின் வாகல்கடம்



ரன்கொத் விகாரையின் வாகல்கடம்

### வட்டதாகே

- தாதுகோபுரமொன்றின் பாதுகாப்பைக் கருதி தாதுகோபத்தை சுற்றி அமைக்கப்படும் மனை வட்டதாகே எனப்படும்.
- தூபகர, வேதியகர, சேகெய எனும் பெயர்களால் இது அழைக்கப்படுகின்றது.
- இலங்கை பௌத்த கட்டட நிர்மாணிப்பின் இன்னுமொரு சிறந்த நிர்மாணிப்பாக உள்ள வட்டதாகே சிறிய தாதுகோபங்களைச் சுற்றியே நிர்மாணிக்கப்படுகின்றன.
- வட்டவடிவ அமைப்பைக் கொண்ட இதன் கூரை தாதுகோபத்துக்குப் பாதுகாப்பான முகடொன்றாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதைக் கருதலாம்.
- முகட்டை தாங்கி நிற்கும் கற்றூண்கள் மிக நுணுக்கமான செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.
- இலங்கையில் முதன்முதலாக அமைக்கப்பட்டது தூபாராம வட்டதாகேயாகும்.

## பல காலங்களுக்குரிய உயர்கலைப்பண்புகளைக்கொண்ட வட்டதாகே நிர்மாணிப்புகள்

**அநுராதபுரக் காலம்**

- திரியாய வட்டதாகே

**பொலனறுவைக் காலம்**

- மெதிரிகிரிய வட்டதாகே
- பொலனறுவை வட்டதாகே



தூபாராம வட்டதாகே



திரியாய வட்டதாகே



மெதிரிகிரிய வட்டதாகே



பொலனறுவை வட்டதாகே

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளிநாட்டு சித்திரம், சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங் களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத் திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.2 :** தேசிய (உண்ணாட்டு) பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகள் பற்றி அறிவார்.

**செயற்பாடு 7.2.1:** ''பெண் உருவங்கள் அடங்கிய சிறப்புவாய்ந்த பாரம்பரிய அலங்கார நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்.''

**பாடவேளைகள் :** 01

**கற்றற் பேறுகள் :**
- பெண் உருவங்கள் அடங்கிய சிறப்பு வாய்ந்த பாரம்பரிய அலங்கார நிர்மாணிப்புகளை குறிப்பிடுவார்.
- பெண் உருவங்கள் அடங்கிய சிறப்பு வாய்ந்த பாரம்பரிய அலங்கார வடிவங்கள் வேறு ஏதேனும் வடிவத்துக்கு ஒத்ததாக அமைக்கப் பட்டிருப்பதை எடுத்துரைப்பார்.
- அவ்வாறான நிர்மாணிப்புகள் காணக்கூடிய இடங்களையும் அவற்றின் வகைகளையும் விளக்குவார்.
- அந்நிர்மாணிப்புகளில் காணப்படும் கலைத்துவப் பண்புகளை மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 7.2.1.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவம்
- இணைப்பு 7.2.1.2 இற்குரிய வாசிப்புப் படிவம்
- டிமைத்தாள்கள். பெல்ர் பேனைகள். அளவுகோல்கள், பென்சில்கள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.2.1.1 :**
- பெண் உருவங்கள் அடங்கிய சிறப்பு வாய்ந்த பாரம்பரிய அலங்கார அலகுகளை சித்திரிக்கும் படங்களை காட்சிப்படுத்துக.
- அவற்றை பார்வையிட மாணவர்களுக்கு வாய்ப்பளிக்குக.
- அவை ஒவ்வொன்றையும் பற்றிய கருத்துகளை மாணவர்களிடம் வினவுக.
- இந்நிர்மாணிப்புகளை மரச் செதுக்கல்கள், யானைத் தந்த செதுக்கல்கள், பாரம்பரிய ஓவியங்கள் என்பவற்றில் காணலாம் என்பதை விபரிக்குக.

(10 நிமிடங்கள்)

படிமுறை 7.2.1.2 :
- இணைப்பு 7.2.1.1 இற்கான செயற்பாட்டுப் படிவத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.2.1.2 இற்குரிய வாசிப்புப்படிவத்தை மாணவர்களை வாசிக்கச் செய்க.
- வாசிப்புப் படிவத்தின் துணையுடன் அட்டவணையை நிரப்ப மாணவர்களுக்கு அறிவுறுத்துக.

(40 நிமிடங்கள்)

படிமுறை 7.2.1.3 :
- எழுமாற்றாக மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்கள் நிரப்பிய அட்டவணையில் அடங்கும் தகவல்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஒட்டுமொத்த செயற்பாட்டை மீளாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- பெண் உருவங்களை உள்ளடக்கி சிறப்பு வாய்ந்த பாரம்பரிய அலங்காரங்களை நிர்மாணித்தல்.
- பெண் உருவங்களை உள்ளடக்கி சிறப்பு வாய்ந்த பாரம்பரிய அலங்கார வடிவங்கள் வேறு ஏதேனும் வடிவத்துக்கு ஒத்ததாக அமைக்கப்பட்டிருப்பதை இனங்காணுதல்.
- அவ்வாறான நிர்மாணிப்புகள் காணக்கூடிய இடங்கள் அவற்றின் வகைகள் என்பவற்றை விளக்குதல்.
- அந்த நிர்மாணிப்புகளின் கலைத்துவப் பண்புகளை மதிப்பிடல்.

**இணைப்பு 7.2.1.1**

## செயற்பாட்டுப் படிவம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிழற்படங்களை நன்றாக அவதானிக்குக.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தை நன்றாக வாசிக்குக.
- வாசிப்புப்படிவத்தின் துணையுடன் அட்டவணையை நிரப்புக.

| அலங்கார வேலைப்பாடு | நிரூபணமாகும் வடிவம் | ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பெண் உருவங்களின் எண்ணிக்கை | காணப்படும் இடங்கள் |
|---|---|---|---|
| | | | |

- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுக.

**இணைப்பு 7.2.1.2**

## வாசிப்புப் படிவம்

### அறிமுகம்


- பெண் உருவங்கள் அடங்கிய சிறப்பு வாய்ந்த பாரம்பரிய அலங்கார வடிவங்கள் பற்றிய தகவல்கள் மீது அவதானம் செலுத்தப்படுகின்றன.
- மிருகமொன்றின் இயல்பான தன்மை, பொருளொன்றின் இயல்பான வடிவம் என்பன பெண் உருவங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.
- இவை பாரம்பரிய சுவரோவியம், செதுக்கல்களில் காணப்படுகின்றன.

### சதுர்நாரிப் பல்லாக்கு



- நான்கு பெண் உருவங்களை பல்லக்கின் வடிவமாக ஒருங்கிணைத்து செய்யப்பட்ட நிர்மாணிப்பு சதுர்நாரி பல்லக்காகும்.
- தலதா மாளிகையின் மேல் மாடி உட்கூரையின் வலப்பக்கத்து செவ்வக வடிவ நிரலொன்றில் சதுர்நாரி பல்லக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இரு பெண் உருவங்கள் கால்களை பிணைத்து கைகளை நீட்டியிருக்கும் விதத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. பல்லக்கின் உள்ளே அதில் பயணிக்கும் தாமரை மலரை ஏந்திய தெய்வமொன்று அல்லது போதி சத்துவரைக் காணக்கூடியதாக உள்ளது.

### பஞ்சநாரி கலசம்



- ஐந்து பெண் உருவங்கள் குடத்தின் வடிவில் ஒருங்கிணைக்கப்பட்டள்ளன.
- பாரம்பரியக் கலைக் கைத்தொழில்களில் இவ்வடிவத்தை அதிகம் காணலாம். அத்துடன் யானைத்தந்த செதுக்கல்களிலும் இவ்வலங்கார வேலைப்பாட்டைக் காணலாம்.
- பஞ்சநாரி கலசம் செழிப்பை அடையாளப்படுத்துவதாக இருந்திருக்கலாமென பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர கருத்துத் தெரிவித்தள்ளார்.
- ரிதீ விகாரையின் கதவில் பொருத்தப்பட்டிருந்த யானைத்தந்தத்தில் செதுக்கப்பட்டிருந்த பஞ்சநாரி கலசம், உயர்வான வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- பழைமைவாய்ந்த மற்றும் சில விகாரைகளிலும் பஞ்சநாரி கலசம் ஓவியமாகவும் செதுக்கல் வடிவிலும் உள்ளது.

**சப்தநாரி பல்லக்கு**




- ஏழு பெண் உருவங்கள் பல்லக்கு வடிவில் ஒருங்கிணைந்து இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- தலதா மாளிகையின் வெளி மாடத்தில் இவ்வோவியத்தைக் காணலாம்.

**சப்தநாரி இரதம்**



- ஏழு பெண் உருவங்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட இரதம் சப்தநாரி இரதம் எனப்படுகிறது.
- தலதா மாளிகையின் வெளிப்புற மாடத்தில் இவ்வோவியம் ஒன்றைக் காணலாம்.
- பெண்கள் இருவர் பின்புறமாக வளைந்து இரு பாதங்களையும் தொடும் விதத்தில் சில்லுகள் போன்று தோற்றமளிக்கின்றன.
- இரத்தத்தின் உச்சியில் கிரீடத்துடன் பெண் ஒருவர் சீன மலர் இரண்டினை நீட்டப்பட்ட கைகளில் ஏந்தியிருக்கும் விதம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இரதத்தின் மத்தியில் பத்தினி தெய்வம் காணப்படுகிறார்.
- கண்டி தலதா மாளிகையின் ஓவியங்களுள் சப்தநாரி இரதம் காணப்படுகிறது.

### நவநாரி குஞ்சரம்



- நவநாரி குஞ்சரம் கண்டிக் காலத்து ஓவியங்களிலும் செதுக்கல்களிலும் காணக்கூடியதாக உள்ளது.
- ஒன்பது பெண் உருவங்களைக் கொண்டு தந்தமுள்ள யானையின் தோற்றத்தை வெளிப்படுத்துகின்ற அமைப்பு நவநாரி குஞ்சரம் எனப்படும்.
- கண்டி தலதா மாளிகையின் வெளிப்புற மாட உட்கூரையில் குஞ்சரத்தின் ஓவியத்தைக் காணலாம்.

### நாரிலதா மலர்

- பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகளில் நாரிலதா மலரை கொடிவலையாகக் காணலாம்.
- அழகிய நாரிலதாவின் தேகத்தின் இடுப்புக்கு மேற்பட்ட பகுதி மலர்ந்த மலரொன்றாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- வனவாசம் புரியும் முனிவர்களின் தியானம் கூட கலையக்கூடிய காந்த சக்தி உடையதாக இம்மலர் காணப்படுகின்றது.
- நாரிலதா மலரின் பெண் உருவம் விசித்திரமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
- பழைமையான விகாரை ஆலயங்களில் நாரிலதா மலருடனான பல ஓவியங்களைக் காணலாம்.
- எம்பக்க தேவாலயத்தின் மரச் செதுக்கல்களில் நாரிலதா மலரின் செதுக்கலைக் காணலாம்.
- தலதா மாளிகையில் வரையப்பட்டுள்ள நாரிலதா மலர்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை சிறப்பானது.





நாரிலதா மலர்

**தேர்ச்சி 7.0 :** **வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளிநாட்டு சித்திரம், சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங் களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத் திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.2 :** தேசிய (உண்ணாட்டு) பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகள் பற்றி அறிவார்.

**செயற்பாடு 7.2.2:** ''விலங்குருவங்களாலான சிறப்புவாய்ந்த பாரம்பரிய அலங்கார நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- விலங்குருவங்களாலான சிறப்பு வாய்ந்த பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகளை குறிப்பிடுவார்.
- அவற்றில் உள்ள கலைத்துவப் பண்புகளை மதிப்பிடுவார்.
- அந்நிர்மாணிப்புகளின் சிறப்பியல்புகளை விளக்குவார்.
- அந்நிர்மாணிப்புகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 7.2.1.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவம்
- இணைப்பு 7.2.1.2 இற்குரிய வாசிப்புப் படிவம்
- டிமைத்தாள்கள், கலர் பேனைகள், கேத்திரகணித உபகரணங்கள், பென்சில்கள்

**செயற்பாட்டை ஒழுங்கமைப்பதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.2.2.1 :**
- ரிஷப குஞ்சரம், கிஹிம்பி முகம், மகர உருவம், யாழி உருவங் களை காட்சிப்படுத்துதல்.
- இதற்கு முன் இவ்வாறான நிர்மாணிப்புகளை பார்வையிட்ட இடங்கள் பற்றி வினவுதல்.
- மாணவர்களை குழுக்களாக்குதல்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.2.2 :**
- இணைப்பு 7.2.2.1 இற்கான செயற்பாட்டுப் படிவத்தை மாணவர் களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.2.2.2 இற்குரிய வாசிப்புப்படிவத்தை மாணவர்களை வாசிக்கச் செய்க.
- வினாக்கள் எழுதப்பட்ட டிமைத்தாள்களை வகுப்பில் காட்சிப் படுத்துக.
- வாசிப்புப் படிவத்தின் துணையுடன் வினாக்களுக்கு விடையளிக்குக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.2.3** : • மாணவர்கள் அளித்த விடைகளை மதிப்பீடு செய்க.
• ஒட்டுமொத்த செயற்பாட்டை மீளாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டில் ஈடுபடுக.

- விலங்குருவங்களாலான சிறப்பு வாய்ந்த பாரம்பரிய அலங்காரங்களை குறிப்பிடுதல்.
- அவற்றின் கலைத்துவப் பண்புகளை மதிப்பிடுதல்.
- அந்நிர்மாணிப்புகளின் சிறப்பியல்புகளை விளக்குதல்.
- அந்த நிர்மாணிப்புகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுதல்.
- அந்நிர்மாணிப்புகளின் ஊடாக பழமை வாய்ந்த ஓவியக் கலைஞனின் உருவ ஒருங்கிணைப்பை கற்றறிதல்.

**இணைப்பு 7.2.2.1**

## செயற்பாட்டுப் படிவம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள படங்களை நன்றாக அவதானிக்குக.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப்படிவத்தை நன்றாக வாசிக்குக.
- அவற்றின் துணையுடன் பின்வரும் விடயங்களை ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு விலங்குருக்கள் பற்றிய விளக்கத்தை எழுதுக.
  - வெளிப்படுத்தும் விலங்கு அலங்காரத்துக்காக உபயோகப்படுத்திய விலங்குருக்கள்.
  - அவ்வடிவங்கள் ஒன்று சேர்ந்துள்ள விதம்
  - இவை உபயோகப்படுத்தும் இடங்கள், சந்தர்ப்பங்கள்
- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுக.

**இணைப்பு 7.2.2.2**

## வாசிப்புப் படிவம்

### அறிமுகம்

ரிஷப குஞ்சரம், கிஹிம்பி முகம், மகர உருவம், யாழி உருவங்களின் சிறப்புவாய்ந்த பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகள் மீது அவதானம் செலுத்தப்பட்டு, இக்கட்டுரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

- இவ்வலங்கார வடிவங்கள் விலங்குருவங்களாலேயே அதிகளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- பழைமையான சுவரோவியங்களில் செதுக்கல்களில் இந்நிர்மாணிப்புகளைக் காணலாம்.
- தென் இந்திய தேவாலயங்களில் காணப்படும் யாழி உருவம் இலங்கையில் காணப்படும் மகர உருவத்துக்கு ஒத்த தன்மையைக் கொண்டிருக்கின்றன.
- கலைஞரின் ஒழுங்கிணைப்புத் திறன் வெளிப்படுத்துவதாக இந்நிர்மாணிப்புகள் அமைந்துள்ளன.

### ரிஷப குஞ்சரம்




- எதிரெதிரே நோக்கியிருக்கும் விதத்தில் யானையினதும் மாட்டினதும் தலைகள் ஒருங்கிணைந்து ரிஷப குஞ்சரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- மாட்டின் கொம்புகள் யானையின் தந்தங்களாக இடப்பட்டுள்ளன. யானையின் தும்பிக்கை மாட்டின் திமிலாக அமைந்துள்ளது. இரு விலங்குகளுக்கும் பொதுவாக இரு கண்கள் மட்டுமே உள்ளன.
- இந் நிர்மாணிப்பு அக்கால கலைஞனின் திறமையை நன்கு வெளிப்படுத்துவதாக உள்ளது.
- குருணாகல் ரிதீவிகாரை, கண்டி தலதா மாளிகை, எம்பக்கே தேவாலயம் போன்ற இடங்களில் ஓவியமும் செதுக்கல்களும் காணப்படுகின்றன.
- தோவ ரஜமகா விகாரையிலுள்ள ரிஷப குஞ்சரம் கடுமையாகப் போர் புரியும் யானையையும், எருதுகளையும் குறிக்கிறது.

### கிஹிம்பி முகம்




- கீர்த்திமுக, கிஹிம்பி முகம் எனும் பெயர்களைக் கொண்டது.
- மகர தோரணத்தின் இரு புறத்திலும் அமைந்திருக்கும் மகர உருவங்கள் இரண்டுக்கும் மத்தியில் இவ் கிஹிம்பி முகம் அமைந்துள்ளது.
- கிஹிம்பி முகத்தின் வாய் அகன்றது. சிவப்பு நிற உதடுகளைக் கொண்டுள்ளது.
- தந்தங்கள் இருபுறத்தில் காணப்படுவதுடன் அவை சுருண்டவடிவில் அமைந்த அலங்கார கொடிவலை நிர்மாணிப்பாகும். பெரிய விழிகள் கீழ்நோக்கி பெரியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- கிஹிம்பி முகத்தைப் பற்றிய முரண்பாடான கருத்துகள் பல நிலவுகின்றன.

**மகர உருவம்**



- யானையின் தும்பிக்கை, சிங்கத்தின் பாதம், முதலையின் பற்கள், குரங்கின் கண்கள், பன்றியின் காதுகள், மீனின் உடல், குருளாவின் இறகுகள் மகரத்தைக் குறித்து நிற்கின்றன.
- யானையின் தும்பிக்கை, சிங்கத்தின் முன்னங்கால்கள், முதலையின் பற்கள், குருளாவின் இறகுகள், பன்றியின் காதுகள், குரங்கின் கூரிய பார்வையுடைய கண்கள் என்பன ஏழு விலங்குகளினதும் கூட்டுபலத்தை எடுத்துக் காட்டுகிறது.
- மகர எண்ணக்கருவானது கிரேக்கம், சீனா, பாரதம் எனும் நாகரங்களில் பிரபல்யம் அடைந்துள்ளது.
- கைப்பிடிச் செதுக்கல்களிலும் மகர தோரணங்களிலும் உள்ள மகர தோரணங்களில் மகர உருவத்தை அதிகம் காணலாம்.



கிஹிம்ப முகமும் மகர உருவமும் கொண்ட தோரணம்

**யாழி உருவம்**





- யாழி என்பது புராணக் கதைகளில் கூறப்பட்ட ஒரு கற்பனை வடிவமாகும்.
- அனேகமான இந்துக் கோயில்களில் இதனைக் காணலாம்.
- ஆலயத்தின் உட்புறத்தூண்களுடன் இணைந்ததாக இவ்வடிவம் அமைக்கப்பட்டிருக்கும்.
- யாழி உருவை நிர்மாணிக்க யானை, சிங்கம், குதிரை போன்ற விலங்குகளின் பாகங்களை உபயோகித்தனர்.
- இருவிலங்குகளை அல்லது மூன்று விலங்குகளை ஒன்று சேர்த்து கற்பனை உருவான யாழியை வடிவமைத்துள்ளனர்.
- கோயில் பாதுகாப்பின் பொருட்டு இவ்வடிவம் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இவ்வடிவத்தில் அடங்கியுள்ள விலங்கு வடிவங்கள் பலம், பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதாகவே உள்ளன.
- கோயில் நிர்மாணிப்புக்களில் ஒன்றான மஞ்சத்தில் அழகிய யாழி உருவங்களைக் காணலாம்.
- இது ஒரு பழமையான நிர்மாணிப்பாக இருப்பினும் கலைசார் நிர்மாணிப்பாக தென்னிந்தியச் சிற்ப கலைவடிவங்களிலேயே அதிகளவில் பயன்படுத்தியுள்ளனர்.

**தரம் 11 இற்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் திருத்தங்கள்**

| பக்கம் | தவறானது | சரியானது |
|---|---|---|
| 95 | ‘மடிப்பின்றியது’ | ‘மடிப்பின்றியது’ எனும் வசனத்தை நீக்குக. |
| 117 | - | ‘தற்போது பொலநறுவை நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது’ |
| 118 | அநுராதபுரம் (4ம் வரிசை) | பொலநறுவை |